311

"The Bharati." Reg. No. M. 2911.

பவ—ஐப்பசிமீ
1934 அக்டோபர்—நவம்பர்.

பாரதி

மாலை 6. மணி 7.

ஓர் செந்தமிழ் மாதப் பத்திரிகை.

ரா. நாராயணஸ்வாமி,
ஆசிரியர்.

ரா. சுப்ரமண்யம்,
பொறுப்பாசிரியர்.

பிரசுராலயம்:-
உத்தமபாளையம்,
மதுரை ஜில்லா.

2311, N29BH
N34.6.7
197903

சுப்ரமண்ய பாரதியார்

அல்லது

தமிழ் நாட்டின் தேசிய கவி.

(ஓர் அரிய ஆராய்ச்சி நூல்.)

கவிச் சக்ரவர்த்தி பாரதியாரின் வாழ்க்கை வரலாறு, கவிதா விலாசம், தேசாவேசம், இயற்கை ரசனை இவைகளை யறிய இதைவிட வேறு சந்தர்ப்பம் வாய்க்கப் போகிறதா?

கிரௌன் ⅛ சைஸ் கிளேஸ் பதிப்பு.

240 பக்கங் கொண்ட புத்தகம் 1-க்கு விலை ரூ *1*.

தபாற் செலவு வேறு.

பாரதிப் புத்தகாலயம், உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

"பாரதி"

ஓர் மாதப் பத்திரிகை.

வருட சந்தா:

உள்நாடு ரூ 2-0-0 or 3 ஷிலிங். வெளிநாடு ரூ. 3-0-0 or 5 ஷிலிங்.

ஜீவிய சந்தா ரூ. 50.

போஷக சந்தா ரூ 100 முதல்.

"பாரதி" பைண்ட் வால்யம்.

நேர்த்தியான காலிகோ- கில்ட் பிரிண்ட்.

2-ம்	வருட வால்யம்	1-க்கு விலை	ரூ. 2...8...0
3-ம்	,,	,,	ரூ. 2...8...0
4-ம்	,,	,,	ரூ. 2...8...0
5-ம்,,		,,	ரூ. 2...8...0

"பாரதி" சந்தாதாரர்களுக்குத் தபாற் செலவு இறும்.

மானேஜர், "பாரதி" ஆலயம்,

உத்தமபாளையம், மதுரை ஜில்லா, S. இந்தியா.

"பாரதி"யின் விளம்பர விகிதம்.

சாதாரண	பக்கம்	1-க்கு	மாதம் 1-க்கு ரூ	10—0—0
,,	,,	½-க்கு	,,	5—8—0
,,	,,	¼-க்கு	,,	3—0—0
கவர்	,,	2 & 3	,,	15—0—0
,,	,,	4	,,	20—0—0

விளம்பரத்திற்கு எப்பொழுதும் முன்பணம் அனுப்பவேண்டும். நீண்டகால விளம்பரத்திற்கு, மானேஜருக்கு எழுதவும்.

இங்கே கிடைக்கும் நூற்கள்.

நமது சொந்தப் பிரசுரங்கள்:—

1.	சோவியத் ருஷியா	1—4—0
2.	துர்க்கா தாஸ் (உயர்ந்த நாடகம்) ...	1—4—0
3.	சுப்ரமண்ய பாரதியார் ...	1—0—0
4.	ஜான்ஸி மஹாராணி ...	0—2—0
5.	போலந்து நாட்டின் சுதந்திரம் ...	0—1—0

பிற பிரசுரங்கள்:—

6.	நெப்போலியன் ...	0—4—0
7.	பனத சங்கரி (நாவல்) ...	1—0—0
8.	மூத்தண்ணா ,, ...	1-12—0
9.	அபிமன்யு (நாடகம்) ...	0—8—0
10.	அற நூல் ...	0—3—0
11.	இராமகிருஷ்ணாமிர்தம் ...	0—6—0
12.	புதுயுகப் பாட்டு ...	0—5—0
13.	ஸ்ரீ அரவிந்த யோக விளக்கம் ...	0—4—0
14.	ஸ்ரீ அரவிந்தப் பிரகாசம் ...	0-12—0
15.	ஜோதை காட்டும் பாதை ...	0-10—0

தபாற் செலவு பிரத்தியேகம்.

மானேஜர், "பாரதி" ஆபீஸ்,

உத்தமபாளையம், மதுரை ஜில்லா. S. I.

அபிமன்யு

திரு. V. சாமிநாத சர்மா எழுதிய

ஓர் சிறந்த சரித்திர நாடகம்.

சமீபத்திலேயே வெளிவந்ததாகும்.

பழைமையிலே புதுமையைப் புகுத்தி, வாலிபர்களின் உற்சாகத்தை வளர்க்கத் தக்க—கடமையை யுணர்த்தத் தக்க அருமையான நாடக நூல்.

விலை 0—8—0. தபாற் செலவு வேறு.

மானேஜர், "பாரதி" ஆபீஸ்,

உத்தமபாளையம், மதுரை ஜில்லா, S. I.



197903

சிறந்த செந்தமிழ் மாலிகை.

பொருள் அடக்கம்.

மாலை 6. பவஞூ ஐப்பசிமீ மணி 7.

தொடர் எண். பக்கம்.

1. ஓர் வேண்டுகோள்— திரு. செ. ரா. சோமசுந்தரம் அவர்கள் ... 401
2. தீண்டாமைப் பேய்—திரு. ஐயம் பிள்ளை அவர்கள் ... 403
3. தமிழ் வளர்ச்சி—திரு. ஆ அருள் தங்கையா அவர்கள் 405
4. காதல் மணக் கண்ணிகள்— பண்டித ஜனப் K. அப்துல் சுகூர் அவர்கள் ... 406
5. மக்கட் பேணல்— திரு. வி. சுடலைமுத்துப் பிள்ளை அவர்கள் ... 407
6. அறிஞர் வாஸ்வானியின் பொன்னுரை—ஆசிரியர், 'பாரதி' 410
7. கதை ஆசிரியன் காதல்—திரு. S V. வெங்கடநாராயண சர்மா அவர்கள், B. A., B. L. ... 412
8. சென்னைக் கடிதம்—(மு. வேலி) 437
9. அறிவும் தொழிலும்—திரு. சாமி சிதம்பரனர் அவர்கள் 438
10. ஸ்வாமி விவேகானந்தரின் கடிதங்கள்— திரு. K. வெங்கடராவ் அவர்கள் ... 445
11. பிரிவு—திரு. ச. து. சுப்ரமண்ய யோகியா ரவர்கள் ... 448
12. தங்கக் கம்பி—"சர்தார்" 449
13. ஹரி ஜனங்களின் பொருளாதார நிலைமை— திரு. ரா. ஸ்ரீ. ஸ்ரீகண்டன் அவர்ச்ள், M. A. ... 454
14. மனிதர் கடமை—(மாஜினி) 459
15. பகிராம்ஜீ மலபாரி—திரு. ச. முனிஸ்வாமி பிள்ளை அவர்கள் 463
16. தருமஞ் செய்தல்—திரு. என் வேங்கடரமணன் அவர்கள் 468
17. ஆராய்ச்சி மேடை— 471
18. ஆசிரியக் குறிப்புகள்— 473

பாரதி

ஓர் செந்தமிழ் மாதப் பத்திரிகை.

எல்லாரும் ஓர் குலம், எல்லாரும் ஓர் இனம்,
எல்லாரும் இந்தியா மக்கள்;
எல்லாரும் ஓர் நிறை, எல்லாரும் ஓர் விலை,
எல்லாரும் இந்நாட்டு மன்னர்.

ரா. நாராயணஸ்வாமி, ஆசிரியர்.
ர ா. சு ப் ர ம ண் ய ம், பொறுப்பாசிரியர்.

மாலை 6	பவ-ஐப்பசி 1934 அக்டோபர்-நவம்பர்மீ	மணி 7

* ஓர் வேண்டுகோள்.

திரு. செ. ரா. சோமசுந்தரம் அவர்கள்.

பல்லோரும் புகழ்ந்திடவே பாரதியாம் சஞ்சிகையைப் பாலை யத்தில்
வல்லோரும் புகழ்நாரா யணசாமி யெனும்வீரன் எய்தி நன்கு
கல்லாரும் படித்தவுடன் கசிந்துருகப் பதிப்பித்தான் கடவு ளென்றும்
நல்லோரைச் சோதிப்பா னதுபோன்ற இவர்செய்தி நவிலக் கேண்மோ!

* இந் நாலிரு பாக்களை அன்பர், தம் நண்பராஞேர்க்கு அச்சிட்டனுப்பி, அவர்களைப் 'பாரதி'யின் நலங் கோரி, நலம் பெறுமாறு தூண்ட விடுத்த தாகும். இப் பிரதியி லொன்று நமக்கும் அனுப்பப் பெற்றது. இது கண்டு பேருவகை கொண்டோம். 'பாரதி'யின் பரிபவத்தை யுணர்ந்து, அதன் பால் காதல் மிகக் கொண்டு, தம்மாலும் தம் நண்பர்களாலும் உதவப் பெரு முயற்சி யெடுத்துள இத் தீந்தமிழ் நண்பருக்கு எமது வந்தனங்கள். இவர் தம் போக்கையும் விருப்பத்தையும் நிறைவேற்ற, அவர்தம் நண்பர்கள்மட்டுமே யன்றி ஏனைய பிறரும் தமது அரிய உதவியைப் 'பாரதி'க்குத் தந்து, சிரமத் தைப் போக்க மிகுதியும் முயல வேண்டிக்கொள்கின்றோம்.

—ஆசிரியர்,

தான்கொண்ட நம்தேயப் பத்திமையும் பாஷைகளில் தலைசி றந்து
வான்கொண்ட பெரும்புகழ்சேர் தமிழ்த்தாய்பா லிவரின்று வைத்த காதல்
தேன்கொண்ட நரிபோன்று தொண்டிரண்டும் 'பாரதி'யாற் செய்யத் தூண்ட
என்கொண்டோ மெனஎண்ணு திடையூறு பலபெற்று மெதிர்த்து நின்றார்.

தன்னருமைச் சஞ்சிகைக்குத் தமிழ்நாட்டில் பிறந்துதமிழ் கற்றோ ரெல்லாம்
உன்னடிமை யெனரூபாய் ஓரிரண்டு வருடமொன்றிற் குதவ லற்றும்
நின்னடிமை நானென்று தாய்நாடு பாஷையிவை நினைந்தே தொண்டு
முன்னடிமை யெனநின்றார் படாதபெருந் துயர்பெற்றும் முனைந்து செய்தார்.

இத்தகைய சஞ்சிகையைத் தென்னாட்டி லிருந்துதமிழ் தெரிந்தோ ரெல்லாம்
ஒத்துழைத்துத் தென்னாட்டு மனையெல்லாம் பரப்புதற்கே யுதவி யிந்தப்
பத்திரிகை தனைநிலைக்கச் செய்வதுதம் கடமையிதைப் பரிந்து செய்து
எத்திசையும் புகழ்படைப்பீ ரிதையுடனே எனக்காக வின்றே செய்வீர்!

தாழ்ந்தவர்கள் தமையுயர்த்திச் சமத்துவமும் சோதரத் துவமுங் காட்டி
ஆழ்ந்தபெருங் கருத்துடையார் பலரெழுது கோல்முனையில் அரிதாய்
நாட்டோர்
வாழ்ந்திடவே வந்துபல கட்டுரைகள் 'பாரதி'யில் வருங்காண்; காலம்
தாழ்ந்திடுத லில்லாது நம்முதவி தந்திதனை நிலைக்கச் செய்வீர்!

தன்னலத்தைக் கருதாது நாரணசா மிப்பெரியார் தாமே நின்று
பன்னலமு மிதற்களித்துப் பொருள்காணு தேங்குகின்ற பரிசு நீங்கப்
பொன்னலந்தா னுடையவர்பாற் சொல்லியிவர் துயருடனே போக்கு வீரேல்
எந்நலமும் நீர்பெற்றே யெதிரில்லாப் பெருவாழ்வு மெய்தி வாழ்வீர்!

நல்லதனம் படைத்தவரைப் 'பாரதி'யின் போஷகராய் நலக்கச் சேர்த்தும்,
அல்லவென நடுவுள்ளார் தமைஆயுள் சந்தாதா ராக்கி, ஏதும்
இல்லையெனச் சொல்பவரும் சந்தாதா ரெனச்செய்தே இன்றே உங்கள்
சொல்லதினால் தாய்பாஷை தனக்கரிய தொண்டியற்றத் தூண்டா நின்றேன்.

கண்டவுடன் இதைநுமது கருத்தமைத்துத் தமிழ்த்தாயைக் கருதி யிந்தத்
தொண்டியற்றிப் 'பாரதி'யைத் தமிழ்நாட்டில் துலங்கிடவே செய்து நீவிர்
பண்டிருந்த பயன்பெறுவீர்; என்னிடத்திற் பன்னாட்கள் கொண்ட அன்பு
வண்டிருந்து குடைவதேன இதுசெய்யத் தூண்டஇதை வரைய
லுற்றேன்.

தீண்டாமைப் பேய்.

திரு ஐயம்பிள்ளை அவர்கள்.

ஆனந்தக் களிப்பு.

தீண்டாமைப் பேயறிவீரோ? அதன்
சேட்டைகள் முற்றுந் தெரிந்திடுவீரோ? (தீண்)

1. பண்டுபண்டே யுள்ளபேயாம்—இந்தப்
பாரத நாட்டைப் பாழாக்கிய பேயாம்
சண்டைகள் மூட்டிடும் பேயாம்—அது
சாஸ்திரிமார் பூசை கொண்டிடும் பேயாம். (தீண்)

2. பட்டப்பகல் வரும் பேயாம்—ஒரு
பக்கமே பார்க்கப் பழகிய பேயாம்
முட்டிக் குனிந்திடும் பேயாம்—அது
முன்னேற்றம் கண்டு முடமாகும் பேயாம். (தீண்)

3. கண்ணிலே காணும்பேய் ஐயா—இரு
காலும் நிலத்தில் பதியும்பேய் ஐயா
நிர்ணய மில்லாப்பேய் ஐயா—நடு
நீதிநெறி காணு நீசப்பேய் ஐயா. (தீண்)

4. கோவிலின் வாசற் படியில்—நிதம்
கும்மாளி கொட்டிக் குதித்தாடி நிற்கும்
வாவிக் கரையிலும் நிற்கும்—அங்கு
வந்த மனிதரை ஓட்டித் துரத்தும். (தீண்)

5. பிள்ளைமார் வீட்டிலும் நிற்கும்—உயர்
பிராமணர் வீதியி லெங்குமே சுற்றித்
துள்ளி விளையாடி நிற்கும்—அவர்
சோமன் புடவைகள் சுற்றிக் கிடக்கும். (தீண்)

6. மண்கலத் துள்ளே யிருக்கும்—அதில்
வைத்த பண்டத்தில் மறைந்து மிருக்கும்
வெண்கலம் வெள்ளிபொன் கண்டால்—உடன்
வெட்க மடைந்து வெளியேறிப் போகும். (தீண்)

7. வேதக் கடலைக் கலக்கும்—அதில்
வேண்டும் விதிவலை வீசிப் பிடிக்கும்
ஜாதிப் பிளவை யுண்டாக்கும்—எங்கும்
சண்டாளர், சண்டாளர் என்றே முழங்கும். (தீண்)

8. வஞ்சர் பொருமைக ளெல்லாம்—அதை
வட்டமாய்ச் சுற்றி வரும் பரிவாரம்
நெஞ்சம் நடுங்குதே ஐயா—அதன்
நிஷ்டூரம் சொல்லி முடியாதே ஐயா. (தீண்)

9. கூடி யிருக்க வொட்டாது—நண்பர்
கொண்டு தருவதை உண்ண வொட்டாது
தேடி வருவோரை அன்பாய்—வீட்டுத்
திண்ணையில் உட்கார வைக்க வொட்டாது. (தீண்)

10. தாகித்து வந்தவ ருக்குச்—செம்பில்
தண்ணீ ரளித்திடச் சம்மதி யாது
சோகித்து வீழ்வோரைக் கண்டால்—தலை
தூக்கி வியர்வை துடைக்க வொட்டாது. (தீண்)

11. *கண்ணுதல் ஆலயம் சென்றால்—அங்கு
கையிற் பிரசாதம் போட வொட்டாது
எண்ணி வரையளந் திட்டே—அதற்
கிப்புறம் அப்புறம் நில்லென் றதட்டும். (தீண்)

12. கப்பலில் ஏறிட அஞ்சும்—சில
காப்பிக்கடை எட்டிப் பார்க்கவும் நாணும்
செப்பும் புகைவண்டி யுள்ளே—அது
சீற்ற மடங்கி ஒடுங்கிக் கிடக்கும். (தீண்)

13. கண்ணான காந்தி மகானும்—இதைக்
கண்டு நடுங்கிக் கடவுளை வேண்டி
உண்ணு திருந்தன ரென்றால்—இதன்
ஊக்கம் சிறிது முரைத்திடப் போமோ? (தீண்)

14. முன்னம் பெரியோ ரிதனை—வெட்டி
மூடிப் புதைத்து முயிர்வலி கொண்டு
பின்னும் புனைத்ததே ஐயா—இது
பேய்களும் அஞ்சும் பெரிய பேய் ஐயா. (தீண்)

* மலையாளத்திலுள்ள ஆலயங்களில் இன்றும் காணப்படும் வழக்கம்.

15. பொல்லாத பேயிதை நம்பி—இன்னும்
பொங்கலிட் டாடுதல் புத்தியோ ஐயா
நல்லாக வேண்டுமே யானால்—இதை
நாட்டைவிட் டோட்டித் துரத்துவோ மையா. (தீண்)

16. இப்பெரும் பேயினி மேலும்—நம
திந்திய நாட்டி லிருந்திட லாமோ?
கப்பலி லேற்றுவோ மையா—நடுக்
*காயல் கடல்கண்டு தள்ளுவோ மையா. (தீண்)

தமிழ் வளர்ச்சி.

திரு. ஆ. அருள் தங்கையா அவர்கள்.

அமிழ்தினு மினிய தமிழ்மொழி வழங்குந்
தமிழ்நாட் டாரே! தமிழ்நாட் டாரே!
மொழிநலங் குன்றின் அழிவுறும் நலமெலாம்
வழிபல வகுத்து மொழிதனைக் காமின்!
நாட்டு மொழிநிலை நாட்டல் வேண்டும்;
நாட்டுச் சிறப்பைக் காட்டுமே தாய்மொழி;
என்றுங் கன்னியாய்க் குன்றலில் சீரொடு
அன்றே போல இன்றும் நிலவும்
சொல்லில் இனிய சொல்லாந் தமிழை
எல்லாத் துறையிலும் இயங்கச் செய்மின்!
தொல்காப் பியனின் சோர்விற் சொல்லும்
ஒல்காப் புகழ்பெறு ஒழுக்கநூற் பாப்பும்
எம்மதத் தாரும் ஏற்றுப் போற்றும்
செம்மொழி மல்கும் சிறப்புறு குறளும்
இளங்கோ நூலும் இறையனார் பொருளும்
வளங்கொள் சாத்தன் மணிமே கலையும்
கம்பன் தந்த கவினுறு நூலும்
அம்புவி தனிலே அழிவுறல் நன்றோ?
உலகில் தோன்றிய உயரிய மொழிகளும்
சிலநாள் வாழ்ந்து செத்தொழிந் தனபோல்
இம்மொழி இதுவரை இறந்தொழி யாமல்

* காயல் = ஏரி = Lake.

செம்மொழி யாகச் சிறந்தொளிர் நிலையால்
தோற்றமும் ஒடுக்கமுந் தொலைவு மில்லா
ஏற்ற முடைய இறைவனை யொக்குமால்!
இறைவனை யொத்ததாம் இம்மொழி இன்று
மறைவுறும் நிலையை மனத்தினி லோர்ந்து
செய்வகை யாய்ந்து செய்தற் கெழுமின்!
செய்வன இன்றே செய்மின்! செய்மின்!!
எங்குந் தமிழ்ஒலி யென்றுங் கேட்க
அங்கங் கேகல் அனைவகண் டுழைமின்!
மற்ற நாட்டு பாண்புறு கலைகளை
நற்றமிழ் மொழியில் நன்கமைத் திடுக!
வீட்டிலும் வெளியிலும் காட்டிலும் தெருவிலும்
நாட்டில் எங்கும் நந்தமிழ் பேசுமின்!
தமிழெனில் பாடுமின்! தமிழெனில் ஆடுமின்!
தமிழெனில் கூடுமின்! தமிழையே நாடுமின்!
தமிழ்மொழி வாழ்க! தமிழரே எழுக!
அமிழ்தினு மினிய அந்தமிழ் வாழ்கவே!

காதல் மணக் கண்ணிகள்.

பண்டித ஜனாப் K அப்துல் சுகூர் அவர்கள்.

1. தண்ணார்ந்த சோலைத் தளிர்மா தவிச் சேக்கை
பண்ணார்ந்த காதலர்கள் பற்றுங்காதல் மணமே.

2. கண்ணிணைகள் ஒன்றையொன்று கவ்வியொருவர் மற்றோர்
உண்ணிறையு நெஞ்சமிசை யோங்குங் காதல்மணமே.

3. தடுப்பாரு மின்றித் தமையடுப்பா ராருமின்றிக்
கொடுப்பாரு மின்றிக் குலவுங்காதல் மணமே.

4. நத்துங்குல நலனும் நல்லுருவும் நற்றிருவும்
ஒத்தஅன்பின் காதலர்கள் ஊடுங்காதல் மணமே.

5. காதல் தலைசிறப்பக் காதலர்க ளின்பவெள்ள
மீதிற் றவழ்ந்தே மிளிருங்காதல் மணமே.

6. ஊடலால் வாடி யுதைபட்ட காதலனைக்
கூடிக் கலந்தவர்கள் கொண்டகாதல் மணமே.

7. பூநோக்குந் தான்பார்க்கும் போதிலவன் பாரானேல்
தானோக்கிப் புன்முறுவல் தந்திடுங்காதல் மணமே.

8. மாமடலே தஞ்சமெனும் மன்னவனைத் தான்விலக்கித்
தேமொழியார் சேர்த்தணைக்கச் செய்தகாதல் மணமே.

9. கண்டோட்டு மாமொழியார் கண்ணைமலரென்று சுற்றும்
வண்டோட்டிக் காதலர்கள் வாழ்த்துங்காதல் மணமே.

10. பீடுற்ற காதலன் பிரிந்ததினால் பூவில்வட்டக்
கோடுசுற்றிப் பார்த்திருக்குங் கோலக்காதல் மணமே.

11. காவார்ந்த சோலைக்கவின் குயில்காளன்பன் வரக்
கூவாயெனப் பேசிக் கூட்டுங்காதல் மணமே.

12. தண்மதியே யென்னைத் தகைதலழகல்ல வெனும்
பண்மொழியார் வெம்மை பரக்குங்காதல் மணமே.

13. காதலிலே நின்னைக் கலந்தவர்கள் கண்டசுகம்
ஏதென்பார்க்குள்ளே யிலங்குங்காதல் மணமே.

14. வாதையால் மாதர் வருந்தியுயிர் வீவதெல்லாங்
காதலிலா மற்கவிந்த காரணமோ மாமணமே.

15 கொண்ட மனைவி குணமறியாமற் கணவன்
கண்டபடி துன்புறுத்தல் காதலின்றியோ மணமே.

16. கூடுமனையாள் குணமறியாமற் கணவன்
காடுமலை சென்றலைதல் காதலின்றியோ மணமே.

17. காதலை வாழி கவின் "பாரதி" வாழி
மாதரார் காதல் மணம் மானிலமேல் வாழியரோ.

மக்கட் பேணல்.

திரு. வி. சுடலைமுத்துப் பிள்ளை அவர்கள்.

1. கண்ணின் மணிபோலே அணங்கே!
காத்திடும் பாலகரை
விண்ணின் மணிபோலே அணங்கே!
விளங்கிடச் செய்வாயடி!

2. நல்லோர் பழக்கத்தினால் அணங்கே!
நன்மை பெருகுமடீ!
அல்லோர் பழக்கமெலாம் அணங்கே!
ஆபத்தி லாக்குமடீ!

3. வித்தை பழகவேண்டும் அணங்கே!
விளையாட்டு வேண்டுமடீ!
சித்தந் தெளிந்திடுமே அணங்கே!
தேவகன் பாதமடி!

4. மனம்போன போக்கினிலே அணங்கே!
வாரற்ற *வாசிபோலே
தனையர் வளர்ந்திடிலோ அணங்கே!
சார்ந்திடுங் கேடடியோ!

5. தட்டி வளர்க்காவிட்டால் அணங்கே!
சண்டப்ர சண்டரடீ!
முட்டிக் குனியவேண்டாம் அணங்கே!
முன்னின்று காப்பாயடி!

6. 'சைப்டென் வளர்த்தவ'னென் றணங்கே!
கட்டுரை யுண்டடியோ!
வெம்பு பழியுன்மேல் அணங்கே!
வீழாமல் வாழடியோ!

7. ஆட்டுக் கிடைதனிலே அணங்கே!
ஆய னயர்ந்திருந்தால்
கூட்டுக் கிரண்டாட்டை அணங்கே!
குழூநரி கேட்டிடாதோ!

8. பச்சமும் வேணுமடீ! அணங்கே!
பயமும் இருக்கவேணும்
அச்சங் குடிக்கிலையேல் அணங்கே!
அரசங் கவிழுமடீ!

9. பெற்றோரை மக்களென்றும் அணங்கே!
பேணி வணங்கவேண்டும்
கற்றோரு மாவாரோ? அணங்கே!
கடவுளைப் போற்றிடாரேல்!

* வாசி—குதிரை.

10. ஏழை எளியவரை அணங்கே!
இகழ்வது மாகாதடி!
வாழு மவர்க்காக அணங்கே!
வாழ்ந்திடச் செய்வாயடீ!

11. ஏழைகள் பங்காளன் அணங்கே!
ஈசனே ஆமடியோ!
நாளுஞ் சிறுவர்க்கிதை அணங்கே!
நன்கு பயிற்றடியோ!

12. பார்த்தகச் சுத்தமுளோர் அணங்கே!
பறையரே யானாலும்
சேர்த்துப் பழகிடவே அணங்கே!
சிறுவரைக் கூறடியோ!

13. பாரினிற் செம்மையிலார் அணங்கே!
பார்ப்பன ரானாலும்
தூர விலகிலையேல் அணங்கே!
தொல்லைவந் தெய்துமடீ!

14. காலம் பழித்தோரெலாம் அணங்கே!
காசினி கைதோரடீ!
ஞாலத்தில் நாம்பழித்தல் அணங்கே!
நாடக மல்லவோடீ!

15. காலம் அறிந்திடுவாய் அணங்கே!
கட்டாய் வளர்ந்திடுவாய்
ஞாலத்திற் பெற்றோரை அணங்கே!
நல்ல ரெனும்படியே!

16. நாடு செழித்திடுமே! அணங்கே!
நன்மை வளர்ந்திடுமே!
வீடு நிறைந்தசெல்வம் அணங்கே!
வேறெதும் வேண்டுமோடீ!

அறிஞர் வாஸ்வானியின் பொன்னுரை.

மொழிபெயர்த்தவர்:

ரா. நாராயணசுவாமி, ஆசிரியர், "பாரதி."

அறிஞர் சாது வாஸ்வானி அவர்கள் ஓர் ஆங்கிலக் கல்லூரியில் தலைவரா யிருந்தவர். ஆங்கிலத்தில் அநேக அருமையான நூற்கள் எழுதியிருக்கிறார். அவரது ஆங்கில நடை அதிக இலகுவானது; உற்சாகம் கொடுக்கக்கூடியது. வாலிப இயக்கத்தை இந் நாட்டில் வளர்த்து வலுப்படுத்த அவர் பெரிதும் வேலைசெய்துகொண் டிருக்கிறார் பெரியார் வாஸ்வானி அவர்களை முக்கியமாக அகில இந்தியா நன்றாய் அறியும். இந்தியாவின் புராதன நாகரீகத்திற்கும், கலைகளுக்கும், தெய்வீக ஞானத்திற்கும் பிரத்தியட்சப் பிரமாணமாய் விளங்குபவர் அவரே. நமது புராதன மகரிஷிகள்போல சுத்த வாழ்வு வாழ்ந்து, இத் தேசத்தின் பண்டை உயரிய தத்துவங்களையும் உண்மைகளையும் இந்தியாவெங்கும் பரப்ப அபாரமாய் உழை உழையென்று உழைத்துக்கொண்டு வருகிறார். அவரது மனமோ அகன்றது. கொள்கையோ உயர்ந்தது. அந்நிய மதங்களின் உயர்வையும் புனிதத்தையும் வெகுவாகப் புகழ்ந்து கொண்டாடுபவர். சர்வ மத சமரசமும் சன்மார்க்கமும் உலகத்தில் வளர்ந்தோங்க வேண்டுமெனப் பாடுபடும் பெரியார்களில் வாஸ்வானியும் ஒருவரே. அவர் திருவாய் மலர்ந்தருளிய உபதேசங்கள் சிலவற்றை மொழிபெயர்த்து இதனடியில் வெளியிடுகிறோம்.

ஆசிரியர், "பாரதி."

ஆத்மா கோயில் கொண்டு வாழ்வதற்கே நமது உடம்பு படைக்கப்பட்டிருக்கிறது. சாந்தியே ஆரோக்கியம். ஆரோக்கியமே சாந்தி. ஆனால் வெகு சிலரே இந்த உன்னதமான சாந்த நிலையை அடைகின்றனர். உள்ளமும் உடலும் ஒன்றுபடவேண்டும். உள்ளத்தே இருக்கும் ஆத்மாவும் உடலும் ஒன்றுபடுவதே சரியான ஆரோக்கிய நிலையாகும். மேலைத் தேசங்களில் வெளி உடலின் தன்மைகளை நன்கு ஆராய்ந்து அறிந்திருக்கிறார்கள். ஐரோப்பியர் உடற்கூறு சாஸ்திரத்தில் மிகவும் தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள். நமது கிராமங்களையும் நகரங்களையும் சுத்தமாக வைத்துக்கொள்வதற்கு நாம் மேற்கு நாட்டாரிடமிருந்தே இப்பொழுது கற்றுக்கொள்ள வேண்டியதாக இருக்கிறது.

ஆனால் இதுவரை அவர்கள் ஆத்மாவைப்பற்றியும் மனிதரின் உள்ளக் கோயிலின் உன்னதத் தன்மையைப் பற்றியும் நன்கு ஆராய்ந்து அறிந்துணரவில்லை. ஆனால் பாரத தேவியின் மடிமீது விளையாடிய ஞானிகள் பலரும் இதை நன்கு சர்ச்சை செய்திருக்கிறார்கள். மனத்தையும் ஆத்மீக ஞானத்தையும் நமது தபோதனர்கள் வெகுவாகக் கவனித்துக் கற்றார்கள். ஆனால் வெளி உடலைப் போதுமானபடி அவர்கள் கவனிக்கவில்லை. ஆனால் காயம் காற்றடைத்த பை என்று தள்ளிவிடக் கூடுமோ? வெளி உடலுக்கும் ஆத்மாவுக்கும் நெருங்கிய சம்பந்தம் உண்டு. நமது எண்ணங்களும் ஆசைகளும், விருப்பு வெறுப்புக்களும் நமது சுகத்தைப் பாதிப்பதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். ஆத்மாவிற்கும் வெளி உடலுக்கும் ஒற்றுமை உண்டாக்கிச் சாந்தமாகிய ஆரோக்கியத்தை அடைவதற்குரிய சில அம்சங்களைக் குறிப்பிடுகின்றேன்.

இயற்கை அன்னை

மருந்துகளால் மட்டும் பயனில்லை. இயற்கை அன்னையின் செல்வங்களே உன்னத ஔஷதமாகும். இயற்கை மாதா அளிக்கும் ஆரோக்கிய கிரணங்களாலேயே தீராத வியாதிகள் பலவும் தீருகின்றன. மரங்களின் காற்று சுகத்தைத் தருகின்றது. தென்னை மரங்களால் என் உடலுக்கு நல்ல ஆரோக்கியம் உண்டாகிறது. தென்னை மரங்கள் சூழ்ந்த ஆச்சிரமத்திலேயே நான் வசிக்க விரும்புகிறேன். தோட்டங்களும் பூங்கா வனங்களும் நகரங்களுக்கு மட்டற்ற நன்மைகளைச் செய்கின்றன. உண்மையாகப் பேசுமிடத்து அவைகளே ஓர் நகரத்தின் ஹிருதயமாகும். சூரிய கிரணங்கள் ஆரோக்கியத்தை வளர்க்கும். ஜெர்மெனியிலும் மற்ற ஐரோப்பிய நாடுகளிலும் சூரிய கிரணங்களின் ஒளியிடை மூழ்கி அனுபவிக்க ஜனங்கள் அதிக ஆவல் கொண்டுள்ளார்கள். ஐரோப்பிய டாக்டர்கள் சூரிய ஒளி ஸ்நானத்தைச் சக்திவாய்ந்த மருந்து என்று உபதேசிக்கிறார்கள். பாரத கண்டத்தில் உதித்த நாம் இவ் விஷயத்தில் மிகுந்த பாக்கியம் பெற்றுள்ளோம். பூர்ண ஒளியுடன் கூடிய சூரியன் என்றும் இங்கு பிரகாசிக்கிறான். தினம் 15 நிமிஷங்கள் சூரிய ஒளியில் நின்றால் அளவற்ற நன்மைகள் உண்டாகும்.

பிரகிருதா தேவியிடம் செல்லுங்கள். அவள் தன் ஆரோக்கிய மிகுந்த அன்பார்ந்த கைகளால் உங்களை வாரி அணைப்பாள். உங்கள் நோய் அகன்றுவிடும். ஆத்மா புனிதமடையும். இரண்டாவது, பிராணாயாமம் வெகு முக்கியமானது. எப்பொழுதும் நன்றாக மூச்சை உள்ளுக்கிழுத்துச் சுவாசியுங்கள். உணவில் பழங்கள் மிகுந்த சத்துக் கொண்டவை தினந்தோறும் இரண்டு மூன்று பழங்களையாவது உட்கொள்வது நலம். 15 நாட்களுக்கு ஒரு முறை பட்டினி

மேல் இவ்வளவு பிரியம் கொண்டிருக்கிறாளே! அவள் கதை எழுதிய என் வார்த்தைகளைக் கொஞ்சமாவது ஏற்றுக்கொள்ளாமல் போவாளா?" இவ்விதமான எண்ணங்கள் என் நெஞ்சிற்குச் சிறிது தைரியம் ஊட்டின. நான் முதலில் சங்கோசப்பட்டுக் கொண்டு ஒடுங்கி பெஞ்சியின் ஓரத்தில் உட்கார்ந்திருந்தேன். ஆனால் இப்போது சங்கோசம் எல்லாம் பறந்துவிட்டது. நானும் நிமிர்ந்து உட்கார்ந்தேன். ஓரத்தில் குறுகி உட்கார்வதை விட்டு, அவள் பக்கமாகக் கொஞ்சம் நகர்ந்து சௌகரியமாய் உட்கார்ந்தேன். மறுபடியும் ஒரு முறை இருமினேன். இந்த இருமலில் சங்கோசத்தின் மாத்திரையே கிடையாது. ஆனால் கொஞ்சம் வேகமும் பலமும் இருந்ததோடு கூட, எதிரில் ஏதோ தெரியாத மனிதர் இருக்கிறாரே என்ற சங்கோசத்தை விட்டு, பழகின மனிதர் இருந்தால் இருமல் எப்படி இருக்குமோ அப்படி இருமினேன். அடே! அவள் இன்னும் கொஞ்சமாவது அசையவில்லை. சிறிது நேரம் பொறுத்து நான்:

"இன்று இயற்கைத் தோற்றம் மிகவும் ரமணீயமாயிருக்கிறது" என்றேன். அவள் பேசவேயில்லை. மறுமடியும் சிறிதுநேரம் கழித்து "இருண்ட மேகங்கள் கூடியிருக்கின்றன. மழை வரும்போலிருக்கிறது" என்றேன். அக் கன்னெஞ்ச மாது ஒரு வார்த்தையாவது பேசினாளில்லை. ஆனால் நான் பொதுவாகப் பேசுவதை விட்டு, அவளோடு நேராகக் கேட்கவேண்டும்போலிருக்கிறது என்று அறிந்தேன். என் சட்டைப் பையிலிருந்து கடிகாரத்தை எடுத்து, அதன் முட்களைப் பின்னால் திருப்பி வைத்துவிட்டு உடனே "அடேடே! இது என்ன! கடிகாரம் இப்பொழுதுதான் இரண்டு மணி காட்டுகிறது. நின்றுபோய்விட்டதுபோலிருக்கிறது" என்று சொன்னேன். இப்பொழுதும் அவள் பேசவில்லை. ஆனால் புஸ்தகத்தின் மறைவிலிருந்தபடியே கடைக்கண்ணால் என்னை ஒரு முறை பார்த்துவிட்டாள். என்னுடைய தைரியம் இன்னும் அதிகரித்தது.

மன்னிக்கவேண்டும். தங்களிடம் கடிகாரம் இருக்கிறதா? என்று கேட்டேன். அவள் புஸ்தகத்தினின்றும் கண்களை எடுக்காமல், "இருக்கிறது" என்று சொல்லிவிட்டு மௌனமாகிவிட்டாள். அச்சமயம் அப் புத்தகம்மட்டும் நான் எழுதியிராவிட்டால், அந் நூலாசிரியனை மனமாறத் திட்டியிருப்பேன். கடைசியில் நான் "என்ன முட்டாள்தனம் செய்தேன்! படித்த பெண்கள் அவசியம் கடிகாரம் வைத்திருப்பார்கள் என்பதைக்கூட மறந்துவிட்டேன்! நான் நேராக இப்பொழுது மணி என்ன என்று கேட்டிருக்கவேண்டும்! இது முட்டாள்தனமல்லவா? என்றேன். "ஆம்" என்றாள் அவள். என்ன சாஹஸம். குத்தலாக 'ஆம்' என்கிறாளே. நான்தான் வியங்கியம் செய்வதில் சமர்த்தன் என்றிருந்தேன். இவள் என்னையும் தோற்

ஆனால் இதுவரை அவர்கள் ஆத்மாவைப்பற்றியும் மனிதரின் உள்ளக் கோயிலின் உன்னதத் தன்மையைப் பற்றியும் நன்கு ஆராய்ந்து அறிந்துணரவில்லை. ஆனால் பாரத தேவியின் மடிமீது விளையாடிய ஞானிகள் பலரும் இதை நன்கு சர்ச்சை செய்திருக்கிறார்கள். மனத்தையும் ஆத்மீக ஞானத்தையும் நமது தபோதனர்கள் வெகுவாகக் கவனித்துக் கற்றார்கள். ஆனால் வெளி உடலைப் போதுமானபடி அவர்கள் கவனிக்கவில்லை. ஆனால் காயம் காற்றடைத்த பை என்று தள்ளிவிடக் கூடுமோ? வெளி உடலுக்கும் ஆத்மாவுக்கும் நெருங்கிய சம்பந்தம் உண்டு. நமது எண்ணங்களும் ஆசைகளும், விருப்பு வெறுப்புக்களும் நமது சுகத்தைப் பாதிப்பதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். ஆத்மாவிற்கும் வெளி உடலுக்கும் ஒற்றுமை உண்டாக்கிச் சாந்தமாகிய ஆரோக்கியத்தை அடைவதற்குரிய சில அம்சங்களைக் குறிப்பிடுகின்றேன்.

இயற்கை அன்னை

மருந்துகளால் மட்டும் பயனில்லை. இயற்கை அன்னையின் செல்வங்களே உன்னத ஔஷதமாகும். இயற்கை மாதா அளிக்கும் ஆரோக்கிய கிரணங்களாலேயே தீராத வியாதிகள் பலவும் தீருகின்றன. மரங்களின் காற்று சுகத்தைத் தருகின்றது. தென்னை மரங்களால் என் உடலுக்கு நல்ல ஆரோக்கியம் உண்டாகிறது. தென்னை மரங்கள் சூழ்ந்த ஆச்சிரமத்திலேயே நான் வசிக்க விரும்புகிறேன். தோட்டங்களும் பூங்கா வனங்களும் நகரங்களுக்கு மட்டற்ற நன்மைகளைச் செய்கின்றன. உண்மையாகப் பேசுமிடத்து அவைகளே ஓர் நகரத்தின் ஹிருதயமாகும். சூரிய கிரணங்கள் ஆரோக்கியத்தை வளர்க்கும். ஜெர்மெனியிலும் மற்ற ஐரோப்பிய நாடுகளிலும் சூரிய கிரணங்களின் ஒளியிடை மூழ்கி அனுபவிக்க ஜனங்கள் அதிக ஆவல் கொண்டுள்ளார்கள். ஐரோப்பிய டாக்டர்கள் சூரிய ஒளி ஸ்நானத்தைச் சக்திவாய்ந்த மருந்து என்று உபதேசிக்கிறார்கள். பரத கண்டத்தில் உதித்த நாம் இவ் விஷயத்தில் மிகுந்த பாக்கியம் பெற்றுள்ளோம். பூர்ண ஒளியுடன் கூடிய சூரியன் என்றும் இங்கு பிரகாசிக்கிறான். தினம் 15 நிமிஷங்கள். சூரிய ஒளியில் நின்றால் அளவற்ற நன்மைகள் உண்டாகும்.

பிரகிருதா தேவியிடம் செல்லுங்கள். அவள் தன் ஆரோக்கிய மிகுந்த அன்பார்ந்த கைகளால் உங்களை வாரி அணைப்பாள். உங்கள் நோய் அகன்றுவிடும். ஆத்மா புனிதமடையும். இரண்டாவது, பிராணாயாமம் வெகு முக்கியமானது. எப்பொழுதும் நன்றாக மூச்சை உள்ளுக்கிழுத்துச் சுவாசியுங்கள். உணவில் பழங்கள் மிகுந்த சத்துக்கொண்டவை. தினந்தோறும் இரண்டு மூன்று பழங்களையாவது உட்கொள்வது நலம். 15 நாட்களுக்கு ஒரு முறை பட்டினி

கதை ஆசிரியன் காதல். *

திரு. S. V. வெங்கடநாராயண சர்மா அவர்கள், B. A., B. L.

நான் தமிழ் பாஷையில் பிரசித்தி பெற்ற ஒரு கதை ஆசிரியன். மோஹன சர்மாவின் கதைகளின் ஒரு பிரதியாவது கிடைக்காத அப்படிப்பட்ட ஒரு குக்கிராமம் கூட இராது. பெரிய பெரிய சமாசாரப் பத்திரிகைகளிலும் என் பெயர் முழங்கிக் கொண்டு வந்தது. ஜனங்களும் மிகுந்த ஆவலோடு என் கதைகளைப் படித்தார்கள், படிக்கிறார்கள்.

இருப்பது சாலவும் சிறந்தது. பட்டினி இருப்பதால் மூளைக்குக் கெடுதல் என்று சிலர் எண்ணுகிறார்கள். இது முற்றிலும் தப்பு. உபவாசமிருப்பதால், குடல்கள் சுத்தமடைந்து, இரைப்பைகள் நன்றாகக் கழுவப்படுகின்றன. நான் வாரம் ஒருமுறை அநுஷ்டிக்கும் உபவாசமும் மௌன விரதமும் எனக்கு அளப்பரிய நன்மைகளைக் கொடுக்கின்றன.

புனிதப் பிரார்த்தனை

புனிதத்தையும் பிரார்த்தனையையும் மிகவும் அழகாகப் பிர்மச்சரியம் என்னும் பதத்தில் அடக்கினர் ஆன்றோர். பிர்மச்சர்யம் உயர்ந்தது. பிர்மச்சர்யம் துறவு பூண்டு தபஸ் செய்வதுமட்டுமல்ல. கலியாணம் ஆனவர்களும் பிர்மச்சர்யத்தை அனுஷ்டிக்கலாம். புனிதமான தூய வாழ்க்கையும் பிரார்த்தனையுமே பிர்மச்சர்யமாகும். இவைகளே மனிதனையும் பகவானையும் ஒன்று சேர்க்கின்றன. இவைகளாலேயே ஓர் மனிதன் பராசக்தியின் பேரருளுக்கு உறைவிடமாகின்றான். ஒளிகொண்ட உடலைக்கொண்டு எங்கும் தன் ஜோதிக் கதிர்களை வீசும் சக்தியை அடைகிறான்.

"இந்த அந்தகாரத்திலிருந்து எங்களை நீக்கி, உண்மை ஒளியில் கொண்டுசெல்லும்" என்று உபநிஷத்துக்கள் இயற்றிய மகரிஷிகள் பிரார்த்தனை செய்தார்கள். இந்த உண்மை ஒளியைப் பிர்மச்சாரியே அடையமுடியும். ஒளியுடன் கூடிய சிறந்த யோகியாகிய வசுநாதரும் ஓர் பிர்மச்சாரியேயாகும். "பால பிர்மச்சாரி" என்று நான் அவரை அழைப்பேன். புனிதத் தன்மையாலும் பிரார்த்தனையின் சக்தியாலுமே வசுயோகி ஒப்பற்ற அரிய செயல்களைச் செய்தார்.

* "சாந்த்" என்னும் ஹிந்தி மாதப் பத்திரிகையிலிருந்து மொழிபெயர்த்தது.

கீர்த்தி, பெயர் இவ்விரண்டையும் சம்பாதித்ததைத் தவிர நான் வேண்டிய அளவு 'வெள்ளையப்பனு'ம் சம்பாதித்துவிட்டேன். சென்னையில் புரசவாக்கத்தில் என்னுடைய சிறிய பங்களா இருக்கிறது. நாவல் ஆசிரியனது வீட்டைப் பற்றி பாடகர்கள் எவ்விதமான கற்பனை செய்து கொள்வார்கள் என்று எனக்குத் தெரியும். ஆகலின் அவர்களுடைய கற்பனைக்குத் தக்கவாறே நான் என் வீட்டையும் அலங்கரித்து வைத்திருந்தேன். ஆனால், நான் பாடகர்களின் கற்பனையைச் சரியாகச் செய்திருக்கிறேனா இல்லையா என்பதை எனக்குத் தெரிவிப்பார் மட்டும் ஒருவரும் இல்லை.

எனக்கு இன்னும் விவாகம் ஆகவில்லை. நான் நன்றாய் ஆய்ந்தோய்ந்து பாராமல், கல்யாணமாவது அல்லது காதலாவது செய்வதாக உத்தேசமில்லை உண்மையில் நான் எனது கதைகளில் எப்படிப்பட்ட நாயகிகளைச் சிருஷ்டிக்கேனோ அதுவே போல் என் உண்மைக் காதலியும் இருக்க வேண்டுமே என்று விரும்பினேன் கஜமுகக் கடவுள் அரசமரத்தடியில் உட்கார்ந்து தன் தாயாரைப் போலவே வரும் பெண்மணிக்காகக் காத்திருந்தது போலாயிற்று. அப்பெண்மணி எனக்கு இன்னும் கிடைக்கவில்லை. கிடைப்பாளோ கிடைக்கமாட்டாளோ அல்லது எப்போது கிடைப்பாள் என்று நான் கவலைப்படுவதும் இல்லை. ஆனால் இந்த எண்ணம் மாத்திரம் என் மனதின் ஒருபுறத்தில் சதா இருந்துகொண்டே இருந்தது. சிற்சில சமயங்களில் யாரோ என் காதில் "அவள் அவசியம் கிடைப்பாள்" என்று சொல்லுவதாகத் தோன்றும். நான் இப்பொழுது யாராவது வந்து "அதோ பார், இவள்தான் அவள்" என்று என் காதில் எப்பொழுது சொல்வார்கள் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

இக்காரணத்தினால் என் வீட்டில் என்னுடைய—என் வேலைக்காரனுடைய ராஜ்யந்தான். எனது நண்பர்கள் என்னை 'மேனியக்' அல்லது அரைப் பித்தன் என்பார்கள். அவர்கள் சொல்வது உண்மையாயிருந்தாலும் இருக்கலாம். ஏனெனில் நூலாசிரியன் என்ற பெயரை வைத்துக் கொண்டால் இது இன்றியமையாதது. ஆனால் இந்தப் பித்து பயித்தியக்கார ஆஸ்பத்திரிக்குப் போகவேண்டிய பைத்தியம் அல்ல. ஆனால் அவனுடைய தம்பி என்று சொல்லலாம். ஏனென்னில் அவனும் தீர்க்கதரிசி; இவனும் தீர்க்கதரிசி. ஆனால் வித்தியாசம் என்னவென்றால், பைத்தியக்காரன் தன் விலையுயர்ந்த எண்ணங்களை வெளியிட முடியாமல் திண்டாடுகிறான். வெளியிடுவதற்கு சங்கோசப்படுகிறான். ஆனால் நூலாசிரியன் யாதொரு சங்கோசமும் படுவதில்லை. நல்ல பாஷையில் தன் எண்ணங்களை வெளியிடுகிறான்.

ஆனால் என் நண்பர்கள் என் மனப்பான்மையை அறிய முடியவில்லை. ஒவ்வொரு நாவலாசிரியன் உள்ளமும் அப்படிப்பட்டதே! அவனது மனப்பான்மை அறிய வேண்டுமென்று எத்தனை பேர் முயற்சி செய்கிறார்கள் என்று நினைக்கிறீர்கள்? மிகவும் குறைந்தவரே! என் சிநேகிதர்களில் சிலர் இந்தக் குறைந்தவர்களில் சேர்ந்தவர்கள். நான் ஏதாவது ஒரு கதை யெழுதி வெளியிட்டால் அதை அவர்கள் வீட்டில் படித்துவிட்டு நேராக என்னிடம் வந்து "ஏன் சர்மாஜீ, அவள் கிடைத்துவிட்டாளா?" என்பார்கள்.

நாவல் ஆசிரியனின் பெரிய துரதிருஷ்டம் இது. ஆசிரியன் எதை எழுதுகிறானோ அதை எல்லாம் வாசகர்கள் அவன் தலைமேலேயே சுமத்துகிறார்கள். கதையில் யாருக்காவது கலியாணம் நடந்தால் அது ஆசிரியனுக்கு. கதையில் யாருடைய தாயாராவது இறந்தால் அது ஆசிரியன் தாய். யாருக்காவது தூக்கு தண்டனை ஆயிற்று என்றால் அதுவும் அவனுக்கே. ஆனால் இந்த விஷயங்களினால் எனக்கு துக்கமுண்டாகவில்லை. ஆனால் இவைகளினால் எனக்கு ஒரு வித உத்ஸாகமே உண்டாயிற்று. கடைசியில் நான் ஒரு மேனியக் (Semi) தானே!

மழைக் காலம். இக் காலத்தில் "பீபள்ஸ் பார்க்" பார்க்க மிகவும் ரமணீயமானது. இக் காலத்தில் சில தனவான்கள் இவ்விடத்திலேயே உலவுவதற்கு வருவார்கள். கால்வாயின் படகுகள், பக்ஷிக் கூட்டங்கள், பலவித மிருகங்கள் பார்க்க விநோதமாயிருக்கும்.

சாயங்காலம் ஆகாயம் மேகங்களால் மூடப்பட்டிருந்தது. ஆனால் மழையின் லக்ஷணங்கள் இல்லை. நான் சாயந்திரக் காப்பி குடித்துவிட்டு உலவுவதற்காக வெளிக் கிளம்பினேன். "பீபள்ஸ் பார்க்"குக்கு வந்து சேர்ந்தேன். கேட்டின் வழியாகச் சிறிது தூரம் சென்றபின் என் கண்கள் திடீரென்று ஒரு வஸ்துவின் பேரில் நிலைத்துவிட்டன. ஒரு அழகிய பெண்மணி ஒரு பெஞ்சியின் ஒரு கோடியில் உட்கார்ந்துகொண்டு ஓர் புஸ்தகத்தைப் படித்துக்கொண்டிருந்தாள்.

நான் பலாத்காரமாக என் கண்களை அவ் வஸ்துவினின்றும் இழுத்துக்கொண்டு மேலே செல்ல முயன்றேன். அதற்குள் என் காதில் யாரோ 'பொறு' என்றதுபோலிருந்தது. "ஏன்?" என்று நான் கேட்டேன்.

"பாரேன்!" என்று காதில் சப்தம் உண்டாயிற்று. நான் மறுபடியும் அந்தப் பக்கம் பார்த்தேன். அவள் புஸ்தகத்தினின்றும் தன் தலையை நிமிர்த்தினாள். அவளது முகத்தை நன்றாகப் பார்த்தேன். நல்ல மருண்ட கண்கள்! சிறிது நேரம் பார்த்துக்கொண்டே

கடித்துவிட்டாளே! நான் சிறிது வெட்கமடைந்தேன். பிறகு "தயவு செய்து இப்பொழுது மணி என்ன என்று சொல்வீர்களா?"

"ஆகட்டும்" என்று சொல்லி மறுபடியும் மௌனம் சாதித்தாள்.

"இப்பொழுது என்ன மணி?"

"ஆறரை" என்று சொல்லிவிட்டுப் புஸ்தகத்தைப் பட் என்று மூடி ஆகாயத்தை நோக்க ஆரம்பித்தாள்.

"புஸ்தகம் முடிந்துவிட்டதா?" என்று கேட்டேன்.

"ஆம். முடிந்துவிட்டது."

"என்ன? அது நாவலா?"

"இல்லை. சிறு கதைகள்."

"கதைகள் பேரில் மிகுந்த பிரியமோ?"

"ஆம்! மிகவும்."

"அது என்ன புத்தகம்?"

"ரோஜா மலர்கள்."

"இனிமையாக இருக்கின்றனவோ?"

"மிகவும்!"

"ஆக்கியவர் எப்படிப்பட்டவர்?" என்று கேட்டேன். அவள் விடையளிப்பதற்கு முன்னால் சிறு சிறு துளிகள் விழ ஆரம்பித்தன. காரியம் எல்லாம் கெட்டுப் போயிற்று. அவள் பெஞ்சியினின்றும் தடபுடலாக எழுந்திருந்தாள்.

"ஏன்? புறப்பட்டுவிட்டீர்களா?"

"ஆம்."

"மழைக்காகப் பயந்தா?"

"வீடு போய்ச் சேரவேண்டும்."

"என்கூட வருவதற்கு யாதொரு ஆக்ஷேபணையும் இல்லாவிட்டால், என் கார் வெளியில் நிற்கிறது, அதில் தங்களை வீட்டிற்குக் கொண்டுபோய்ச் சேர்க்கிறேன்" என்றேன்.

"உம்முடைய காரா?" என்று குத்தலாகக் கேட்டாள். என்னிடத்திலும்கூடக் கார் இருக்கும் என்று அவளுக்கு நம்பிக்கை உண்டாகவில்லை.

"ஆம். என்னுடைய கார்!" என்றேன்.

"என்னுடைய காரையும் கொண்டுவரச் சொல்லியிருந்தேன். இப்போது அதுவும் வெளியில் வந்திருக்கும்."

"உம்முடைய காரா?" என்று நானும் சிரித்துக்கொண்டே கேட்டேன்.

"ஆம்! என்னுடைய கார்" என்று பலமாகச் சொன்னாள்.

"உம்மிடத்திலும் கார் இருக்கும் என்று நான் நினைக்கவில்லை."

"நீர் என்னை யார் என்று நினைத்துக்கொண்டீர்?" என்று அமர்த்தலாகக் கேட்டாள்.

"உம்மையா? சொல்லட்டுமா?"

"நீர் சொல்லவேண்டிய அவசியமில்லை. நானே சொல்லிவிடுகிறேன்."

"ஆனால் சொல்லுங்கள்."

"உலகப் பிரசித்தி பெற்ற ஒரு பெரிய மனிதனின் மனைவி."

"மனைவியா?"

"ஆம். மனைவி."

"மனைவி அல்ல. நீங்கள் ஏதோ ஞாபக மறதியாகச் சொல்லுகிறீர்கள்போலிருக்கிறது. புத்திரி என்று சொல்லுகிறீர்களா?"

"இல்லை. புத்திரி அல்ல. மனைவிதான்."

"ஆயின் உமக்கு விவாகம் ஆய்விட்டதா?"

"வெகுநாளுக்கு முன்பே."

"தங்களைக் கலியாணம் செய்துகொண்ட பாக்கியசாலி யார்?

இந்தக் கேள்வி கேட்டவுடன் தயங்கினாள். அவள் பொய் சொல்லுகிறாள் என்று அறிந்துகொண்டேன். கேள்விகளுக்கெல்லாம் வரிசையாக விடையளித்துக்கொண்டே வந்தாள். ஆனால் இந்தக் கேள்வியை அவள் எதிர்பார்க்கவில்லை. அச் சமயத்தில் அவளது பார்வை தன் கையிலிருந்த புஸ்தகத்தின் மேல் விழுந்தது. உடனே அவள் முகம் மலர்ந்தது.

"அவர் ஓர் பிரபல மனிதர் என்று முன்னமேயே சொன்னேனே!"

"சென்னை மாகாணத்தின் முதல் மந்திரியா?"

"இல்லை."

"ஜமீன்தாரா?"

"இல்லை."

"வக்கீலா?" "இல்லை?" "டாக்டரா?" "இல்லை." "ஆனால் என்ன? கதை எழுதுபவரா?" "ஆம். எவருடைய கதைகளைப் படித்து ஜனங்கள் பரவசத்தை அடைகின்றனரோ, எவருடைய கதைகள் இருதயத்தையும் ஊடுருவிச் செல்லுகின்றனவோ, எவருடைய கதைகள் சிரிப்பவனை அழவும், அழுபவனைச் சிரிக்கவும் செய்கின்றனவோ அப்படிப்பட்ட கதை எழுதும் ஆசிரியர்."

'அப்படிப்பட்ட கணவனை அடையத் தாங்கள் பெரும் பாக்கியம் செய்திருக்க வேண்டும். அவருடைய பெயரென்ன?" அவள் தன் கையிலிருந்த புத்தகத்தை என் எதிரே நீட்டி, "இதைப் படியுங்கள்" என்றாள்.

"மோஹன் சர்மாவா! உங்கள் கணவரா?"

"ஏன்! அவரை நீர் அறிவீரோ?" என்று குலை நடுக்கத்துடன் கேட்டாள்.

"அறிகிறதா? அவர் பெயரைக்கூடக் கேட்டதில்லை. ஆனால் நீங்கள் அவரைப் பார்த்திருக்கிறீர்களா?"

"பார்த்திருக்கிறீர்களா? இது என்ன கேள்வி? மனைவிக்குத் தன் கணவன் இன்னாரென்று தெரியாதா?"

"நான் கேட்டது இன்றைக்கு அவரைப் பார்த்தீர்களா? என்று"

"ஏன்! நான் இப்பொழுதுதான் அவரை வீட்டில் விட்டு வந்திருக்கிறேன்."

"அவர் உம்மோடு உலவ வருவதில்லையா?"

"அவர் கதை எழுதிக்கொண்டிருக்கிறார்."

"மிகவும் நல்ல கணவர்! இவ்வளவு அழகிய மனைவியைத் தனியாக உலவ அனுப்பிவிட்டுத், தான் வீட்டில் உட்கார்ந்திருக்கும் கணவரைப்பற்றி என்ன எண்ணுவது! அவருக்குக் கதைகள் உம்மைக் காட்டிலும் பிரியமானவைகளோ?"

"ஐயா! நீர் என் கணவரைப்பற்றி இப்படிப்பட்ட வார்த்தைகள் பேசாதீர்" என்று கோபத்தோடு சொன்னாள்.

"நீங்கள் அவரை மிகவும் நேசிக்கிறீர்களோ?"

"என் உயிரைக் காட்டிலும் அதிகமாக. நான் என்ன? அவருடைய கதைகளை எவரெவர் படிக்கிறார்களோ அவர்கள் எல்லாம் அப்படித்தான் சொல்லுவார்கள்."

"என் துரதிர்ஷ்டம்! நான் அவருடைய கதைகளைப் படித்ததில்லை."

அதற்குள் மழை பலமாக வந்துவிட்டது. "என்னுடைய கார் வந்திருக்கும்" என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டாள்.

"அப்படியானால் நாம் இனிமேல் சந்திப்பது அசாத்தியம். நீங்களோ ஒரு பெரிய மனிதர் மனைவி. நானோ சாதாரண மனிதன்."

"அசாத்தியம்" என்று சொல்லிக் கேட்டுக்கு வெளியில் வேகமாகச் சென்றாள்.

நான் பாதை ஓரத்தில் ஒரு மரத்தின் பின்னால் ஒழிந்து பார்த்துக்கொண்டிருந்தேன். அவள் திரும்பிப் பார்த்து என்னைக் காணாமல், புரசவாக்கத்திற்குப் போகும் நேரான பாதையை விட்டு, எழும்பூர் போகும் ரோட்டில் போனாள். நானும் என் காரில் உட்கார்ந்துகொண்டு டிரைவரிடம் அவள் போகும் பார்க்கமாகவே மெதுவாகக் காரை விடும்படி சொன்னேன். என் கண்களுக்கெதிரில் மிகவும் ரகஸ்யம் நிறைந்த நாடகம் நடைபெற்றுக்கொண்டிருந்தது. 'அவள்' 'என் காதலி' கிடைப்பாள் என்றும் இவ்விதமாகக் கிடைப்பாள் என்றும் நான் கொஞ்சங்கூட எதிர்பார்க்கவேயில்லை. நான் நூற்றுக் கணக்கான கதைகள் எழுதியிருக்கிறேன். என்றும் இவ்வளவு உண்மையாகவும் ரகஸ்யம் நிறைந்ததாக இல்லை. எவ்வளவோ முயற்சிகள் செய்தும் இது போன்ற நிகழ்ச்சி என் மனதில் உதித்ததே இல்லை. அவள் தன்னை என்னுடைய மனைவி என்று சொல்லிக்கொள்ளுகிறாள். ஆயினும் நான் அவளைப் பார்த்து 'நீ என்னுடையவள்" என்று சொல்லச் சக்தியற்றவனாயிருக்கிறேன். எப்படிப்பட்ட நெருக்கடி! நான் அவள் மேல் மோகித்துவிட்டேன். உள்ளக் கிளர்ச்சி, மனோபாவம், வார்த்தைகளின் இனிமை இவை மூன்றும் ஏககாலத்தில் எந்த ரமணியிடத்தில்தான் பொருந்தியிருக்கும்! அப்படிப்பட்ட இந்த ரமணியை, கதை எழுதும் நான் காதலிக்க ஆரம்பித்தேன் என்றால் இதில் என் குற்றமென்ன?'

மழை இன்னும் அதிகரித்தது அப் பெண்மணி மழையினால் நனைந்து ஓர் மரத்தடியில் நின்று கொண்டிருந்ததைக் கண்டேன்

காரை அவள் நின்றுகொண்டிருந்த மரத்திற்கெதிரில் நிறுத்தி அப் பக்கமாக இருந்த கதவைத் திறந்தேன். அவள் என்னைக் கண்டு மிகவும் வெட்கப்பட்டாள்.

"இங்கேயும் நீர் வந்துவிட்டீரா?" என்றாள்.

"நீயே என்னை இழுத்துக்கொண்டு வந்துவிட்டாய்!"

"என் கணவர் இங்கிருந்தால் இப்படிப் பேசுவதற்கு உமக்கு தைரியம் இராது."

"எனக்கும் அவரைப் பார்க்க வேண்டுமென்று மிகுந்த ஆவல்; என்னை அவரோடு சந்திக்கச் செய்ய மாட்டாயா?"

"முடியாது! நீர் அவரோடு சந்திக்கத் தகுதியற்றவர்."

"ஏன்?"

"ஏனெனில் நீர் பிறர் பெண்டிரிடம் தகுதியற்ற வார்த்தைகள் பேசுகிறீர்."

"ஆயின் அது உன் கணவருடைய குற்றமே!"

"அப்படி உமக்கு யார் சொன்னது?"

"சொல்லுவானேன்! லக்ஷணங்களைப் பார்த்தால் தெரியவில்லையோ? அவர் உன்னைச் சிறிதும் பொருட்படுத்துகிறதில்லை. நீ இங்கே மழையில் அவஸ்தைப்படுகிறாய். அவர் தன் கதையில் மூழ்கிக் கிடக்கிறார்."

"என்றால்?"

"உன்னை இவ்வாறு மழையில் நனைந்து கொண்டிருக்க என்னால் பார்க்கக்கூடவில்லை. உன் மோட்டார் என்னவாயிற்று?"

"வரவில்லை."

"கதை எழுதுவதில் இதையும் மறந்துவிட்டாரோ?"

"அவருக்கே காரின் அவசியம் ஏற்பட்டிருக்கும்."

"சரி. இப்பொழுது என்ன செய்வதாக உத்தேசம்?"

"வீட்டுக்குப் போகிறேன்"

"நடந்தா?"

"ஆம்."

"மழையில் நனைந்துகொண்டா?"

"நான் என்ன மெழுகுவர்த்தியா—மழையில் நனைந்துபோக?"

"மெழுகுவர்த்தி தண்ணீரில் கரையாது. நீ தேனால் செய்யப்பட்டிருக்கிறாய். இந்த மழை உன் இனிமை முழுவதையும் கரைத்துவிடும். நான் ஒன்று சொல்லுகிறேன் கேட்கிறாயா?"

"என்ன?"

"என் காரில் உட்கார்ந்து வீடு போய்ச் சேரலாமே?"

"முடியாது."

"இதில் குற்றம் என்ன?"

"ஒன்றுமில்லை."

"ஆனால் என்னோடு போகப் பயமா?"

"பயப்படுகிறதா? யாருக்கு?"

"என்னைக் கண்டு."

"உம்மிடம் எனக்கென்ன பயம்?"

"ஆயின் காரில் ஏன் உட்காரமாட்டாய்?"

"என் கணவருக்குத் தெரிந்தால், உன்னை லகுவில் விடமாட்டார்."

"அதைப் பின்னால் பார்த்துக்கொள்ளலாம். அதைப்பற்றி நீ கவலை கொள்ளவேண்டாம். இப்பொழுதே உனக்கு ஜலதோஷம் பிடித்துவிட்டதாகக் காண்கிறது. உட்கார்."

பதில் பேசாமல் காருக்குள் ஏறி உட்கார்ந்துகொண்டாள்.

"எங்கே போகவேண்டும்?" என்று கேட்டேன்.

"என்னைச் சினிமாக் கொட்டகைக் கருகில் இறக்கிவிடும். நான் வண்டி வைத்துக்கொண்டு வீடு போகிறேன்."

"என் மோட்டார் வீடுவரையில் செல்லும்."

"நான் அதுவரை மோட்டாரிலேயே போக விரும்பவில்லை."

"ஏன்?"

"என் கணவர் என்னை உம்மோடு பார்த்தால்........."

"அப்படியானால் தெருக் கோடியில் இறக்கிவிடுகிறேன்."

"சரி."

"எந்த இடத்திற்கு வண்டியை விடுவது?"

"இதுகூட உமக்குத் தெரியாதா?"

"நான் முன்னமேயே சொன்னேனே. மோஹன் சர்மாவை நான் பார்த்ததே கிடையாதென்று."

"உமது ட்ரைவருக்கு ஒருவேளை தெரிந்திருக்கலாம்."

"கேட்கின்றேன்" என்று சொல்லி ட்ரைவரிடம் சென்று கேட்கும் பாவனையாகக் கீழே இறங்கினேன். அதற்குள் அவள் புத்தகத்தைத் திறந்து அதைப் பார்த்துக்கொண்டாள். நான் மறுபடியும் காருக்குள் ஏறும்போது, "கேட்டீரா?" என்றாள்.

"ஆம்."

"என்ன?"

"23, பெரம்பூர் ரோடு."

"ட்ரைவர் புத்திசாலி என்று தோன்றுகிறது."

"அவன் என்னிடம் வேலைக்கு வருமுன் மோஹன் சர்மாவிடமே இருந்ததாகச் சொல்லுகிறான்."

"அவரிடத்திலா? எவ்வளவு காலத்திற்கு முன்?" என்று திடுக்கிட்டுக் கேட்டாள்.

"இரண்டு வருஷத்திற்கு முன். நீ அவரைப் பார்த்ததில்லையா?" என்று கேட்டேன்.

"நான்......நான்......அப்பொழுது அங்கிருக்கவில்லை எங்கள் விவாகம் ஆகிச் சில மாதங்களே ஆகின்றன."

"அப்படியா?"

சிறிது நேரம் இருவரும் மௌனம் சாதித்தோம். வீடு சேர்வதற்கு இன்னும் சிறிது தூரம் இருந்தமையால், அவளிடம் இன்னும் சம்பாஷணை செய்ய விரும்பினேன்.

"நீ ஒரு விசித்திரமான ஆசாமி என்று உனக்குத் தெரியுமா?"

"இல்லை."

"உன்னை அடைந்தது மோஹன் சர்மாவின் பெரும் பாக்கியம்."

"என்னை அவர் ஏற்றுக்கொள்ளத்தக்க பாக்கியம் நான் என்ன செய்திருக்கிறேன்?" என்று தான் இன்னாள் என்று இதுவரை சொல்லிவந்ததை மறந்து, பெருமூச்சு விட்டுக்கொண்டு சொன்னாள். நான் அவளை இன்னும் தூண்டிவிடுவதற்காக "ஏற்றுக்கொள்வதா? ஏன் உன்னுடைய விவாகத்தின்போதே அவர் உன்னை ஏற்றுக்கொள்ள வில்லையோ?"

அவள் விழித்துக்கொண்டாள்.

"நான் என்ன சொன்னேன்? ஏற்றுக்கொள்வாரா என்றா சொன்னேன்? நான் சொல்ல விரும்பியது...ஊம்...ஊம்..."

"காதலிப்பாரா என்று" என்று நான் அவள் வாக்கியத்தைப் பூர்த்தி செய்தேன்.

"ஆம். ஆம். நான் சொல்ல விரும்பியது அதுவே!"

"அப்படியானால் அவர் உன்னைக் காதலிக்கிறதில்லையா?"

"அப்படியுமல்ல. நான் ஏதோ மறதியில் உளறிவிட்டேன். நான் சொல்ல விரும்பியது இன்னும் அதிகமாக—என்னை நேசிப்பாரா என்று."

"உனது கதையாசிரியனைப்பற்றி இன்னும் கொஞ்சம் சொல்ல மாட்டாயா?"

"என்ன தெரியவேண்டும்?"

"அவர் இளவயதுள்ளவரா?"

"ஆம்."

"அழகாயிருப்பாரா?"

"அபூர்வ அழகு வாய்ந்தவர்."

"நானும் ஒரு கதையாசிரியனா யிருந்தால்"

"என்ன செய்வீர்?"

"பிச்சை கேட்பேன்"

"எந்த வஸ்துவை"

"காதற் பிச்சை."

"யாரிடமிருந்து?"

"உன்னைப்போன்ற சுந்தரியிடமிருந்து."

"நீர் பெரிய தமாஷான மனிதரா யிருக்கிறீரே. நீரும் ஏன் கதை யெழுதுகிறதில்லை?"

"எழுதவே தெரிகிறதில்லை."

"நீர் முயற்சி செய்து பார்த்ததில்லை. உம்முடைய வார்த்தைகளி லிருந்தே நீர் பெரிய கதையாசிரியராகக் கூடும் என்று வெளிப்படை யாய்த் தெரிகிறதே."

"உன் இருதயத்தினின்றும் இதைச் சொல்லுகிறாயா?"

"ஆம். என் மனதாறச் சொல்கிறேன்."

"நல்லது. முயற்சி செய்கிறேன். ஆனால், அதற்குப் பிறகு உன் இருதயத்தில் எனக்காகச் சிறிதளவு இடம் கொடுப்பாயா?"

"பார்க்கலாம்" என்று சொல்லிவிட்டு நன்றாகச் சாய்ந்துகொண் டாள்.

"ஆனால் நீ கல்யாணமானவள் ஆயிற்றே?"

அவள் சடக்கென்று எழுந்திருந்து காரிலிருந்து வெளியே எட்டிப் பார்த்தாள். "ஓ! பெரம்பூர் ரோடு வந்துவிட்டது. என்னை இறக்கிவிடும்" என்றாள்.

"இங்கே இறங்குவதில் என்ன பிரயோசனம்? அதோ பக்கத்தி லேயே 23-ம் நம்பர் தெரிகிறதே." அதற்குள் காரும் 23-ம் நம்பருக்கு எதிரில் நின்றது. காரிலிருந்து கீழே இறங்கி, "இதுதான் உன்னுடைய வீடா?" என்று கேட்டேன். அவள் 'இரு' என்று சொல்லிவிட்டு, கேட்டின்மேல் இருந்த பித்தளை போர்டை உற்று நோக்கிவிட்டு, "ஆம். இதுதான். இனி நீர் போகலாம்" என்றாள்.

"உனக்கு உன் சொந்த வீடுகூட மறந்துபோகிறதா?"

"இருட்டாயிருந்தது."

"எனக்குக்கூட இந்த வீடு அடையாளம் தெரிகிறாப்போ லிருக்கிறதே?"

"உமக்கா?"

"ஆம்."

"இந்த வீட்டுக்கு எப்பொழுதாவது வந்திருக்கிறீரா?"

"பல முறை"

"எதற்காக?"

"திருடுவதற்காக."

"திருடவா?" "ஆம்" "எனக்கு விளங்கவில்லையே?" "அதாவது நான் திருடன் என்று அர்த்தம்" என்றேன். அவள் விலாப் புடைக்கச் சிரித்தாள். பிறகு,

"ஐயா! மன்னிக்கவேண்டும். என்னால் சிரிப்பை அடக்கமுடியவில்லை. நீராவது—திருடனாவது—என்னிடம் கதை அளக்கிறீரா! உம்மைப் பார்த்தால் திருடன்போலவா இருக்கிறது?"

"அப்படியானால் திருடன் முகத்தில் 'திருடன்' என்று எழுதி ஒட்டியிருக்குமா?"

"எழுதியிராது. ஆனாலும் இவ்வளவு சுந்தரமான உடைகளை அணிந்துகொண்டும், இவ்வளவு அழகான வார்த்தைகளைப் பேசுபவனைத் திருடன் என்று எப்படிச் சொல்வது?"

"அழகான வார்த்தைகளைப் பேசும் திருடன் அழகான வஸ்துக்களையே திருடுவான்."

"நீர் இதுவரை எத்தனை வஸ்துக்களைத் திருடியிருக்கிறீர்?"

"அதிகமில்லை."

"ஆனாலும்."

"இந்த ஆடைகளைப் பாருங்கள். இவைகளை உங்கள் வீட்டிலிருந்துதான் திருடினேன்."

"என்ன?"

"உண்மை. இவை உன் கணவனுடையவை. வேறொருவருடையதாயிருந்தாலும் இருக்கலாம். ஆனால் திருடினதுபட்டும் இந்த வீட்டிலிருந்தே. ஒருவேளை அச் சமயத்தில் நீ இந்த வீட்டில் இருந்திருக்கமாட்டாய்."

"பிறகு?"

"இந்த மோட்டார் கார்."

"பிறகு?"

"ஓஹோ! எல்லாவற்றையும் சொல்லமுடியாது."

"கொஞ்சம்தான் சொல்லுமே?"

"கேட்டுத்தான் ஆகவேண்டுமோ?"

"ஏன், சங்கோசப்படுகிறீரோ?"

"இல்லை, பயப்படுகிறேன்."

"எதற்காக?"

"ரகஸ்யம் வெளிபான பிறகு வரக்கூடிய தண்டனைக்கு."

"நான் உம் ரகஸ்யத்தை வெளியிடமாட்டேன்"

"உண்மையாகவே?"

"நம்பிக்கை உண்டாகவில்லையா?"

"நான் ஒரு மனைவியைத் திருடிக்கொண்டேன்."

"மனைவியா?" என்று சிரித்துக்கொண்டே கேட்டாள்.

"என்னுடையவளா யிருக்கவில்லை அவள். ஆனால் என்னுடையவளாக ஆய்விட்டாள்."

"நீர் விசித்திரமான மனிதரா யிருக்கிறீர். இன்னும் வேறு எதையாவது திருடிவிடாதீர்."

"எப்படிச் சொல்வது?"

"சரி நீர் போம்; நான் உள்ளே போகிறேன். என் கணவர் வரும் சமயம் ஆயிற்று."

"நீ உள்ளே போ! நான் என்பாட்டுக்குப் போகிறேன்."

கதவு மூடியிருந்தது. நின்றபடியே சிறிது நேரம் சிந்தனையில் ஆழ்ந்தாள்.

"வேலைக்காரனைக் கூப்பிட்டால் கதவைத் திறக்கிறான்" என்றேன்.

"இல்லை என்னிடமே திறவுகோல் இருக்கிறது. நான் கதவைத் திறந்துகொள்ளுகிறேன். நீர் போகலாம்."

"சட்டைப் பைகளில் பார், சாவி இருக்கிறதா இல்லையா என்று."

அவள் உடனே தன் சட்டைப் பைகளில் கையை விட்டுத் தேடித் தேடிப் பார்த்தாள். வகையறியாமல் சிக்கிக்கொண்டாள். வேறு என்னதான் செய்வாள்? "ஐயையோ! சாவியை எங்கேயோ தொலைத்துவிட்டேனே" என்றாள்.

“என்னுடைய திறவுகோலைப் போட்டுப் பார். ஒரு சமயம் திறக்கலாம்.”

“இதனுடைய சாவி உம்மிடம் எப்படி வந்தது?”

“திருடனிடத்தில் திறவுகோல்களுக்கென்ன குறைவு” என்று சொல்லிவிட்டு, என்னுடைய திறவுகோலினால் கதவைத் திறந்தேன். அவள் உள்ளே நுழைந்துகொண்டு, “அநேக வந்தனங்கள்” என்றாள்.

“சாவியையும் நீயே வைத்துக்கொள். சமயத்திற்கு உதவும்.” சாவியை அவளே வைத்துக்கொண்டாள்.

“அடிக்கடி உன்னுடைய தரிசனம் கிடைக்குமா?”

“ஏன் திருட வருவீரோ?”

“ஆம். வருகிற உத்தேசம் உண்டு.”

“இங்கிருந்து வெறுங்கையோடுதான் போவீர்.”

“நான் அப்படிப்பட்ட திருடன் அல்ல.”

நான் சிரித்தேன். அவள் கதவைத் தாளிட்டுக்கொண்டாள். இச் சமயம் என்னுடைய வீட்டிலேயே நான் நுழைய முடியாமற் போயிற்று.

மோட்டார் டிரைவரைப் போகச் சொல்லிவிட்டு, நான் ஒருபுறம் ஒளிந்திருந்தேன். சிறிது நேரம் கழித்து அவள் கதவைத் திறந்துகொண்டு தன் வீட்டை நோக்கிச் செல்வாள் என்று எனக்குத் தெரியும். அப்படியே நடந்தது. பதினைந்து நிமிஷம் கழித்துக் கதவு திறந்தது. வெளியில் வந்து நாற்புறமும் சுற்றிப் பார்த்தாள். பிறகு கதவை மூடிக்கொண்டு ராயப்பேட்டையை நோக்கி நடந்தாள். நானும் அவளுக்குப் பின்னாலேயே சென்றேன். மாடர்ன் ஹிந்து ஹோட்டலுக்கு எதிரில் நின்றாள், சுற்றுமுற்றும் பார்த்தாள். பிறகு சடக்கென்று உள்ளே நுழைந்தாள். அவள் மதராஸில் வசிப்பவள் அல்ல. அவள் அன்றுதான் மதுரையிலிருந்து வந்தாள்.

(4)

அன்றிரவு எனக்குத் தூக்கமே வரவில்லை. தனிமை வாழ்வின் சாரமின்மை அப்பொழுதுதான் என் புத்திக்குத் தெரிந்தது. கண்ணை மூடினதும் அவளுடைய கனவே காணப்படுகின்றது. கடைசியில் நான் எழுந்திருந்து இங்குமங்கும் உலவ ஆரம்பித்தேன். திடீரென்று என் மனதின்கண், நாம் இந்த சம்பவத்தை வைத்து ஏன் ஒரு கதை எழுதக்கூடாது என்ற எண்ணம் உதித்தது.

இரவு முழுதும் உட்கார்ந்து என் கதையை எழுதி முடித்தேன். அக் கதையின் பெயர் “திருடனின் காதல்” என்று வைத்தேன். கதையின் சாராம்சத்தைப்பற்றிச் சொல்வானேன். நடந்தது நடந்தவாறே. கடைசியில் திருடனுக்கும் கதையாசிரியனுக்கும் யுத்தம் நடக்கிறது. அதில் கதையாசிரியன் மடிந்துவிடுகிறான். திருடனே அப் பெண்ணைக் கலியாணம் செய்துகொள்ளுகிறான்.

மறுநாள் தபாலில் ஸ்திரீயின் கையெழுத்துள்ள ஒரு கவர் வந்தது. எனக்கு மிகுந்த ஆச்சரியம் உண்டாயிற்று. அவசரம் அவசரமாகக் கவரை உடைத்து, அதனின்றும் கடிதத்தை எடுத்துப் படித்தேன்.

13, மாடர்ன் ஹிந்து ஹோட்டல்,
ராயப்பேட்டை, ஹைரோடு.

மகா-ள-ள-ஸ்ரீ
மோஹன் சர்மா அவர்கள்,
23, பெரம்பூர் ரோடு,
புரசைவாக்கம்.

மானனீய ஆசிரியர் அவர்களே!

தங்களுக்கு என்னை இன்னாளென்று தெரியாது. ஆனால் நான் தங்கள் பெயரைக் கிளிபோன்று சதா அரற்றிக்கொண்டிருக்கிறேன். தாங்கள் இதுவரை எழுதின கதைகள் முழுவதையும் படித்துவிட்டேன். ஒருதடவை அல்ல—அநேகந் தடவை. எவ்வளவு முறை படிக்கின்றேனோ அவ்வளவுக் கவ்வளவு அதன் ஆனந்தம் அதிகரிக்கிறது. தங்களிடம் என்னுடைய முறை இதுவே. தாங்கள் இன்னும் அதிகமாக ஏன் எழுதுகிறதில்லை? தாங்கள் வருஷம் முழுமையிலும் எழுதும் கதைகளை ஒரு மாதத்திற்குள் மூன்று முறை படித்து முடித்துவிடுகிறேன். அவைகளைக் கதை என்று சொல்வதோ அல்லது மந்திரக்கோல் என்பதோ தெரியவில்லை அவைகளைப் புகழ்வதற்கும் நான் தகுதியற்றவள். நான் தங்களுடைய தரிசனத்திற்காக மதுரையிலிருந்து இவ்வளவு தூரம் சென்னைக்கு வந்திருப்பதிலிருந்தே என் மனப்பான்மையை அறிந்துகொள்வீர்கள்.

நான் இந்தக் கடிதத்தை எழுதித் தங்களுக்குத் தொந்தரை கொடுக்க விரும்பவில்லை, ஆனால் நேற்று நடந்த ஒரு நிகழ்ச்சியினால் எழுதவேண்டி நேர்ந்தது. நேற்று சாயந்திரம், பீப்பிள்ஸ் பார்க்கில் உலவச் சென்றேன். அங்கே ஒரு திருடனைச் சந்தித்தேன். அவன் என்னைத் துன்புறுத்த ஆரம்பித்தான். நான் அவனை மிரட்டி, “என்னை யார் என்று நினைத்துக்கொண்டாய்? நான் ஸ்ரீ மோஹன்

"சர்மாவின் பத்தினியாகும்" என்றேன். அப்படியாவது அவன் பயந்துகொண்டு ஓடிப்போகட்டும் என்று இந்தப் பொய்யைச் சொன்னேன். ஆனால் அவன் சிறிதும் பயப்படவில்லை ஆனால் என்னையும் தன் காரில் உட்கார வைத்துக்கொண்டு, தங்கள் வீட்டுக்குக் கொண்டுவந்து சேர்த்தான். அப்பொழுது வேறு வழியில்லாமல் தங்கள் வீட்டிற்குள் நுழைய நேர்ந்தது. தங்கள் வீட்டுத் திறவுகோலும் அவனேதான் கொடுத்தான். அவன் சென்ற பிற்பாடு நான் கதவைப் பூட்டிக்கொண்டு, நான் தங்கியிருந்த ஓட்டலை அடைந்தேன்.

என்னுடைய இந்தக் குற்றத்திற்காகத் தங்களை மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன். என் நிலைமையை அனுசரித்து அப்படிச் செய்ய வேண்டியதாயிற்று.

நான் தங்களுக்கு மற்றொரு தொந்தரை கொடுக்கிறேன். இரவு முழுதும் எனக்குத் தூக்கம் வராததால், நான் ஒரு கதை எழுதினேன். அதன் பெயர் "கதை ஆசிரியன் காதல்." நான் இதுவரை கதைகள் எழுதி வழக்கமில்லை. இதுவே முதல் முயற்சி. முதலாவது சம்பவங்களே என் மனதிற்கு எட்டுவதில்லை. ஆனால் நேற்று நடந்த சம்பவம் அபூர்வமாயிருந்தது இக் கதையிலுள்ள பிழைகளைத் திருத்துவதற்காகத் தங்களிடம் அனுப்பியிருக்கிறேன். நான் தங்கள் பெயரை இழுக்குரைத்ததற்காக என்னை மன்னிக்கவேண்டும்.

இன்று சாயங்கிரம் தங்களது தரிசனம் பெறுமாறு தங்களிடம் வந்து, எனது வெகு நாளத்திய ஆவலை நிறைவேற்றிக்கொள்கிறேன்.

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள
ராஜம்.

கடிதத்தைப் படித்த பிறகு கதையைத் திறந்தேன். கதை மிகவும் சிறியதே. நான்கு பக்கங்களுக்கு மேலில்லை ஆனால் மிக இனிமையாயிருந்தது. கதையின் சாராம்சம் என்னுடைய கதைபோலவே. ஆனால் முடிவுமாத்திரம் வேறு—அதாவது கதையாசிரியன் திருடனைக் கொன்றுவிட்டு, பெண்மணியை மணந்துகொள்கிறான். இவ்வளவுதான் வித்தியாசம். நான் நன்றாகச் சிரித்தேன். என்னைப் பொறுத்தமட்டில் இரண்டும் ஒன்றே. ஆனால் அவள் என்னைக் காதலிக்கிறாள் என்று வெட்டவெளிச்சமாயிற்று திருடன் என்ற ஹோதாவில் இல்லாவிட்டாலும், கதையாசிரியன் என்ற ஹோதாவிலாவது என்னை நேசிக்கிறாள் அவளுடைய கடிதத்தைப் பன்முறை படித்தேன். கடிதத்தைப் படிக்கப் படிக்க "இவள்தான் அவள், இவள்தான் அவள்" என்று எழுதியதுபோலிருந்தது. எனது காதுகளிலும் "இவள்தான் அவள்" என்ற சத்தம் கேட்டது காற்

றும் மெதுவாக வீசிக்கொண்டே "அவள்தான் இவள்" என்று சொல்லிற்று என் இருதயம் மார்பில் தக் தக் என்று அடித்துக்கொண்டே "அவள்தான் இவள்" என்று சொல்லிற்று. ஆனால் இதுவரை என் வாயிலிருந்து இந்த வார்த்தையை உச்சரித்ததேயில்லை. இன்று முதல் முதல் என்னையே அறியாமல் என் வாயிலிருந்து "ஆம். இவள் தான் அவள்" என்றும் கிளம்பிவிட்டது.

(5)

அன்றைய தினம் எனக்கு ஒரு யுகம்போலவிருந்தது. நாங்கள் சந்தித்து 24 மணி நேரங்கூட ஆகவில்லை. அதற்குள்ளாக நான் வருஷக் கணக்கான சிநேகிதனைப்போல் எதிர்பார்த்தவண்ணமாய்க் காத்துக் கொண்டிருந்தேன்.

சாயங்கிரம் ஆயிற்று. "அவர் வந்துவிட்டார்" என்று என் வேலைக்காரன் சொன்னான்.

"அவளை என் படிப்பு அறையில் உட்கார்த்துவை. பிறகு உன் அறைக்குச் சென்றுவிடு. எப்பொழுது உன் அறையில் மின்சார மணியோசை கேட்கிறதோ அப்பொழுது இந்த மாதப் பத்திரிகைப் பாக்கெட்டை வெளியிலிருந்தவாறே படிக்கும் அறைக்குள் போட்டுவிடு" என்று கட்டளையிட்டேன். அவனும "நல்லது எஜமான்" என்று சொல்லிச் சென்றான். "சந்திரா" என்னும் மாதப் பத்திரிகையின் அதே மாதத்திய சஞ்சிகையில் அட்டையின் மேல் எனது படம் அச்சிடப்பட்டிருந்தது. அதுவே நான் வேலைக்காரனிடம் கொடுத்தது. நான் இதுவரை என் படத்தை அச்சிடக் கொடுத்ததேயில்லை. ஆனால் இந்த சஞ்சிகை "விசேஷ வெளியீடு" ஆன காரணத்தால் கொடுக்கவேண்டி நேரிட்டது.

இவ்வளவு ஏற்பாடுகளையும் செய்துவிட்டு, நான் மாடியினின்றும் கீழே இறங்கினேன். என் படிப்பு அறையில்தான் மெத்தைப் படி இருக்கிறது. அவள் சிந்தையிலாழ்ந்து ஒரு நாற்காலி மீது வீற்றிருந்தாள். கால் அடிகளின் ஓசை கேட்டவுடனே திடுக்கிட்டாள். தடபுடலாக எழுந்திருந்து மெத்தைப் படியை நோக்கினாள். அவளுடைய ஆச்சரியத்திற்கு எல்லையும் உண்டோ? நான் அவ்விடத்திற்கு வருவேன் என்று அவள் கனவிலும் கருதவில்லை.

"நீரா" என்று சத்தமிட்டாள்.

"ஆம், நான்தான்."

"இங்கே எப்படி வந்தீர்?"

"திருடர்கள் ரகசியங்களை எப்பொழுதும் வெளியிடமாட்டார்கள்."

"இங்கே என்ன செய்துகொண்டிருக்கிறீர்?"

"உன்னைத் தேடிக்கொண்டிருந்தேன். உன்னை மறுபடியும் பார்க்க வேண்டுமென்ற ஆசை யுண்டாயிற்று."

"இப்பொழுது என்னைப் பார்த்துவிட்டீரல்லவா? நல்லது போம்."

"ஏன் இவ்வளவு அவசரம்?"

"என் புருஷர் இப்பொழுது வருவார்."

"அவர் வருவதற்கு இன்னும் ஒரு மணி நேரமாகும்."

"உமக்கென்ன தெரியும்? நாங்கள் ஒரு விஷயத்தைப் பற்றிப் பேச வேண்டும். அவர் இப்பொழுதே வருவார்."

"இல்லை! இப்பொழுது வரமாட்டார். கதையாசிரியர்களின் சாபமே இது. இப்பொழுது அவர் கதை யெழுதுவதில் மூழ்கிக் கிடப்பார். அது முடியாதவரையில் கிளம்பமாட்டார்."

"இதெல்லாம் உமக்கெப்படித் தெரியும்."

"நான் இப்பொழுதுதான் அவரிடத்திலிருந்து வருகிறேன்?"

"அவரிடத்திலிருந்தா? அங்கே எதற்காகப் போயிருந்தீர்."

"ஒரு கதை யெழுதினேன். அதைக் காட்டச் சென்றேன்."

"கதையா? உம்முடையதா?"

"உன் வார்த்தைக்கிணங்கி இரவில் ஒரு கதை எழுதினேன்."

"எனக்குக் காட்டமாட்டீரா?"

கதையை அவள் கையில் கொடுத்தேன். அதைப் படித்தாள்.

"இதுதான் உமது கதையோ! இதுதான் அதன் முடிவோ?"

"வேறு ஒன்றும் எனக்குப் புலப்படவில்லை."

"நானும் இரவில் ஒரு கதை எழுதினேன்."

"கதை யாசிரியன் காதலா?"

"உமக்கெப்படித் தெரியும்?" என்று திடுக்கிட்டுக் கேட்டாள்.

"உன் கணவனிடமிருந்து திருடிக்கொண்டு வந்தேன்."

"நீர் அதைப் படித்துவிட்டீரா, என்ன?"

"இல்லை, இதுவரை படிக்கவில்லை. இப்பொழுது படிக்கப் போகிறேன்."

"வேண்டாம் வேண்டாம். அது உமக்கு உதவாது. என்னிடம் திருப்பிக் கொடுத்துவிடும்."

நான் கதையைப் பிரித்துப் படிக்க ஆரம்பித்தேன். அதற்குள் என் அருகில் வந்து "கொஞ்சம் பொறும்" என்றாள்.

"ஏதாவது சொல்ல வேண்டுமா?"

"நான் உம்மிடம் ஒரு ரகசியத்தை வெளியிட விரும்புகிறேன்."

"ரகசியம்! சொல் கேட்கிறேன்."

"நான் மோஹன் சர்மாவின் பத்தினி அல்ல"

"உண்மையா?"

"நிஜமாகவே இதுவரை நான் உம்மிடம் பொய் சொன்னேன்."

"உனக்கு இன்னும் கலியாணமாகவில்லை என்பதைக் கேட்டு எனக்கு மிகுந்த சந்தோஷம் உண்டாயிற்று. நான் உன் கதையைப் படித்துவிட்டேன்."

"படித்துவிட்டீரா!"

"ஆம்."

"அப்படியானால் எல்லாவற்றையும் முன்பே அறிந்துகொண்டீரா."

"ஆம்."

"பின் இவ்வாறு ஏன் பொய் பேசினீர்."

"உன் வாயாரக் கேட்பதற்காகவே."

"நல்லது நீர் இப்பொழுது போகலாம். நான் மோஹன் சர்மாவிடம் அவசியம் பேச வேண்டும்."

"என்னை ஏன் இவ்விடத்தினின்றும் போகச் சொல்லுகிறாய்? நான் நீ சொன்னவாறே கதையும் எழுதிக்கொண்டு வந்திருக்கிறேன். உனக்கும் கலியாணமாகவில்லை. என் கதையின் முடிவு உண்மையாக ஏற்படக்கூடாதோ?"

"நீரும் என் கதையைப் படித்துவிட்டீர். என் கதையின் முடிவும் உண்மையாகக் கூடாதோ?"

"அதைத்தான் விரும்புகிறாயா?"

"ஆம்."

"இதன் பொருள் என்னவென்றால் நீ மோஹன் சர்மாவின் மேல் காதல் கொண்டிருக்கிறாய்?"

"ஆம்."

"நல்லது" என்று சொல்லிவிட்டு நான் அறையில் இங்கும் அங்கும் உலவ ஆரம்பித்தேன். அவள் எனக்குச் சிறிது தேறுதல் சொல்லும்பொருட்டு,

"நீர் என்ன என்பதும் யார் என்பதும் எனக்குத் தெரியாது, நீர் என் மனதிற்கு மிகவும் பிடித்திருக்கிறீர். ஆனால் நான் மோஹன் சர்மா என்ற பெயரின்மேல் மோகத்தை யடைந்திருக்கிறேன்."

"நீ எப்பொழுதாவது மோஹன் சர்மாவைப் பார்த்திருக்கிறாயா?'

"இல்லை."

"அவருடைய படத்தையாவது பார்த்திருக்கிறாயா?"

"இல்லை."

"அவர் எப்படி இருப்பார் என்பதாவது உனக்குத் தெரியுமா?"

"இல்லை."

"அவர் நன்றாகவே இருக்கமாட்டார்."

"ஏன்?"

"நீ அவரை ஒரு முறை பார்த்தால் அவர்மேல் வெறுப்புக் கொள்வாய்."

"அவரிடத்தில் அப்படிப்பட்ட விஷயம் என்ன?"

"அவருக்கு வயது 50-க்கு மேலிருக்கும். முன் பற்கள் கிடையா. மூக்கின் மேல் ஒரு புருடு. முக்காற் பங்குத் தலை சொட்டை. ஒரு கையில் இரண்டு விரல்கள் வெட்டப்பட்டிருக்கின்றன."

"இன்னும் ஏதாவது உண்டோ?"

"உனக்கு இவ்வளவே போதாதா?"

"அவர் 100 வயதுக்கு மேலிருந்தபோதிலும் சரி, வாயில் உள்ள எல்லாப் பற்களும் போய்விட்டாலும் சரி, மூக்கின் மேல் 5 புருடுகள் இருந்தாலும் சரி, தலை முழுதும் சொட்டையா யிருந்தாலும் சரி, ஒரு கையில் என்ன? இரண்டு கைகளிலும் விரல்களே இல்லாத போதிலும் நான் என் எண்ணத்தை மாற்றமாட்டேன்."

"அவரிடத்தில் இவ்வளவு காதலா?"

"ஆம்."

"நான் மோஹன் சர்மாவாக இல்லாமல் இருப்பது என் துரதிர்ஷ்டம். இல்லாவிட்டால் என்னுடைய சகலத்தையும் உன்னைப் போன்ற சுந்தரியின் மேல் அர்ப்பித்துவிடுவேன்" என்று சொல்லிவிட்டு அவளுக்குத் தெரியாமல் மெதுவாக மணியடிக்கும் பித்தானை அழுத்தினேன். உடனே வேலைக்காரன் 'சந்திரா' பத்திரிகையை, இப்பொழுதுதான் தபாலிலிருந்து வருவதுபோல் உள்ளே போட்டான். நான் அதை எடுத்து உடைக்க ஆரம்பித்தேன். அதற்குள் அவள், "அவருடைய கடிதத்தை நீர் ஏன் திறக்கிறீர்?" என்றாள்.

"நான் படிக்கலாமென்று பார்த்தேன். ஆனால் நீதான் திறவேன். உனக்குப் பாத்தியமும் உண்டு" என்றேன். அவள் பத்திரிகையை உடைத்தாள். அட்டையின் மேல் என்னுடைய படம் அச்சிடப்பட்டிருப்பதைப் பார்த்து, அவளுக்குண்டான ஆச்சரியத்திற்களவில்லை. அந்த அறையில் திடீரென்று இடி விழுந்தால்கூட அவ்வளவு ஆச்சரியம் உண்டாயிராது. ஒரு முறை படத்தைப் பார்த்தாள், மறுபடி என்னைப் பார்த்தாள். மறுபடி படத்தைப் பார்த்தாள் மறுபடியும் என்னைப் பார்த்தாள். நான் அவளை நோக்கி நடந்துகொண்டே "என்னை ஏன் இவ்வாறு நோக்குகிறாய்?" என்று கேட்டேன்.

"அப்படியானால், நீர்தான் மோஹன் சர்மாவா?" என்றாள். அவள் கேட்டவிதம் இன்னவாறு என்று சொல்ல முடியாது. இப்படிப்பட்ட நிலைமையில் சிக்குண்டு அனுபவித்தவர்களே அறியக்கூடும்.

நான் என் கால் நகங்களைப் பார்த்துக்கொண்டே 'இல்லை ராஜம்! நான் இப்பொழுதும் அதே திருடன். நான் மோஹன் சர்மாவின் எல்லாவற்றையும் திருடிக்கொண்டேன். அவனது சரீரம், இருதயம், ஆத்மா எல்லாவற்றையும். உன்னைப் பொருத்தமட்டில் நான் இன்னும் அதே திருடன். ஏனெனில் நான் இன்னும் ஒரு வஸ்துவை—உனது உள்ளத்தைத் திருட விரும்புகிறேன்."

அவள் பேசாமல் தலையைப் பிடித்துக்கொண்டு நாற்காலியில் சாய்ந்துவிட்டாள். நான் நாற்காலியின் பின்புறமாக வந்து அவள் முகத்துக்குப் பக்கத்தில் என் முகத்தை வைத்துக்கொண்டு,

“ஏன் ராஜம், இப்பொழுது உனக்கு சந்தோஷந்தானே?”

‘சந்தோஷமா? ஆம்.........இல்லை.........ஆம். எனக்கு ஒன்றும் தெரியவில்லை.”

“ராஜம்! இன்று இவ்வுலகத்தில் என்னைப்போன்ற பாக்கியசாலி யார்? என்னைப் பார்க்காமல், என்னை இன்னாரென்று அறியாமல் என்னைக் காதலித்தாய். துருவ நக்ஷத்திரத்தைப்போன்ற திடமான காதல் கொண்டாய். ஆனால் நான் உன்னை ஒன்றுமட்டும் கேட்க விரும்புகிறேன். நம்மிருவருள் யாருடைய கதையின் முடிவு சரியானது! உன்னுடையதா? என்னுடையதா?”

“என் கதையின் முடிவுதான்” என்று வெட்கத்தோடு தலை குனிந்தவாறே மெதுவாகச் சொன்னாள்.

“ராஜம்! நான் உன்னிடம் ஒரு பிச்சை கேட்கிறேன். கொடுப்பாயா? மாட்டாயா?”

“என்ன?”

“நானும் நூற்றுக் கணக்கான கதைகள் எழுதியிருக்கின்றேன். ஆனால் ஒன்றாவது உண்மையான முடிவை அடையவில்லை. ஆனால் இந்தத் “திருடன் காதல்” என்னும் கதைக்கு உண்மையான முடிவைக் கட்ட விரும்புகிறேன். என்னுடைய ஆசையைப் பூர்த்தி செய்யமாட்டாயா? இப்பொழுது சொல்! யாருடைய கதையின் முடிவு சரியானது?”

“என் இருதயத்தைக் கொள்ளைகொண்ட திருடரே! உம்முடைய கதையின முடிவே சரியானது” என்று சொல்லிச் சிரித்துக் கொண்டே தன் கதையைத் துண்டு துண்டாகக் கிழித்தெறிந்தாள்.

சென்னைக் கடிதம்.

[மு. வேலி]

அன்பார்ந்த நண்பரே,

பொழுது விடிந்துவிட்டது; ஆனால் சிரிக்கும் சூரிய கிரணங்கள் இந்த ஆலமரத்தின் செங்கொழுந்துகளைத் தழுவிக் கொஞ்சவில்லை. அதோ, அந்த வாகை மரத்தைப் பாரும். அன்பனைக் காணாது மனஞ் சோர்ந்து தலை குனிந்து வாடுகிறது. அதன் ஒவ்வொரு இலையிலும் ஏமாப்பு வழிகிறது. இம் மரத்தை ஜனங்கள் தூங்குமூஞ்சி வாகை என்று அழைத்து, அதன் காதலைக் கேலி செய்கிறார்கள்.

ராத்திரி பூரா மழை சக்கை யடித்தது. அழுது ஓய்ந்த பின்னும் கண்ணீரின் சாயல் கண்ஆட்டில் ஒட்டிக்கொண்டிருப்பது போல, வான வெளியிலே மழையின் நிழல் இன்னும் தயங்குகிறது.

இந்த உபமானத்தை தாகூர் எங்கோ உபயோகப்படுத்தியிருப்பதாக ஞாபகம். இக் கவி இப்போது சென்னையில்தான் இருக்கிறார். நேற்று அவருடைய சொற்பொழிவுக்குப் போயிருந்தேன். சரியாக ஐந்தரை மணிக்கு வந்துவிட்டார். தளதளவென்று சிவந்த மேனி. அகன்ற நெற்றி. நார் போன்ற தலைமயிரும், தாடியும், மீசையும். சிறிய கண்கள் மிகக் கூர்மையானவை. நம்மைப் பார்க்கும்போது அவைகள் நம் நெஞ்சைத் துளைத்துக்கொண்டு உள்ளே உறங்கும் எண்ணங்களைக் காண்பன போன்றுளது. அவர் உடம்பிலே ஒரு நீண்ட குர்த்தா. இடுப்பிலே பஞ்சகச்ச வேஷ்டி. இரண்டும் தும்பைப் பூப்போல வெள்ளை. அவர் நின்றால் முதுகில் ஒரு வளைவு “74 வயதல்லவா? அவ்வளவு பாரம் எந்த முதுகையும் வளைத்துவிடும்” என்றான் என் நண்பன்.

உட்கார்ந்துகொண்டே பேசினார். பேச்சில் இனிமையும் கம்பீரமும் உறவாடுகின்றன. ஆனால் அவருடைய இங்கிலீஷ் உச்சரிப்பு சரியாக விளங்கவில்லை. ‘இங்கிலீஷ் அந்நிய பாஷை அப் பாஷை எனக்குச் சரியாகத் தெரியாது” என்றும் சொல்லிக்கொண்டார்.

பேசினாரென்றது தப்பு. அவர் முன்னமே எழுதிக்கொண்டு வந்ததை வாசித்தார். அதற்குப் பின் அவரெழுதிய இங்கிலீஷ் பாட்டு ஒன்றைப் படித்தார். ஒவ்வொரு வார்த்தையின் உச்சரிப்பிலும் உள்ளத்தில் எழும் உணர்ச்சி தொனிக்கிறது. அந்த பாட்டின் வங்காளி அசலையும் படித்தார். வெறும் கற்செக்கில் குழவி

அறிவும் தொழிலும்.

திரு. சாமி சிதம்பரனார் அவர்கள்.

ஆ! அறிவின் பெருமையை என்னென்று கூறுவது? அது மிகவும் திறமை வாய்ந்தது; அதன் ஆற்றலை யாராலும் அளவிட்டுக் கூற முடியாது; அதன் திறமை இத்துணைதான் என எவராலும் வரையறுத்துவிட முடியாது; அதன் வல்லமைக்கு அகப்படாத பொருள்—செய்தி—வேலை உலகில் ஒன்றுமே யில்லை; ஒரு காலத்தில் நம்மால் கண்டுபிடிக்க முடியாதவை—செய்ய முடியாதவை என்று எண்ணிக்கொண் டிருந்தவைகள், இக் காலத்தில் கண்டுபிடிக்கப்பட் டிருப்பதற்கும், செய்யப்பட் டிருப்பதற்கும் காரணம் அறிவேயன்றோ?

இப்பொழுது உலகில் நமது கண்முன் காணப்படும் செயற்கைக் காட்சிகள் யாவும் அறிவின் ஆற்றலால் விளைந்தவைகளே யாகும்.

யைப் போட்டுச் சுற்றுவது போல முதலில் அப் பாட்டின் சத்தங் கேட்டது. போகப் போக பாட்டின் தொனியில் இனிமையும் மென்மையும் இருப்பதாக எனக்குத் தோன்றியது.

கடைசியில் 'ஜன கண' என்ற பாட்டு. எல்லோரும் எழுந்து நின்றனர். பாடினவர்கள் ஒரு வாலிபரும் ஒரு சிறுமியும். வாலிபரின் பாந்த கரகரப்பான குரலும் பெண்ணின் கம்பி போன்று இழையும் சங்கமான நாதமும்—ஆகா, ரொம்ப ஜோர். பெண்ணின் குரல்—கரு மேகத்திடை விளையாடும் மின்னல்; கருப்பு வெல்வெட்டில் ஒளிக்கும் வைரம். இந்த இரண்டு குரலையும் சேர்த்தினதுதான் குஷி. அவர்கள் பாடிய 'ஜனகண'வில் பக்தி வழிகிறது. தமிழர்கள் அப் பாட்டை போர் முரசடிப்பது போல் பாடுகிறார்கள்.

கூட்டம் முடிந்த பின் சென்னை மாணவர்கள் 700 ரூ. கவி தாகூருக்கு அளித்தனர். இத் தொகை அவர் நடத்தி வரும் விஸ்வ பாரதி சர்வகலாசாலைக்குச் சேரும்.

அறிவின் வல்லமை யின்றேல், தானே இயங்கும் மோட்டார் வாகனங்கள் இயங்க முடியுமா? மக்களின் கூட்டுறவை வளர்க்கும் புகை வண்டிகள் ஓட முடியுமா? வழிச் செலவின் காலத்தைச் சிக்கனஞ் செய்யும் வான ஊர்திகள் பறக்க முடியுமா? இயந்திர மனிதனும், கம்பியில்லாத் தந்தியும், கம்பி யில்லாத் தந்தியின் மூலம் படம் பிடிக்கும் வியப்பும், ஆணைப் பெண்ணாக்குதலும், பெண்ணை ஆணாக்குதலும், கிழத்தை வாலிபமாக்குதலும் ஆகிய அதிசயங்களும் நடைபெறுமா? இன்னும் இந் நாளில் நிகழும் விஞ்ஞான விந்தைகள் யாவும் நடைபெறுதன்றோ? இவைகளெல்லாம் தோன்றி நடைபெறுவதற்குக் காரணம் அறிவும் அவ் வறிவின் மூலம் பிறந்த ஆராய்ச்சியும் உழைப்புமே யென்பதை மறுக்கவல்லார் யார்?

இத்தகைய சிறந்த அறிவு எல்லா மக்களிடத்தும் உண்டா என்றால் "உண்டு" என்றே நாம் கூறுவோம்; நமக்கு இதில் எள்ளளவும் ஐயமில்லை. ஆனால் சிலர், பிறர் கண்டு வியத்தற்குரிய அரிய செயல்களைச் செய்கின்றனர். தாம் தொடங்கிய செயல்களை இடையூறு நேராதவாறு வெற்றியோடு செய்து முடிக்கின்றனர்; எண்ணற்ற அரிய செய்திகளை அறிந்து கூற வல்லவராக விளங்குகின்றனர்; எந்தச் சிக்கலான செய்திகளைப் பற்றியும் ஆராய்ந்து ஐயமற முடிவு கூறுகின்றனர். இவர்கள் தாம் செய்யும் காரியங்களால் பெரும் பயனையும் பெறுகின்றனர். சிலர் எச் செயலையும் தாமே அறிந்து செய்யும் திறமையற்றவராக விளங்குகின்றனர்; விலங்குகளைப் போல—பறவைகளைப்போல—உண்ணுதலையும் உறங்குதலையுமே குறியாகக் கொண்டு வாழ்கின்றனர். தாமே புதிதாக ஒரு சிறு செயலைக்கூட அறிந்து செய்யாமல் இளமையிலிருந்து பழகிய சில வினைகளையே வழக்கமாகச் செய்து உயிர் வாழ்கின்றனர். இவ்விரு திறத்தினரில் முற் கூறியவர்களை அறிவுடையவர்களென்றும், பிற் கூறியவர்களை அறிவற்றவர்களென்றும் உலகினர் எண்ணுகின்றனர்; கூறுகின்றனர்; முறையே அவர்களை உயர்வாகவும் தாழ்வாகவும் கருதுகின்றனர்.

ஆனால் நாம் அவ்வாறு முற் கூறியவர்களை அறிவுடையவர்களென்றோ, பிற் கூறியவர்களை அறிவில்லாதவர்களென்றோ கூறுவதை உண்மையென ஒப்புக்கொள்ள மாட்டோம். இதற்கு மாறாக முற் கூறிய திறமையாளரை "அறிவு வளர்ச்சியுடையவர்" என்றும், பிற் கூறிய திறமையற்றவர்களை "அறிவு வளர்ச்சி குன்றியவர்கள்" என்றும் கூறினால் மட்டிலும் ஒப்புக்கொள்ளுவோம்.

மக்களால் செய்யப்படும் தொழில்கள் யாவும் அறிவின் துணை கொண்டு செய்யப் படுவனவே யாகும். வெறும் பழக்கத்தினால்

அறிவின் துணையின்றிச் செயல்கள் நிகழும் என்பது தவறு. இவ்வாறு வெறும் பழக்கத்தினால் நிகழும் வினைகள் உலகில் ஒன்றுமே யில்லை. எண்ணமும் அறிவும் இன்றேல் உலகில் எந்த வேலையும் நிகழ்வதற்கு இடமே யில்லை.

ஆனால் உலக மக்கள் இதற்குமாறாகவே நினைக்கின்றனர்; கூறுகின்றனர். சில செயல்களை அறிவின் துணை கொண்டு செய்யப்படுவன வென்று கருதுகின்றனர்? சில செயல்களை அறிவின் உதவியின்றி வெறும் பழக்கத்தினால் செய்யப்பட்டன வென்று நினைக்கின்றனர் சில வினைகளை நல்லன வென்றும், உயர்ந்தன வென்றும் கூறுகின்றனர்; சில வினைகளைத் தீயன வென்றும் தாழ்ந்தன வென்றும் கூறுகின்றனர். நல்லனவாகவும், உயர்ந்தனவாகவும் கருதப்படும் செய்கைகளை அறிவின் மிகுதியாற் செய்ததாகக் கொள்ளுகின்றனர். தீயனவாகவும், தாழ்ந்தனவாகவும் கருதப்படும் செய்கைகளை அறிவின் துணையின்றிச் செய்ததாகக் கொள்ளுகின்றனர். தொழிலில் உயர்வு தாழ்வு கற்பித்த இக் கூற்று "அறிவுடைய செயல்கள்" "அறிவற்ற செயல்கள்" என்று ஏற்படுவதற்குக் காரணமாயிற் றென்று உணரலாம். தொழில்—செயலில்—வினையில் உயர்வு தாழ்வுகள் இல்லை; எல்லாம் ஒத்தனவே என்னும் கொள்கை ஒப்புக்கொள்ளப்பட் டிருக்குமானால், மக்களுக்குள்ளும் "அறிவுள்ள மக்கள்" அறிவற்ற மக்கள் என்னும் கொள்கை அவ்வளவாக வலிமை பெற்றிருக்க முடியாது. இனி வினைகளில் உயர்வு தாழ்வு கற்பிப்பதற்குத் தக்க காரணங்கள் உண்டா என்பதைப் பற்றி ஆராய்வோம்.

மொழியில் வல்லவனாக ஒருவன் இருந்தால் அவனை அறிவுடையவன் என்று உலகம் கூறுகின்றது; அவனைப் புலவன், வித்துவான், பண்டிதன், கவிஞன், நாவலன், மேதாவி என்ற பல பெயர்களால் அழைக்கின்றனர். இவனை இவ்வாறு சிறப்பித்துக் கூறுவதற்குக் காரணம் என்ன? இவனிடம் உள்ள சிறந்த அறிவு என்ன? இவன் ஒரு சொல்லுக்குப் பல பொருள் கூறக் கற்றிருக்கிறான்; பல பொருள்களை உணர்த்தும் ஒருசொல் வரிசைகளையும் கற்றிருக்கின்றான். உதாரணமாக, "போனான்" என்ற ஒரு சொல்லுக்குப் பதிலாக, இதே பொருளுடன் "படர்ந்தான், சென்றான், கழிந்தான், நீங்கினான், ஏகினான், ஒரீஇனான், தவிர்ந்தான், கடந்தான், போந்தான்" என்னும் சொற்களை வழங்க அறிந்திருக்கின்றான். பாட்டுக்கள் இசைப்பதற்குரிய இலக்கணங்களை மனப்பாடம் பண்ணி யிருக்கின்றான். தான் அறிந்த சொற்களைக் கொண்டு கருதிய பொருளை வைத்து, தான் கற்ற இலக்கண விதிப்படிப் பாடல்களை அமைக்கின்றான. இதுதான் புலவனுடைய செயல். இச் செயலும் பல நாட்கள் வருந்திப் பழகியதன் மூலம் உண்டானதே யாகும். விளக்கிக்

கூற வேண்டுமானால் புலவன் பல சொற்களை அறிந்து "அகராதி" போல விளங்குகின்றான். மற்றவர்கள் பேசுவதற்குப் பயன்பட்டு வருகின்ற இன்றியமையாத குறைவான—ஆனால் போதுமான சொற்களை மட்டிலும் அறிந்திருக்கின்றனர்.

அடுத்தபடியாக ஒரு உழவன் இயல்பை ஆராய்ந்தால் அவன் தன் தொழிலில் அறிவு படைத்து விளங்குகின்றான் என்பது தெரியும். அவன் விதைகளின் பல வகைகளையும், அவைகளில் பழுதுள்ளவை இவை பழுதற்றவை இவை என்பதையும் அறிந்திருக்கின்றான். மண்ணின் தரங்களையும், இன்னின்ன தரமுள்ள நிலங்களில் இன்னின்ன தானியங்கள் நன்கு பயிராகு மென்பதையும் உணர்ந்திருக்கின்றான். தானியங்கள் பயிர் செய்யும் முறையையும் அறிந்திருக்கின்றான். பயிர் செய்த பின் அவைகளுக்குத் தண்ணீர் பாய்ச்சுங் காலம், களை பிடுங்கும் காலம், காய்ச்சல் வேண்டுங் காலம், அறுவடை செய்யுங் காலம் முதலியவற்றை அறிந்து அவைகளைத் தவறாமல் செய்து பலனடைகின்றான் ஆகவே இத்தகைய உழவனுடைய செயல் ஒவ்வோராண்டும் வழக்கமாக நிகழ்வதாக இருந்தாலும், அதற்கும், அறிவுக்கும் தொடர்பில்லை என்று கூற இயலுமா? இவன் செயலும் அறிவின் துணைகொண்டு நடைபெறுவதன்றோ?

அடுத்தபடியாக தச்சுத் தொழில், கொல்லத் தொழில், தட்டார வேலை, கொத்து வேலை முதலியவைகளைச் செய்யும் மக்களின் தன்மையைப் பாருங்கள்; அவர்கள் தமது வேலைகளுக்குப் பயன்படும் கருவிகளைக் கையாளும் முறைகளையும், அக் கருவிகளைச் செம்மையாக வைத்திருக்கும் வழிகளையும் அறிந்திருக்கின்றனர். ஒரு பொருளைச் செய்து முடிப்பதற்கு முதலில் அப் பொருளின் அளவு அதற்கு வேண்டிய சாதனங்கள், அதைச் செய்யும் முறை முதலிய வேலை நுட்பங்களை அறிந்து வைத்திருந்தால் அல்லது அப் பொருளைச் செய்து முடிக்க இயலாது. ஆகவே இத்தகைய நுண்ணறிவு இவ் வேலைக்காரர்களிட மின்றேல், இவர்கள் தம் தொழிலில் வெற்றி பெறுவது எவ்வாறு? இவர்களுக்கும் அறிவே தொழில் செய்வதற்குத் துணைபுரிகின்றதன்றோ?

அடுத்தபடியாகச் சமையல் வேலை செய்கின்ற ஒருவனையோ அல்லது பலகார வகைகள் செய்கின்ற ஒருவனையோ உற்று நோக்குங்கள்! மடைத் தொழில் என்பது சமையல் தொழில். இத் தொழில் செய்கின்றவருக்கு மடையர் என்பது காரணப்பெயர். மடமை என்பது அறிவின்மை. இவ் வறிவின்மையை யுடையவர் மடையர். ஆகவே மடையர் என்பது இரு பொருள் குறிக்கு

சொல்லா யிருத்தல் கொண்டு சமையல்காரத் தொழிலாளரைப் பரிகசிப்போருண்டு. ஆனால், சமையற்காரன் தனது தொழிலில் அறிவின்றி அதனைச் செய்தல் இயலாது. ஒவ்வொரு பதார்த்தங்களையும் சுவை பொருந்தச் செய்வதற்கு வேண்டிய துணைப் பொருள்களை எத்துணை அளவினவாகச் சேர்க்க வேண்டும். எந்தெந்தப் பண்டங்களைச் சேர்க்க வேண்டும் என்ற அறிவு இன்றியமையாததாகும். சேர்க்க வேண்டிய பண்டங்களில் குறைந்தாலும், சேர்க்கும் பண்டங்களின் அளவு கணக்கு வழக்கின்றிக் கூடினாலும் குறைந்தாலும் சமைக்கும் பதார்த்தத்தின் சுவை கெட்டுவிடும். பிறகு அப் பண்டம் ஒன்றுக்கும் உதவாமற் போய்விடுகிறது. ஆகவே இவ் வேலையை அறிவில்லாதான் கண்மூடித்தனமாகச் செய்வது எப்படி? இதற்கும் அறிவு இன்றி யமையாததன்றோ?

அடுத்த படியாக இயந்திர அறிவு படைத்த ஒருவனைப் பாருங்கள்! அவன் தான் பழகிய ஒவ்வொரு இயந்திர வகைகளின் உட்கருவி புறக் கருவிகளில் அமைந்துள்ள நுட்பங்களை நன்கு அறிந்திருக்கின்றான். எந்தெந்தக் கருவிகள் எந்தெந்த இடங்களில் எவ்வெவ்வாறு அமைந்திருக்க வேண்டும் என்பதைத் தெளிவாக உணர்ந்திருக்கிறான். ஆகவே, ஒரு இயந்திரம் கெட்டுவிட்டால், அதைப் பிரித்துப் பார்த்து, அதில் உண்டான குற்றத்தைக் கண்டு பிடிக்கிறான். எந்தக் கருவி உடைந்துவிட்டது, அல்லது வளைந்துவிட்டது, அல்லது தன் இடத்தை விட்டது என்பதைப் பரிசோதனையின் மூலம் கண்டுபிடிக்கின்றான். பின்னர் ஒரு கருவி உடைந்திருந்தால் அதற்கு மாற்றுக் கருவியும், வளைந்திருந்தால் அதைச் செப்பனிட்டும், இடம் மாறியிருந்தால் அதைச் சரிப்படுத்தியும் இயந்திரத்தைச் சீர்ப்படுத்துகின்றான். இச் செயல் அறிவின் துணையின்றி நிகழ்தல் கூடுமா? இத்தகைய தொழில் வல்லுநனை அறிவற்றவன் என்று கூறுதல் பொருந்துமா!

இவ்வாறே ஒவ்வொரு அறிவாளியையும், அதாவது தொழிலாளியையும் எடுத்துக்கொண்டால், எல்லாரும் அறிவாளிகளே, எல்லாரும் தொழிலாளிகளே என்று தெளியலாம். இதிற் சிறிதும் ஐயமில்லை. அறிவாளி என்பவன் வேறு; அறிவுக்கும் தொழிலுக்கும் தொடர்பில்லை என்று சொல்லுதல் பொருளற்ற மொழியாகும். அறிவாளிதான் தொழிலாளி; தொழிலாளிதான் அறிவாளி என்பதை ஆழ்ந்து நினைப்போர் யாரும் மறுக்க முடியாது.

ஆகவே, ஒரு புலவன், உழவன், தச்சன், கொல்லன், தட்டான், கொத்தன், சமையற்காரன், இயந்திரக்காரன் எவ்வாறு ஒத்த அறிவுடையவர்களாகத் திகழ்கின்றார்களோ அதுபோலவே, வைத்தியன், விஞ்ஞானி, ஓவியக்காரன், வியாபாரி, தோட்டக்

காரன், நெய்பவன், வாத்தியக்காரன், வாய்ப்பாட்டுக்காரன், கூத்தாடி போன்ற ஏனைய தொழில் வல்லுநர்களும் அவரவர்கள் தொழில்களில் அறிவுடையவர்களாகவே விளங்குதல் வேண்டும் என்பதை உணரலாம்.

இவ் வுண்மையை உணராதாரே, தொழில் என்பது கண்ணால் காணுவதன் மூலம் கையால் செய்து கற்றுக்கொள்ளுவது என்று தவறாக எண்ணினர். மனத்தில் பல விஷயங்களை அறிந்துவைத்து வாயினாற் கூறுதலைக்கூட நாவின் பழக்கம் என்று கொண்டனர். இக் கொள்கையின் மேல் எழுந்ததே,

> ‘சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்
> வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்—நித்தம்
> நடையும் நடைப்பழக்கம்........’

என்ற பாடலாகும். அறிவின்றிச் சித்திரந் தீட்டலும், திருந்திய சொற்களை அழகாகச் சேர்த்து எழுதுதலும் பேசுதலும், பல விஷயங்களைக் கற்று மனத் தமைத்தலும் நன்னெறி இது, தீநெறி இது என்று அறிந்து நன்னெறியில் ஒழுகுதலும் ஆகிய செயல்கள் எங்ஙனங் கூடும்? இச் செயல்கள் யாவும் அறிவின் துணைகொண்டு செய்யப்படும் செயல்களன்றோ?

ஆனால் இத்தகைய அறிவாளிகளில்—தொழிலாளிகளில் சிலர் தாம் கற்றிருக்கும் தொழிலின் முதிர்ந்த தேர்ச்சியினால் வேறு சில புதிய தொழில்களைக் கண்டுபிடிக்கின்றனர். இவ்வாறு புதிய தொழில்களைக் கண்டுபிடிக்கின்றவர்களைச் சிறந்த அறிவாளிகளென்று கூறுகின்றனர். ஆனால் இவர்களைச் சிறந்த அறிவாளிகள் என்று கூறுவதைக் காட்டிலும் சிறந்த உழைப்பாளிகள் என்று கூறுவதே பொருந்துமென்பது நமது கருத்தாகும்.

எடுத்துக்காட்டாக மோட்டார் இயந்திரத்தில் நல்ல தேர்ச்சியும், மிகுந்த பழக்கமும் உள்ள ஒருவன் இருக்கின்றான் என்று வைத்துக்கொள்ளுவோம். இவன், தான் அடிக்கடி கையாண்டு வரும் இயந்திரத்தைப்பற்றியும், அதில் அமைந்திருக்கும் கருவிகளின் நுட்பங்களைப் பற்றியும், வேலைத் திறமையைப் பற்றியும் இடைவிடாது சிந்திப்பதனாலும் அவனுடைய அறிவு முதிர்ச்சி பெறுகின்றது. இதனால், அவன் புதிய மோட்டார் ஒன்றையோ அல்லது குறைந்த கருவிகளுடன், சுருங்கிய செலவில், விரைந்து செல்லக்கூடியதான சிறந்த வேறு மாதிரியான மோட்டாரையோ செய்து முடிக்குந் திறமை பெறுவான். இதற்குக் காரணம் உழைப்பும் ஊக்கமும் அன்றோ? உழைப்பினாலும், ஊக்கத்தினாலும் அவன் அறிவு விசாலிக்கிறது.

மக்கள் செய்து வரும் தொழில்களை யெல்லாம் ஆராய்ந்து பார்த்தால், அவை முழுதும் ஜன சமூகத்தின் நன்மைக்குப் பயன் படுவனவாகவே காணப்படுகின்றன. மக்கட் கூட்டத்திற்குத் துணை நின்று உதவாத செயல்கள் பயனுடைய செயல்கள் அல்ல. அத்தகைய செயல்களை மக்கள் யாரும் செய்வதுமில்லை.

"சந்திர மண்டலத்தியல் கண்டு தெளிவோம்
சந்திரத் தெருப்பெருக்கும் சாத்திரங் கற்போம்"

என்று பாரதியார் கூறியபடி எல்லாத் தொழில்களும் மக்களின் நன்மைக்கே எழுந்தனவாகும். இவ்வாறு மக்களுக்கு உதவியாக இருக்கின்ற தொழில்களை உயர்ந்த தொழில்களென்றும், தாழ்ந்த தொழில்களென்றும், அறிவற்ற தொழில்களென்றும், அறிவுள்ள தொழில்களென்றும், நல்ல தொழில்களென்றும், கெட்ட தொழில்களென்றும் பிரிப்பது தகாது. சுயநலங்கொண்ட வஞ்சகர்களே தொழிலில் உயர்வு தாழ்வு கண்டு வகுத்துரைத்தனர் தொழிலில் உயர்வு தாழ்வு பாராட்டுவதாகிய இப்பாழுங் கொள்கை

"பிறப் பொக்கும் எல்லா வுயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யால்"

என்று திருக்குறளிலும் புகுந்து விட்டது வருந்தத் தக்கதாகும்.

தொழிலில் உயர்வு தாழ்வு கற்பித்ததனால் உண்டான தீங்குகள் எண்ணற்றவை. அவற்றை நினைத்தாலே அம்மம்ம! நெஞ்சம் வருந்துகின்றது. இதனால் தீய சாதிப் பாகுபாடு நுழைந்து இடம் பெற்றது. உயர்ந்த தொழில் என்று கருதப்பட்ட தொழில்களைச் செய்தவர்கள் உயர்ந்த ஜாதியினராயினர்; தாழ்ந்த தொழில் என்று கருதப்பட்ட தொழில்களைச் செய்தவர்கள் தாழ்ந்த ஜாதியினராயினர். அல்லாமலும், தொழில் வளர்ச்சியே நமது நாட்டில் அடியோடு குன்றியது. தொழில்களைப் பற்றிய கலைகள் தோன்றுவதற்கு இடமில்லாமற் போயின. தொழில் புரிவோர் தாழ்ந்த சாதியினரென எள்ளப்பட்டனர். தொழிலற்ற வாய்ப் பேச்சுக்காரர் சோம்பேரிகள் அறிவுடையவர்கள் என்று புகழப்பட்டனர். என்னே! கொடுமை!!

மேற் கூறியவற்றால் தொழில் வேறு, அறிவு வேறு என்னுங் கூற்றுத் தவறு என்பதை யறியலாம். அறிவும் தொழிலும் ஒன்றே என்பதை உணரலாம். தொழிலற்றோர் சோம்பேரிகளே யன்றி அறிவாளிகள் அல்லர் என்பதைக் காணலாம். ஆகவே தொழில் செய்வோர் எவராயினும், எத் தொழிலைச் செய்பவராயினும், அவர்களை அறிவிலார் என்று இகழாமல் எல்லோரும் அறி

ஸ்வாமி விவேகானந்தரின் கடிதங்கள்.

திரு K. வெங்கடராவ் அவர்கள்

(5)

சிகாகோ,
1895 ஜனவரி 11.

அன்புள்ள............

உம்முடைய கடிதம் இப்போதுதான் கிடைத்தது. ஏனைய மதக் கொள்கைகளைக் காட்டிலும் கிறிஸ்தவ மதக் கொள்கைகளே உன்னதமானதென்று நிலைநாட்டவே சர்வ மத பார்லிமெண்டு (சிகாகோவில்) கூட்டப்பட்டது; எனினும், ஹிந்து மதக் கொள்கைகள் தனது மேன்மையை நிரூபித்துக் காட்ட முடிந்தது. டாக்டர் ....ம் இவரது சகாக்களும் மிக மிக வைதீகப் பித்தர்கள்; இவர்களிடத்தில் உதவியை நான் நாடவில்லை. இந் நாட்டில் எனக்குத் துணைபுரிய அனேக நண்பர்களை பகவான் காட்டிக்கொடுத்திருக்கிறார். இவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரிக்கிறது. கடவுள் இவர்களைக் காப்பாராக!

இந் நாட்டிற்கு பாஸ்டன் நகரம் மூளை; நியூயார்க் பணப்பை. இவ் விரு நகரங்களில் ஒன்றை விட்டு மற்றொன்றுக்குப் பாய்ந்து கொண்டிருக்கிறேன். இந் நகரங்களில் எனக்கு மகத்தான மதிப்பும், செல்வாக்கும் இருந்துவருகிறது. பற்பல பத்திரிகைகள் என்னைப்பற்றி மனம்போல் எழுதி வருவதை நான் கவனிப்பதே கிடையாது.

உங்களுக்கு வேண்டிய புத்திமதிகளை ஏற்கெனவே கொடுத்திருக்கிறேன். உங்களால் செய்ய முடிந்ததைத்தான் எனக்குச் சுட்

வுடையார்களே என்று கருதித் தொழிலில் வளர்ச்சி பெறுவதே உலகம் நலம் பெறுவதற்கு வழி யென்பதை உணர்வோம்.

"காவியஞ் செய்வோம் நல்ல காடு வளர்ப்போம்
கலை வளர்ப்போம் கொல்லர் உலை வளர்ப்போம்
ஓவியஞ் செய்வோம் நல்ல ஊசிகள் செய்வோம்
உலகத் தொழில் அனைத்தும் உவந்து செய்வோம்."

—பாரதியார்.

டிக் காட்டுங்கள். மடத்தனமாகப் பேசிப் பேசிக் காலங் கழிப்பதையொழித்து உண்மைத் தொண்டில் ஈடுபடுங்கள்; ஹிந்துக்கள் இதைக் கற்கவேண்டும்; தொண்டாற்ற முடியாதவர்களுக்கு எந்த நலனும் கிட்டாது. நலனடைய அவர்கள் அருகர்களல்ல; என்னைக் கேட்டால் இதைத்தான் சொல்வேன். என்னைப் பொறுத்தமட்டில் நான் அறத்தைப் பரப்பவும், போதிக்கவும் ஈடுபடுவேன்; உலகின் எப்பாகமானாலும் அதைப்பற்றி எனக்கு அக்கறை கிடையாது.

உமக்கு விரோதமாகவோ, என்னைத் தூஷித்தோ, வேறெவரைத் தூற்றியோ போற்றியோ எவர் எப்படிப் பேசினாலும், அவற்றைப் பொருட்படுத்தாதீர். பணியாற்றுமின்! சிங்கத்தின் மனதைக் கொள்ளுங்கள். எவர்க்கும்—எதற்கும் வெருண்டிடா நெஞ்சுறுதி கொள்மின்! கடவுள் தவறாமல் ஆசீர்வதிப்பார். இறக்கும் வரையில் நான் சளையா துழைப்பேன். இறந்த பிற்பாடும் உலக நன்மைக்கே பணியாற்றி வருவேன். மறம் இலேசானது; அறம் பளுவானது. அதுபோலவே நல்ல குணமும். நற்குணங்களே ஒரு மனிதனை முன்னணியில் கொண்டு சேர்க்கும்.

அருங்குணாளர் ஆயிரக் கணக்கில் என்னை நேசிக்கின்றனர். ஆகையால் பகவான் பேரில் முழு நம்பிக்கை வைப்பீராக! பக்கம் பக்கமாகப் பத்திரிகைகள் வெளியிடுவதற்கு எதிரிடையாக நான் சிறுகச் சிறுக என் செல்வாக்கை ஆயிரம் மடங்கு அதிகமாக அபிவிருத்தி செய்துவருகிறேன்.

தூய்மை பொருந்திய குணம், பரிசுத்தம் இவைகளே மனிதனுக்கு ஓர் நவீன சக்தியளிப்பனவாகும். இவைகள் என்னிடம் பரிமளிக்கும் வரையில் நீர் என்னைப்பற்றி எவ்வகையிலும் கவலை கொள்ள வேண்டியதில்லை. எனது ஒரு தலைமயிர் நுனிக்கும் எவரும் தீங்கிழைக்க முடியாது! முடியாது!! விரோதிகள் எத்துணை பாடுபட்டாலும் இயலாது! இயலாது!! புஸ்தகப் படிப்பை மூட்டை கட்டி வையுங்கள்! வாய் வேதாந்தத்தையும் அடக்குங்கள். வாழ்வினைய நோக்குங்கள். உலகியலை யனுசரித்த உண்மைகளே மக்கள் மனதை நம் வழி திருப்பும். அருங் குணங்களால்தான் நம்மிடம் ஓர்வகை காந்த சக்தி—ஆகர்ஷண சக்தி தோன்றும். பகவான் எனக்குப் புதுப்புது ஆற்றலளித்து வருகிறார். ஆகையால் தொண்டாற்றுங்கள்! மடத்தனமாகப் பேசுவதை ஒதுக்கித் தள்ளுங்கள். பேசினால் பகவானைப்பற்றிப் பேசுங்கள். நமது ஆயுளோ வெகு வெகுக் குறைவு; பேசுவதற்குச் சாவகாசமில்லை; தொண்டாற்றுவோம்.

ஒவ்வோர் ஜன சமூகமும் தன் கையே தனக்குதவி யென்று தனக்குத்தானே உதவிக்கொள்ளவேண்டும்; அதுபோலவே மனிதனும்; பிறர் கையை எதிர்பார்ப்பது ஒருபோதும் கூடாது. இந்நாட்டில் நான் தளராமல் பாடுபட்டு அப்போதைக்கப்போது உங்கள் வேலைக்குப் பண உதவியளித்து வருவேன். என் உதவியையே பரிபூர்ணமாகச் சார்ந்திருந்தால், உங்கள் வேலையை நிறுத்திக்கொள்வதே சிறந்தது. எனது கொள்கைகளைப் பரப்ப எந்த மதத்தினரிடையே தொண்டாற்றுகிறேன் என்பது எனக்கு லக்ஷியமில்லை. ஹிந்துக்களோ, முகம்மதியர்களோ, கிறிஸ்தவர்களோ யாராயினும் சரி; கடவுளை எவரெவர் மனமார நேசிக்கிறார்களோ அவர்களெல்லோருக்கும் என் அன்புண்டு; அவர்களுக்காகத் தொண்டுபுரிவேன்.

படாடோபமில்லாமல் சாந்தமாகத் தொண்டாற்றி வருவேன்; பகவான் எப்போதும் என் கூடவே யிருந்து வருவார். உங்களுக்கு இஷ்டமிருந்தால் மன மொழி மெய்த் தூய்மையுடனும், பரிசுத்த மனத்துடனும், தன்னலத் துறவுடனும் தொண்டாற்றுங்கள்; எனது ஆசி எப்போதும் உமக்குண்டு. நாம் ஒருவரையொருவர் க்ஷேம சமாசாரம் விசாரிக்கவும், குலாவிக் காலங் கழிக்கவும் நமது வாழ்நாள் போதாது. போர் முடியுமட்டும் பேச்சு வேண்டாம்; தொண்டு செய்வோம். பேசிப் பேசிக் காலங் கழிக்காதீர்கள். நீங்கள் இந்தியாவில் என்ன கிரந்தமான வேலை செய்திருக்கிறீர்கள்? ஒன்றுமே யில்லையே! எங்கேனும் சிறந்ததோர் ஸ்தாபனம் நிறுவியிருக்கிறீர்களா? ஏதாவதோர் தேவாலயமோ, பொதுக் கட்டிடமோ கட்டி முடித்திருக்கிறீர்களா? உம்முடன் ஒத்துழைக்க எவரையும் நீர் வசியப்படுத்தினதாகத் தெரியவில்லையே! இதெல்லாம் விட்டு எப்போதும் பேசுவதே! வீணாகப் பேசுவதே!! நாம் மகா கெட்டிக்காரர்களெனச் சொல்லிக்கொள்கிறோம்; நம்மைப்போல் கையாலாகாதவர்கள் யாருமில்லை. வீண் கௌரவத்திற்கும், புகழ்ச்சிக்கும் வேட்டையாடித் திரிவதால் யாது பயன்? இவற்றைக் குறித்து எனக்கு அக்கறையே கிடையாது. நூற்றுக் கணக்கில் அன்பர்கள் இறைவனடி தேடவேண்டும். இதுவே நாம் வேண்டுவது. போற்றுதலைக் குறித்தும் புகழ்ச்சியைக் குறித்தும் பிரமாதமாகப் பேசுகிறீர்கள். இவற்றை வைத்துக்கொண்டு என்ன மாரடித்துக்கொள்வது? தொண்டாற்ற வேண்டும்! வாழ்வினை தொண்டிலிருக்கிறது. நீங்கள் இன்னும் என்னைச் சரிவர உணரவில்லை. எனது ஊக்கத்தையும், சுறுசுறுப்பையும் பெறவில்லை. பழைய மாதிரியே சுகத்தையனுபவிக்கவும், புகழ்ச்சியடையவும் உங்கள் மனம் நாடுகிறது. சுகத்தையும் புகழ்ச்சியையும் பாழுங் கிணற்றில் போடுங்கள். அக்கினிப் பிரவேசம் செய்யுங்கள்; இறைவனடிக்குப் பிறரையும் அறைகூவியழையுங்கள்.

பிரிவு.

திரு. ச. து. சுப்ரமண்ய யோகியாரவர்கள்.

உடலிருக்குதடீ—அமுதே
உயிரிருக்க வில்லை
மடலிருக்குதடீ—அமுதே
மணமிருக்க வில்லை. 1

கண்ணிருக்குதடீ—அமுதே
கண்ணின் மணியில்லை
பண்ணிருக்குதடீ—அமுதே
பாட்டு வரவில்லை. 2

ஆசையிருக்குதடீ—அமுதே
ஆனந்த மில்லையடி
நேசமிருக்குதடீ—அமுதே
நேர்மை யில்லையடீ. 3

வானமிருக்குதடீ—அமுதே
மதிய மில்லையடீ
நானுமிருக்குறண்டீ—அமுதே
ஞான மில்லையடீ. 4

உயிரிருக்கவில்லை—அமுதே
ஒளியிருக்க வில்லை
தயிரிருக்குதடீ—அமுதே
தண்மையதி வில்லை. 5

என் மனதில் கொழுந்துவிட் டெரியும் கனல் உங்கள் மனதிலும் பாயுமாக! மனத் தூய்மை உங்களை முன்னேற்றுவிக்குக! சுத்த வீரனைப்போல் போர்முகத்தில் இறப்பதையே நீங்களும் மனமாரப் போற்றி வாழ வேண்டிடும்,

உங்கள் அன்பன்
விவேகானந்தா.

தங்கக் கம்பி.

"சர்தார்."

குணசேகரன் வெகு புத்திசாலி. வகுப்பிலே முதன்மை ஸ்தானம் அவனதுதான். அடக்க ஒடுக்கமும் நிரம்பியவன். 'மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்' என்ற முதுமொழியைக் கைவிடவேமாட்டான். பெற்றார் உற்றாருடன் அபிப்பிராய பேதமேற்பட்டாலும் குறுக்கே ஒரு வார்த்தை பேசமாட்டான். பிறர் வருந்த ஒரு கடுஞ்சொற் கூறி அறியான். பெரியோர் மனம் வருந்தக் கூடாதென்று, அவர்கள் சொல்கிறவைகளையெல்லாம்—தனக்கு உடன்பாடாயினுஞ் சரி, இல்லாவிட்டாலுஞ் சரி—அனுஷ்டிப்பான். இவ்வளவு குண விசேஷமும் அறிவும் பொருந்திய குணசேகரனைப் போற்றிப் புகழாதோர் ஒருவருமில்லை. தங்கக் கம்பி யென்பதுதான் அவனது சிறப்புப் பெயர்.

'ஸ்கூல் பைனல்' பரீட்சையில் முதன்மையாகத் தேறின தன் மகனைக் கல்லூரிப் படிப்பிற்காகத் தலைநகருக்கு அனுப்பத் தீர்மானித்தார், சிவகுருநாதம் பிள்ளை. பெரிய இடத்துப் பிள்ளைகளெல்லாம் வந்து சேரும் மாகாணக் கல்லூரியில் சேகரனுக்கு எளிதில் இடம் கிடைத்துவிட்டது. மாணவர் விடுதிகளில் தலை சிறந்த மகாராஜா ஆஸ்டலிலும் சேர்த்துக்கொள்ளப்பட்டான். பெரிய மனிதர்களின் சகவாசத்திற்கு வேண்டியதை யெல்லாம் செய்துவைத்துவிட்டதைக் குறித்துப் பிள்ளையவர்களுக்குத் திருப்தி. மகன் தனது அந்தஸ்தைக் காப்பாற்றிக்கொள்வதற்கு வேண்டிய பணத்தையும் முதல் தேதி தவறாமல் தாராளமாக அனுப்பிவந்தார்.

தந்தை மகற்காற்றும் உதவியைச் செய்தாயிற்று. மகன் தந்தைக்காற்றும் உதவிதான் பாக்கி. அதைப்பற்றியோ அவருக்கு அணுவளவும் சந்தேகமில்லை. குணசேகரனது குணமும் அறிவும் அமைந்த மக்களைப் பெற்றவர்கள் அச்சப்படுவானேன்? சேகரன் பி.ஏ. பட்டம் பெற்று, உயர்ந்த சர்க்கார் உத்தியோகம் வகிப்பதைக் கண்ணாரக் காணவேண்டுமென்று பிள்ளையவர்கள் கொண்டிருந்த

நீண்ட நாளைய ஆவல் பூர்த்தியாகிவிட்டதாகவே அவருக்கு நினைப்பு. அவர் எய்தின மகிழ்விற்கு அஃதே ஒப்பு.

பள்ளிக்கூடத்தை விட்டுக் கல்லூரிக்குத் தாண்டும் பருவம் இளைஞர்களுக்கு ஓர் நெருக்கடியான காலம் என்றுதான் கூறவேண்டும். அவ் விளையப் பருவத்தில் பிள்ளைகளின் மனம் மெழுகு போல் மிருதுவானதாய், கண்டதும் கேட்டதும் அப்படியே ஆழப் பதியக் கூடியதாய் இருக்கும். அச் சோதனைக் காலம் பட்டணக் கல்லூரி மாணவர்களுக்குப், மகாராஜா ஹாஸ்டல் மாணவர்களுக்கும் சற்று கடுமையாகத்தா னிருக்கும். சத் விரதங்களை விடாது அனுஷ்டிப்போர் முதல், தான்தோன்றிகளாய்த் திரியும் பணக்காரர்கள் வரையிலுள்ளவர்களின் சேர்க்கை அவ்விரு ஸ்தாபனங்களிற் சேரும் இளைஞர்களுக்கு ஏற்படுவதுதான் அதற்குக் காரணம். அப் புடத்தினின்றும் அசல் தங்கந்தான் அழியாது வெளிவரும். அத்தகைய சோதனை விரைவில் சேகரனுக்கும் உண்டாயிற்று.

வகுப்பில் முதன்மை ஸ்தானம் வகித்த குணசேகரனிடம் மாணவர்கள் வந்து தங்கள் சந்தேகங்களைக் கேட்டுத் தெளிவர். அதனால் அவனது நண்பர்கள் பெருகினர். அவர்களில் முக்கால் வாசிப் பேர் பெரிய ஜமீந்தார்களின் புதல்வர்கள். ஜமீன் மைனர்களில் பெரும்பாலரின் சங்கதி உலகமறிந்ததுதான். அவர்களுக்கு இரண்டெழுத்து ஆங்கிலமும், மேனாட்டு நாகரிகத்தின் சக்கையும் சேர்ந்துவிட்டால், அப்புறம் கேட்கவேண்டாம்: குடி முதலிய நாகரிக ஆசாரங்கள் குடிபுகுந்துவிடும். அப்படிப்பட்ட கனிசமான பேர்வழிகள்தான் சேகரனின் நண்பர்களில் பெரும்பாலோர்.

ஓர் இரவு ஹாஸ்டலில் மாதாந்திர விருந்து நடைபெற்றது. விருந்தின் முடிவில் நாகரிகத்தின் சின்னமாகிய சிகரெட் பரிமாறப் பட்டது. மாணவர்கள் கொள்ளிவாய்ப் பிசாசுகளாக மாறினர். சேகரன் அதுவரை அவ் வித்தையைக் கற்றுக்கொள்ளவில்லை. எனவே தன் சிகரெட்டைப் பக்கத்திலிருந்த நண்பனுக்குக் கொடுத்தான். கொடுத்ததுதான் தாமதம்; 'மைனர்' நண்பர்களெல்லாம் ஒன்று சேர்ந்து அவனைக் கலாட்டா செய்யத் தொடங்கினர். தன் நண்பன் அவ்வளவு பெரிய கர்நாடகமா யிருப்பதற்காக அவனிடம் கோபித்துக்கொண்டான் ஒருவன். என்றைக்காவது ஒரு நாள் தமாஷுக்காகப் புகைப்பது தவறல்ல வென்று தீர்ப்புக் கூறினான் மற்றொருவன். மனிதனுக்குக் குஷால் உண்டுபண்ணும் சிகரெட்டை உபயோகிக்கக்கூடா தென்பது ஓர் மூட நம்பிக்கை யென்றான் வேறொரு குஷால் பேர்வழி. இச் சிறிய துர் அப்பியாசங்களாவது இல்லாவிட்டால் அது பெரிய துர் நடத்தைகளுக்குக் கொண்டுபோகு மென்றான் வேறொரு அனுபவசாலி. தங்கக் கம்பி

197903

யும் வளைந்துவிட்டது. வேண்டா வெறுப்பாய் அவ்வின்பத்தைச் சுவைத்துவிட்டான் குணசேகரன்.

நான்கே மாதங்களில் சேகரனிடம் பெரிய பெரிய மாறுதல்கள் நிகழ்ந்துவிட்டன. கோழி முட்டை, ஆட்டுக் கறி முதலியன அவனது சைவ பதார்த்தங்களாகி விட்டன. 'பிஸ்கட் பிராந்தி' முதலியவை தூநீர் ஆயின. தினம் இருபது உயர்தர சிகரெட்டுகளாவது புகைக்கவில்லை யென்றால் அவனது மூளை சத்தியாக்கிரகம் ஆரம்பித்துவிடும். வகுப்பின் முதன்மை ஸ்தானம் அவனை விட்டு நழுவிவிட்டது. இருந்தாலும் கெட்டிக்காரர்களில் ஒருவனாகவே இருந்து வந்தான். உற்றார் பெற்றோர்களிடமிருந்த பழைய மரியாதையை விட்டுவிடவில்லை. 'இந்தப் பூனையும் பால் குடிக்குமா?' என்று கேட்கத்தக்க முறையில்தான் அவர்களிடம் பழகி வந்தான். விஷயங்களை யறியாத பிள்ளை யவர்களும் திருப்தியாகவே வேண்டிய பணத்தை அனுப்பி வந்தார்.

நான்கு வருஷங்களுக்குப் பின் ஓர் பிற்பகல்; 'செனெட்' மண்டபத்தில் கறுப்பு அங்கி போர்த்த பட்டாளமொன்று கவர்னருக்கு சலாம் போட்டுக்கொண்டு போகிறது. தன் கை நோக இத்தனைப் பேருக்கும் சலாம் போடவேண்டி யிருக்கிறதே யென்று கவர்னரும் தலையிலடித்துக் கொள்கிறார். இவ்வளவு பெரிய பட்டாளத்திற்கு என்ன வேலை யிருக்கிறது என்று அவரது இதழ்கள் புன்னகை பூக்கின்றன. சட்டென்று கம்பீரமான ஓர் வாலிபனுக்குக் கைலாகு கொடுத்து ஒரு பதக்கத்தை அவனுக்குப் பரிசளிக்கிறார். இருவரும் ஏதோ முணுமுணுக்கிறார்கள். மண்டபத்தின் ஓர் மூலையில் உட்கார்ந்திருக்கும் கிழவர் சந்தோஷத்தை அடக்க இயலாமல் கைதட்டுகிறார். கூடியிருந்தவர்களெல்லோரும் கரகோஷஞ் செய்ய, பெருமிதத்தோடும் அளவிலா மகிழ்ச்சியோடும் தங்கப் பதக்கத்தை நண்பர்களுக்குக் காட்டிக்கொண்டே தன் ஆசனத்திலமர்கிறான் குணசேகரன் B. A. கிழவர் சிவகுருநாதம் பிள்ளை இரு துளி ஆனந்தக் கண்ணீர் பொழிகிறார்.

* * *

மேற்கூறிய சம்பவம் நடந்து ஐந்தாண்டுகளுக்குப் பின் ஓர் நாள் காலை அதிருப்தி ததும்பும் முகத்தோடு ஓர் வாலிபன் சென்னை 'எக்ஸிக்யூடிவ் என்ஜினீயர்' ஆபீசில் ஓர் மேஜையின் எதிரே வந்து உட்கார்ந்தான். வேலைக்காரப் பையன் ஆறுமுகம் மானேஜர் கொடுத்தனுப்பினதாக ஐம்பது ரூபாயை அவனுடைய மேஜையின் மேல் வைத்துவிட்டுப் போய்விட்டான். குணசேகரனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. சம்பள தேதிக்கும் இன்னும் பத்து நாள் இருந்ததால் மானேஜரிடம் போய் விசாரித்தான். கண்ட்ராக்டர்

ராமசாமி முதலியார் கொடுத்த மாமூலில் மூன்றாவது குமஸ்தாவின் பங்கு ஐம்பது ரூபா யென்று கூறினார் கிருஷ்ணசாமி ஐயர். சேகரன் தன் பங்கை ஏற்றுக்கொள்ள மறுத்தும் ஐயர் கேட்கவில்லை. 'மாமூலை வாங்கிக்கொள்வதில் ஒன்றுந் தப்பில்லை; எல்லோரும் எடுத்துக்கொள்ளும்போது நீ மாத்திரம் வேண்டாமென்றால் கண்ட்ராக்டர்கள் உன்னிடம் விரோதமும் சந்தேகமுங் கொள்வார்கள். அது என்றைக்கும் ஆபத்து' என்று பல புத்திமதிகளைப் புகன்றார். தங்கக் கம்பியும் ரூபாயை சட்டைப் பைக்குள் தள்ளிக் கொண்டது.

அடுத்த வாரம் சிவகுருநாதம் பிள்ளை யிடமிருந்து சேகரனுக்கு ஓர் கடிதம் வந்தது. தன்னால் இனி பணம் அனுப்ப முடியாதென்றும் சுய சம்பாத்யத்தைக் கொண்டு முன்னுக்கு வரவேண்டிய காலம் வந்தும் பழையபடி செலவு செய்துகொண்டு தகப்பனாரிடம் பணம் கேட்பது வெட்கக்கேடென்றும் எழுதியிருந்தார். பையனுக்கு உயர்ந்த உத்தியோகம் கிடைக்காததால் பிள்ளையின் மனமுடைந்துவிட்டது. தன் காலக்ஷேபம் ஏழு ரூபாயில் நடந்துவிடுகையில், மகனுக்கு 35½ ரூபா அதிகமென்பது அவரது புதிய நம்பிக்கை.

முப்பத்தைந்து ரூபா உத்தியோகமானாலும் குழாய் மாட்டி, கழுத்துச்சுருக்கு போட்டுக்கொண்டுதான் (ஆங்கிலேய உடையில் தான்) ஆபீஸிற்கு வரவேண்டுமென்பது சர்க்காரின் கண்டிப்பான உத்திரவு. காதலி கண்டு மகிழத்தக்க 'ஷோக்' பண்ணிக்கொள்ள வேண்டுமென்பது அவனது மனதின் கட்டளை. மற்றவர்கள் கண்டு பொறாமைப் படத்தக்க முறையில் தனக்கு உயர்ந்த ஆபரணங்களும் உடைகளும் வாங்கித் தரவேண்டுமென்பது காதலி கமலாவின் திடமான அபிப்பிராயம். அவனுடைய சிகரெட் முதலிய செலவுகளும் நடைபெற வேண்டும். இவ்வளவிற்கும் முப்பத்தைந்து ரூபாய் எப்படி போதும். வேறு வழியின்றி கண்ட்ராக்டர்களைக் கேட்டுப் பணம் பறிக்க ஆரம்பித்தான். அதற்கீடாக அவர்களுக்கு விசேஷ சலுகை காட்டிக் குறிப்புகள் எழுதி துரைக்கு அனுப்பி வந்தான்.

புதிய என்ஜினீயர் ஜோசப் துரை மிக்க கண்டிப்பானவர். தன் தகப்பனார் கண்ட்ராக்டரா யிருந்த காலத்தில் அவ் விலாகா பெருச்சாளிகளிடம் பட்ட கஷ்டங்களை யெல்லாம் நன்கு உணர்ந்தவர். ஆதலால் அப் பெருச்சாளிகளின் தொல்லைகளை யொழிப்பதே தன் வாழ்க்கையின் லக்ஷியமாகக் கொண்டுள்ளவர்.

ஒரு கண்ட்ராக்டருக்கு விசேஷ சலுகை காட்டிக் குறிப்பு எழுதினதற்காக, துரை வேலைக்கு வந்த ஒரு வாரத்திற்கெல்லாம், குணசேகரன் அவரிடம் சிக்கிக்கொண்டான். சேகரன் வேலைக்கு வந்து சில மாதங்களே ஆயினபடியால் அதனால் சாமர்த்தியமாகத் தப்பித்துக்கொள்ள முடியவில்லை. லஞ்சம் வாங்கிக்கொண்டு குறிப்பு எழுதினதாக வெளியாய்விட்டது குணசேகரனுக்குச் சீட்டுக் கொடுத்து அனுப்பிவிட்டார்கள்.

* * *

மாலை ஆறு மணி யிருக்கும். கமலா தன் காதலன் குணசேகரனின் வருகையை எதிர்பார்த்த வண்ணம் 'பீச்'சுக்குப் போக ஆயத்தமாய் உட்கார்ந்திருந்தாள். தபால்காரன் அவளுக்கு ஒரு கடிதத்தைக் கொண்டுவந்து கொடுத்தான். கையெழுத்து குணசேகரனுடையதாய் இருக்கவே வெகு ஆவலாய்ப் பிரித்தாள்.

"ஆருயிர்க் கமலா,

நாம் சேர்ந்து வாழப் பிராப்தமில்லை. மாதச் சம்பளம் என் செலவிற்குப் போதாமற் கஷ்டப்பட்டு வேறு வழியின்றி லஞ்சம் வாங்க ஆரம்பித்தேன். அதன் பலன் இன்று கிட்டிவிட்டது. வேலையினின்றும் நீக்கிவிட்டதற்காக யாரை நோவது? அயோக்கியனாகிய நான் உன் முகத்தில் எப்படி விழிப்பேன்? ஆகவே நான் 'பொடாஷியம் சைனைட்' விழுங்கிவிடத் தீர்மானித்து விட்டேன். இக் கடிதம் உன்னைச் சேர்வதற்குள் என்னுயிர் இவ்வுலகத் துன்பங்களை யெல்லாம் உதறித் தள்ளிவிடும். என் அயோக்கியத்தனத்தை மன்னித்துவிடுவாயாக. மறு பிறப்பிலாகிலும் உன்னோடு வாழும் பாக்கியம் கிட்டவேண்டு மென்று பிரார்த்தித்துக்கொண்டே இறக்கப்போகும்

உன் காதலன்

குண,

என்று படித்ததும் பொத்தென்று கீழே சாய்ந்துவிட்டாள்.

ஹரி ஜனங்களின் பொருளாதார நிலைமை.

திரு. ரா. ஸ்ரீ. ஸ்ரீகண்டன் அவர்கள், M. A.

3. மொய்.

முன்னுரை.

முன் ஒரு வியாசத்தில், ஹரி ஜனங்களுடையது ம் மற்றவர்களுடையதுமான செலவுகளில் ஒரு முக்கியமான அம்சம் 'மொய்' என்று கூறப் பட்டது. இந்தச் செலவு அடிக்கடி ஏற்படுவதுடன், எதிர்பாராத சமயங்களில் வந்து சேருகிறது. ஒவ்வொரு குடும்பத்துக்கும் தவிர்க்க முடியாததாகவும் இருக்கிறது.

எனினும் மொய் ஏற்பட்ட காலம் முதல் தலைமுறை தலைமுறையாக அது விசேஷமான நன்மையையே செய்து வந்திருக்கிறது. இப்பொழுது அதனுடைய அடிப்படையான கொள்கைகளை மீறுமலிருக்கும் பொழுதெல்லாம் அதனுடைய நன்மைகள் நன்றாகக் காணப்படுகின்றன.

மொய் என்றால் என்ன?

கடைசியில் அதனுடைய அடிப்படையான கொள்கைகள் தான் என்ன?

விவாக காலங்களில் எந்தக் குடும்பத்திலும் அதனுடைய வரும்படியை அனுசரித்துச் செலவு மிகவும் அதிகமாய் இருக்கிறது என்று சொல்லத் தேவை இல்லை. செலவுக்குப் பணம் கையில் இருந்தால் கஷ்டம் ஒன்றுமே இல்லை. ஆனால் சாதாரணமாக அப்படிப் பணம் குவிந்து கிடப்பது அரிது. எனவே, இம்மாதிரியான சமயங்களில் வேறு வசதி ஒன்றுமே இல்லாமற் போனால், கடன் வாங்கும் அவசியம் ஏற்படுகிறது. இது ஜனங்களை நேராக லேவாதேவிக்காரர்களிடம் சரணாகதி அடையும்படி செய்யும். இப்படிப் பல ஜனங்களும் அவர்களிடமே செல்வார்களே யானால், பெரும்பான்மையோர் சிறிய தொரு கூட்டத்தாருக்கு கைப்பட்டுப் போவதைத் தவிர வேறு வழியே இருக்காது.

நமது பெரியோர்களின் தீர்க்கதரிசனத்துக்கும், நமது சமூகங்களின் கட்டுப்பாட்டுக்கும் பெருமையைக் கொடுக்கக்கூடிய விஷயங்கள் பல இருக்கின்றன; அவைகளெல்லாவற்றிலும் தலை சிறந்தது இந்த மொய் என்ற திட்டத்தை அவர்கள் ஏற்படுத்தினது தான் என்று நான் நினைக்கிறேன்.

பொருளாதாரத் துறையில் 'பலர் ஒருவருக்காகவும் ஒருவர் பலருக்காகவும்' வாழ்வதென்பது தற்காலத்திய கூட்டுறவு இயக்கத்தின் பெருமையாகும். பழைய காலத்தில் இப்பொழுதைப் போல தொட்டதற்கெல்லாம் கூட்டுறவு முறைகள் கையாளப்பட வில்லை என்றாலும், இந்த மொய் என்ற வழக்கம் ஒருவிதத்தில் கூட்டுறவைச் சேர்ந்ததென்றே சொல்லலாம்.

(ஹரி ஜனங்களுக்குள்) ஒரு விவாகத்துக்கு 30 ரூபாய் செலவாகிறது என்று வைத்துக்கொள்வோம். நெருங்கிய பந்துக்கள், தூர பந்துக்கள், இஷ்ட மித்திரர்கள், ஜாதியைச் சேர்ந்தவர்கள்;— இவர்களெல்லாரும் விவாகத்துக்கு வந்திருந்து அதை நடத்திக் கொடுப்பதுமன்றி, ஒவ்வொரு குடும்பமும் பெரிதும் சிறியதுமான தொகைகளைக் காணிக்கையாக வைக்க வேண்டும். இந்தத் தொகைகள் 10, 5, 1 ரூபாயிலிருந்து 8, 4 அணா வரைக்கும் எது வேண்டுமானாலும் இருக்கலாம். எல்லாத் தொகைகளும் சேர்ந்து ரூ. 50 ஆகிறது என்று வைத்துக்கொள்ளுவோம். விவாகச் செலவெல்லாம் செய்த பின் ரூ 20 மிச்சமாகிறது: இதே மாதிரி மற்ற ஜாதிகளிலும் சாதாரணமாக வருமானங்களை அனுசரித்து விவாகச் செலவும் மொய்யும் அதிகமாக இருக்கலாம். ஆனால் மொய்த் தொகையானது விவாகச் செலவைக் காட்டிலும் எப்பொழுதும் அதிகமாகவே இருக்கிறது. எனவே விவாகத்துக்காகக் கடன் வாங்க வேண்டிய அவசியமே இல்லாமற் போகிறது.

ஆனால் இந்த மொய்த் தொகை யத்தனையும் இனமாக வந்ததன்று. எந்தக் குடும்பம் எந்தெந்தத் தொகையை மொய்யாக வைத்ததோ, அந்தந்தக் குடும்பங்களில் விவாகம் நடக்கும்போது அதே தொகையைத் திரும்பவும் மொய்யாக வைத்துவிட வேண்டும். ஆனால் அக் குடும்பங்களில் விவாகம் வெவ்வேறு காலங்களில் நடக்குமாதலால், இந்த மொத்தமாக வந்த மொய்த் தொகையைச் சிறுகச் சிறுகப் பின்னால் கொடுக்கும்படியான ஒரு சௌகரியம் ஏற்படுகிறது.

எனவே, மொய் என்பது பல ஜாதிகளில், விவாகாதி காலங்களில் வாங்கக்கூடியதும், பின்னால் சிறுகச் சிறுகத் திருப்பிக் கொடுக்கக்கூடியதுமான, வட்டி யில்லாத கடன் என்று ஏற்படுகிறது.

மொய்யால் ஏற்படும் இதர நன்மைகள்.

இந்தப் பொருளாதார நன்மையைத் தவிர வேறு நன்மைகளும் மொய்யால் ஏற்பட்டு வந்தன. அவைகளிற் சில வருமாறு:—

(1) விவாக காலத்தில் உற்றார், உறவினர் எல்லாரும் வந்து சேரும்படியான கட்டாயம் ஏற்படுகிறது. சமூகக் கட்டுப்பாடு குலையாமல் இருப்பதற்கு இது ஒரு பெரிய சாதனமாகிறது.

(2) விவாகமான தம்பதிகள் எல்லாருடைய அருளுக்கும் பாத்திரமாய் இருப்பதாக ஓர் எண்ணம் இதனால் உண்டாகிறது. வாழ்க்கையானது மிகவும் அனுகூலத்துடன் ஆரம்பமாவதற்கு இது ஒரு சாதனமாகிறது. இந்த உண்மை சமூகங்களிலிருந்து கொண்டு இதைக் கவனித்தவர்களுக்கு மற்றவர்களைக் காட்டிலும் எளிதில் புலப்படும்.

(3) விவாகமான பிறகு சாதாரணமாகக் கொஞ்ச காலம் வரையிலும் இரு குடும்பங்களுக்கும் செலவு சற்று அதிகமாகவே ஏற்படும். மொய்ப் பணத்தில் மிகுதியான தொகை இப்பொழுது பயன்படுகிறது.

எனவே, மொய் என்பது உண்மையாகவே ஜனங்களுக்கு நன்மையைச் செய்யக்கூடிய வழக்கமாய் இருந்தது. (இப்பொழுது அப்படி இல்லை.) புதிதாக மொய்யைப் பற்றிக் கேள்விப்படுகிறவர்கள் தினம் 4 அணா அல்லது 6 அணா சம்பாதிக்கும் ஒருவன் மொய்க்கென்று ரூ. 3 அல்லது 5. செலவிடுவதை அறிந்தால், 'இதென்ன அநியாயம்!' என்றே சொல்லக்கூடும். ஆனால் பிசகு இந்தப் பெரிய தொகையை மொய்யாக வைப்பதில் இல்லை; அது வேறு இடத்தில் இருக்கிறது என்று அறிந்துகொள்ள வேண்டும்.

இப்பொழுது மொய்யால் ஏன் தீங்கு ஏற்படுகிறது?

இத்தனை நன்மைகளைச் செய்து வந்த மொய் இப்பொழுது தீமையைச் செய்து வருகிறதென்றால் வருத்தப்படாமல் வேறென்ன செய்ய முடியும்? ஆனால் ஆங்கிலக் கவி டென்னிஸன் பாடி இருக்கிறார்.

"Old order changeth, yielding place to new;
And God fulfills himself in many ways,
Lest one good custom should corrupt the world."

(பழைய முறைகள் மாறிப் புதிய முறைகள் ஏற்படுகின்றன. ஒரே நல்ல வழக்கம் உலகத்தைக் கெடுத்துவிடாமலிருப்பதற்காகக் கடவுள் பல விதங்களில் தம் காரியங்களைச் சாதித்துக்கொள்ளுகிறார்.)

மொய்யானது ஒரு நல்ல வழக்கமாய் இருந்தது போய்த் தீய வழக்கமாய் மாறியதன் விவரங்களை இப்பொழுது கவனிப்போம்.

(1) சாதாரணமாக மொய் யென்ற வழக்கம் பெருஞ் செலவு ஏற்படும் காலங்களுக்கு மட்டும் உபயோகமாய் இருக்க வேண்டும். ஆனால் வரவர அது பலவிதமான சந்தர்ப்பங்களிலும் ஏற்பட்டுத் தொட்டதற்கெல்லாம் மொய் யென்று இப்பொழுது வந்துவிட்டது. இதனால் மொய் வைக்க வேண்டிய சந்தர்ப்பங்கள் அநேகம் ஏற்பட்டன. எனவே அதற்குப் பணம் கண்டுபிடிப்பதே கஷ்டம் என்ற நிலைமையை இப்பொழுது காணலாம்.

எப்படி மொய் பெருகிப் போயிற்று என்பது சற்று யோசித்தால் தெரியவரும். குஞ்சு குழந்தைகள் இருக்கும் வீடுகளில்தான் மொய் அடிக்கடி வாங்கவேண்டியிருக்கும். ஆனால் குழந்தைகள் இல்லாத வீடுகளில், மொய் வாங்கக்கூடிய சந்தர்ப்பமே இல்லாமற் போகிறது. என்றாலும், அவர்கள் மற்ற வீட்டாருக்கு மட்டும் விடாமல் மொய் வைத்துக்கொண்டே இருக்க வேண்டும். கடைசியில் பார்க்கப்போனால் மொய் என்பது ஒருவிதமான கடனே. இந்தக் கடனை மெம்மேலும் கொடுத்துக்கொண்டே இருந்து, அதைத் திருப்பி வாங்காமல் இருக்கக்கூடிய நிலைமை பரிதபிக்கக் கூடியதே. இது நீதியும் ஆகாது. எனவே இப்பேர்ப்பட்ட வீட்டார்களும் மொய் வாங்குவது சாத்தியமாய் இருக்கும்பொருட்டு காது குத்துதல், ஷஷ்டிபூர்த்தி, முடி இறக்குதல் முதலான யாவரும் அனுஷ்டிக்கக் கூடிய கொண்டாட்டங்களுக்கும் மொய் வைக்கும் வழக்கம் ஏற்பட்டது. இப் புது வழக்கம் மொய் என்ற ஸ்தாபனத்தால் ஏற்பட்ட அநீதியைப் போக்கடிக்கக்கூடிய ஒரு பரிகாரமே; ஆனால் காலக்கிரமத்தில், சாதாரணமாக எல்லாக் குடும்பங்களிலும் இது அனுசரிக்கப்படலாயிற்று. ஒரே வழக்கம் மிதமீறிப் போவதனால் ஏற்படும் தீமைகளை இப்பொழுது அனுபவிக்க வேண்டி இருக்கிறது.

(2) இந்தக் கெடுதலைக்கூட ஒருவிதத்தில் சமாளித்து விடலாம். ஆனால் இன்னொரு துர்வழக்கம் மொய் என்பதனுடைய அடிப்படையான கொள்கைகளையே மீறக்கூடியதாக ஏற்பட்டு விட்-

டது; அதனால்தான் இப்பொழுது சொல்ல முடியாத கஷ்டம் விளைந்து வருகிறது.

'எவ்வளவு பணம் மொய்யாக வருகிறதோ அதைக் காட்டிலும் மிகவும் குறைந்த தொகைதான் விவாகாதி காலங்களில் செலவாகி வந்தது. ஆனால் சில பணக்காரர்கள் தங்களுக்கு யாதொரு நஷ்டமுமில்லாமல் இந்த நல்ல கொள்கைகளை மீறலானார்கள். மனிதன் இயற்கையாகச் செலவு செய்து வேடிக்கை விளையாட்டுகளில் களிக்க விரும்புகிறவனாதலால், இந்தப் புது வழக்கம் சாதாரணமாகி விட்டது. இதனால் காலக்கிரமத்தில் மொய் வைக்கும் சக்தியும் குறையலாயிற்று. இந்தக் காரணங்களினால் இப்பொழுது மொய் வாங்கும் தொகையைக் காட்டிலும் செலவாகும் தொகை மிகவும் அதிகமாய்விட்டது. ஹரி ஜனங்களுக்குள் இப்பொழுது மொய் 20 ரூபாய் வருமானால் செலவு 40-க்கு மேல் போய்விடுகிறது. இது மெழுகுவர்த்தியை இரு புறங்களிலும் எரிப்பதற்கொப்பாகும். மொய் வைப்பதற்கும் கடன் வாங்க வேண்டி இருக்கிறது; கலியாணத்துக்கும் கடன் வாங்கவேண்டியிருக்கிறது. எனவே, மற்ற விஷயங்களில் எவ்வளவு ஜாக்கிரதையாக இருந்தபோதிலும், இந்த மொய் என்ற வழக்கம் ஜாதியில் இருப்பதனாலேயே மக்கள் கடனில் மூழ்கிப் போகிறார்கள். மற்ற ஜாதிகளிற் போலவே, ஹரி ஜனங்களுக்குள்ளும் இந்த வழக்கத்தால் மிகவும் கொடிய தீமைகள் ஏற்பட்டு வருகின்றன.

முடிவு.

எனவே மொய் என்ற வழக்கம் போகவேண்டியதே. அதைச் சீர்திருத்தி முன்போல் செய்வதென்பது இப்பொழுது சாத்தியமான காரியமன்று. என்றாலும், இது தொன்றுதொட்டு வந்த பழக்கமாய் இருப்பதுமன்றி, மொய் என்பது இல்லாமல் கலியாணமே சோபிதமில்லை என்ற எண்ணம் ஜாதிக்குள் வேரூன்றி விட்டபடியால், மிகவும் குறைந்த தொகையை,—அதுவும் கடன் வாங்காமலேயே கொடுக்கக்கூடிய தொகையை,—மொய்யாக வைக்கும் வழக்கத்தை அமுலுக்குக் கொண்டுவந்தால்தான் ஜனங்கள் ஈடேறுவார்கள். பணக் கஷ்டம் அதிகமாய் இருக்கும் இக் காலத்தில், "கலியாணச் செலவைக் குறை" என்ற பிரசாரம் காதில் ஏறாமல் இருப்பதும், ஆனால் மொய்யைக் குறைவாக வை," என்ற உபதேசத்துக்கு உடனே செவி சாய்ப்பதும் அனுபவசித்தமான விஷயங்கள்.

மனிதர் கடமை. *

[மாஜினி]

இத்தாலிய வேலைக்காரர்களுக்கு.

உங்களுடைய கடமைகளைப் பற்றிப் பேச விரும்புகிறேன். கடவுள், சமூகம், தாய் நாடு முதலிய அரிய விஷயங்களைப் பற்றி எனது உள்ளங் கூறுவனவற்றை உங்களுக்குச் சொல்ல விரும்புகின்றேன். அன்போடு உங்களிடம் பேச வந்திருக்கிறேன்; நீங்களும் அன்போடு கேளுங்கள். வருஷக் கணக்காகத் துன்பத்தை அனுபவித்தும், கூர்ந்து கவனித்தும், படித்தும் கண்ட முதிர்ந்த எண்ணங்களையே நான் கூறப் போகிறேன். நான் உங்களுக்கு எடுத்துக் காட்டப்போகிற கடமைகளை எனது சக்திக்கு இயன்ற அளவு இந்த உயிர் உள்ளவரையும் செய்ய முயற்சிப்பேன். நான் குற்றஞ் செய்யலாம்; ஆனால் என் உள்ளம் உண்மையானது. நான் என்னையே ஏமாற்றிக்கொள்ளலாம். ஆனால் உங்களை ஏமாற்ற மாட்டேன். ஆகையால் என்னை ஒரு சகோதரனாகப் பாவித்துக் கேளுங்கள். பிறகு நான் உண்மை பேசுகிறேனா என்பதை உங்களுக்குள்ளேயே தாராளமாக முடிவு செய்துகொள்ளுங்கள். நான் பொய்யானவற்றைப் போதிப்பதாகத் தோன்றினால் என்னைப் புறக்கணித்து விடுங்கள். ஆனால் நான் உண்மையையே உபதேசிப்பதாகத் தெரிந்தால், எனது உபதேசத்தைப் பின்பற்றி அதன்படி நடவுங்கள். அறியாமையாற் குற்றஞ் செய்வது பரிதபிக்கத் தக்கதே; ஆனால் உண்மையை அறிந்திருந்தும் அதன்படி நடக்காவிடில் அது வானும் மண்ணும் கண்டிக்கும் பெருங் குற்றமாகும்.

உங்களது உரிமைகளைப் பற்றிப் பேசுமுன் உங்களது கடமைகளைப் பற்றிப் பேசப் போகிறேன். தெரிந்தோ தெரியாமலோ சமூகத்தில் எல்லோரும் உங்களை நசுக்குகிறார்கள். மனிதனுக்குச் சொந்தமான உரிமைகளெல்லாம் உங்களுக்குச் சதா மறுக்கப்படுகின்றன; துன்பமே உங்கள் பாக்கியம்; இன்பமென்று அழைக்கப்படுவன

* பெ. தூரன் மொழிபெயர்த்தது.

வெல்லாம் வேறு வகுப்பு மனிதர்களுக்கே. அப்படியிருந்தும் நான் உங்களிடம் எதிர்த்துப் போராடி வெற்றி பெறுவதைப் பற்றிப் பேசாமல் ஆத்மப் பரித்யாகத்தைப் பற்றிப் பேசுகின்றேன்; லௌகிக சுகத்தைப் பற்றிப் பேசாமல் நேர்மையைப் பற்றியும், நீதியைப் பற்றியும், கல்வியைப் பற்றியும் பேசுகின்றேன். ஏன்? அதற்குக் காரணமென்ன? மேலே பேசப் போவதுடன் இந்தக் கேள்விக்கு நான் விடையளிக்க வேண்டும். ஏனெனில் இங்குதான் என்னைப் போன்றோர் நினைப்பதற்கும், வேறு சிலர் நினைப்பதற்குமுள்ள வித்தியாசம் தென்படுகிறது; மேலும் இந்தக் கேள்வியே கஷ்டத்தில் ஆழ்ந்துள்ள ஒவ்வொரு வேலைக்காரனுடைய மனதிலும் ஆங்காரத்தோடு பொங்கி முன்னெழுகின்றது.

நாம் ஏழைகள்; அடிமைகள்; சந்தோஷ மறியாதவர்கள்; மேலான லௌகிக சுகத்தையோ, விடுதலையோபற்றி எங்களிடம் பேசு. என்றும் துன்பத்திற்கே நாங்கள் பிறந்தோமா? அல்லது நாங்களும் சுகப்பட முடியுமா? அதை எங்களுக்குக் கூறு. எங்கள் எஜமானர்களுக்குக் கடமையைப் போதி; அனைவருக்கும் பொதுவான இன்பத்தைத் தாமே கொள்ளை கொண்டதோடு நிற்காமல், எங்களை இயந்திரங்களாக நடத்தும் மேல் வகுப்பினர்களுக்குக் கடமையைப் பற்றிப் பிரசாரம் செய். எங்களிடம் உரிமைகளைப் பற்றிப் பேசு; அவைகள் எங்களுக்கு உண்டென்று சாதிக்கும் வழிகளைப் பற்றிப் பேசு. நாங்களும் வாழுகின்றோம் என்று நிச்சயமாக ஏற்படட்டும்; பிறகு எங்களிடம் கடமைகளைப் பற்றியும் தியாகத்தைப் பற்றியும் பேசலாம். இம்மாதிரியாக நமது தொழிலாளர்களிற் பலர் கூறுகின்றார்கள்; அவ் விருப்பத்தை நிறைவேற்றும் பிரசாரகர்களையும், சங்கங்களையும் பின்பற்றுகிறார்கள். ஆனால் அவர்கள் ஒரு விஷயத்தை மறந்து விடுகிறார்கள்; அதாவது அவர்கள் விரும்பும் அக் கொள்கைகள் சென்ற ஐம்பது வருஷ காலமாகப் போதிக்கப்பட்டும் வேலை செய்யும் மக்களின் நிலைமையில் ஒரு சிறு அபிவிருத்தியையும் உண்டாக்கவில்லை என்பதே.

சென்ற ஐம்பது வருஷ காலமாக முன்னேற்றத்திற்காகவும், யதேச்சாதிகாரத்தையும் பரம்பரையான சீமான்களையும் எதிர்த்துச் செய்யப்பட்டனவெல்லாம் மனிதனின் உரிமைகள் என்ற பேராலேயே செய்யப்பட்டன; சுதந்திரத்தின் பேராலும், வாழ்க்கைச் சுகத்தின் பேராலும் நடைபெற்றன. பிரான்ஞ்ச் தேசப் புரட்சியிலும், அதற்குப் பின் உண்டான பல புரட்சிகளிலும் நடந்த எல்லாச் சம்பவங்களிலும் மனிதனின் உரிமைகள் என்ற பேராலேயே செய்யப்பட்டன. அவற்றை உண்டாக்கிய தத்துவ அறிஞர்கள் விடுதலை, உரிமை என்பனவற்றையே அடிப்படையாகக் கொண்டனர். புரட்சி ஸ்தாபனங்களெல்லாம், "மனிதன் சுகத்திற்கே பிறந்தான், தனது சக்திக்

கெட்டியவரை அதை அவன் தேட உரிமையுள்ளவன், அத் தேட்டத்தில் அவனைத் தடுக்க வேறு யாருக்கும் உரிமையில்லை, அவன் தனக்கேற்படும் எல்லாத் தடைகளையும் களைந்தெறிய உரிமையுள்ளவன்'' என்று போதித்தன. தடைகளெல்லாம் உடைத்தெறியப்பட்டன; விடுதலை வெல்லப்பட்டது. பல தேசங்களில் அது வெகு காலம் நீடித்திருந்தது; சிலவற்றில் இன்னும் நீடித்திருக்கிறது. ஆனால் மக்களின் நிலைமை மாறிவிட்டதா? நாள்தோறும் தங்கள் கைகளைக்கொண்டு உழைக்கும் கோடிக் கணக்கானவர்களுக்கு வாக்களிக்கப்பட்டு, அவர்களால் எதிர்பார்க்கப்பட்ட சுகத்தில் ஒரு சிறு பாகமாவது கிடைத்ததா?

இல்லை; மக்களின் நிலைமை மாறவே இல்லை. அதற்கு மாறாக ஒவ்வொரு தேசத்திலும் அவர்கள் நிலைமை மோசமாய்க்கொண்டே வருகின்றது; முக்கியமாக இங்கே வாழ்க்கைக்கு அத்தியாவசியமான பொருள்களின் விலை உயர்ந்துகொண்டே போவதனாலும், பல கைத்தொழில்களில் கூலி குறைக்கப்படுவதனாலும், ஜனத் தொகை அதிகப்படுவதினாலும் அவர்கள் நிலைமை மிகக் கேவலமாகவிருக்கின்றது. ஒவ்வொரு தேசத்திலும் தொழிலாளிகளின் வாழ்க்கை ஸ்திரமற்றதாகப் போய்விட்டது. ஒரு தேசத்தை விட்டு மற்றொரு தேசத்திற்கும், ஐரோப்பாவிலிருந்து உலகின் மற்றைப் பகுதிகளுக்கும் வருஷா வருஷம் அதிகம் பேர் குடி போவதும், தர்மார்த்தமான ஸ்தாபனங்கள் அதிகரிப்பதும், கதியற்றவர்களுக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்வதுமே இதை நிரூபிக்கப் போதுமானவை. இவற்றிலிருந்தே மக்களின் பரிதாப நிலைமை குறித்துப் பொதுவாக அனைவரும் வரவர அதிகக் கவனம் செலுத்துகிறார்களென்பதும், அதை அவர்களால் நீக்கக்கூடவில்லை என்பதும் தெரிகின்றன.

ஆயினும் சென்ற ஐம்பது வருஷங்களாகச் சமூகச் செல்வாக்கும், லௌகீக சுகங்களும அதிகரித்துக்கொண்டே வந்திருக்கின்றன. உற்பத்தி இரட்டித்து விட்டது. வியாபாரம் பரவித் தீவிரமாக நடைபெறுகின்றது. எங்கும் போக்குவரவு துரிதமாகவும், பந்தோபஸ்தாகவும் நடைபெறுகின்றது. குறைந்த செலவிலேயே பண்டங்கள் இடம் விட்டு இடம் கொண்டுபோகப்படுவதால் அவை விலை மலிந்துவிட்டன. மேலும் இன்று மனித இயற்கைக்கே இயல்பான உரிமை எண்ணங்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன; காரியத்தில் அவற்றைக் கை நழுவவிட நினைப்பவர்களுங்கூட வார்த்தையளவில் கபடமாக ஏற்றுக்கொண்டிருக்கின்றனர். பிறகு ஏன் மக்களின் நிலைமை மாறவில்லை? உற்பத்தியாகும் பொருள்களெல்லாம் எல்லோராலும் சமமாக ஏன் அனுபவிக்கப்படவில்லை? கைத்தொழிலிலும், வியாபாரத்திலும் உண்டான புது வேகம் பலருடைய சுகத்

திற்கும் ஏதுவாக இராமல் ஏன் ஒரு சிலருடைய ஆடம்பரத்திற்கே ஏதுவாகவிருக்கின்றது?

விஷயங்களை ஊன்றிக் கவனிப்பவர்களுக்குக் காரணம் தெளிவாக விளங்கும். கற்ற கல்விப்படியே மக்கள் நடப்பவர்கள். இவ்வளவை புரட்சிக்குக் காரண பூதர்களா யிருந்தவர்கள் தனி மனிதனுக்குச் சொந்தமான உரிமைகளையே அடிப்படையாகக் கொண்டார்கள்; புரட்சி விடுதலையை அளித்தது—தனி மனிதனுக்கு விடுதலை, பேச்சுச் சுதந்திரம், வியாபாரச் சுதந்திரம், எதிலும் சுதந்திரம். எல்லோருக்கும் சுதந்திரம் கிடைத்தது. ஆனால் உரிமைகளைச் சாதிக்க இயலாதவர்களுக்கு அவர்களுடைய உரிமைகளை ஒத்துக்கொண்டதனால் என்ன பிரயோஜனம்? பேச்சுச் சுதந்திரத்தால் பயனடைய அவகாசமும், வழியுமில்லாதவர்களுக்கு அதனால் என்ன பிரயோஜனம்? வியாபாரஞ் செய்யக் காசில்லாதவர்களுக்கு வியாபாரச் சுதந்திரத்தால் என்ன நன்மை? இந்தக் கொள்கைகளெல்லாம் பரப்பப்பட்ட தேசங்களிலே நிலமும் பணமும் உடையவர்கள் ஒரு சிலரே; தங்கள் இரு கைகளைத் தவிர வேறொன்றுமில்லாது அக் கைகளால் முன் சொன்ன வகுப்பினர்களிடம் வயிற்றுப் பிழைப்பிற்காக நாள் முழுதும் உழைத்துக் கொடுத்த கூலியைப் பெறுகின்றவர்களோ அநேகர். தீராப் பசியை எதிர்த்துப் போராடும் இவர்களுக்கு விடுதலை யென்பது வெறுந் தோற்றமே யல்லாது வேறென்ன? அது பயனுள்ளதாக வேண்டுமானால் செல்வந்தர்கள், வேலை செய்யும் நேரத்தைக் குறைக்கவும், கூலியை அதிகமாக்கவும், பொது மக்களுக்கு இலவசக் கல்வி புகட்டவும், அனைவருக்கும் வேலை அகப்படும்படி செய்யவும், உண்மையாய் உழைப்பவர்களுக்கும், திறமை வாய்ந்தவர்களுக்கும் வெகுமதி யளிக்கவும் இசைய வேண்டும். ஆனால் அவர்களேன் அப்படிச் செய்ய வேண்டும்? எல்லாவற்றிற்கும் மேல் லௌகிக சுகம் விரும்பத்தக்க தல்லவா? பிறர் நலத்திற்காகத் தங்கள் சுகத்தை அவர்கள் ஏன் குறைத்துக் கொள்ள வேண்டும்? கூடிமானவர்கள் தாங்களே சுகத்தைத் தேடிக் கொள்ளட்டும். சமூகம் மனித இயற்கைக்குப் பாத்தியப்பட்ட உரிமைகளை அவைகளைச் சாதிக்க முடிந்தவர்களுக்கு அளித்தானால் அதுவே போதும். யாராவது ஒருவன் தனது கேவல ஸ்திதியின் காரணமாக அவைகளைச் சாதிக்க இயலவில்லை யென்றால் அதற்காக அவன் பேசாது விலகியிருக்க வேண்டுமே யொழியப் பிறரைத் தூஷிக்கக் கூடாது. இப்படி அவர்கள் சொல்லுவது இயற்கையே. அதிர்ஷ்டத்தின் அன்பு பெற்ற இவ் வகுப்பினர் ஏழைகளைப் பற்றி இம்மாதிரி எண்ணுவதே போல் நாளடைவில் ஒவ்வொரு மனிதனும் பிறனொருவனைப் பற்றி எண்ணலானான். ஒவ்வொரு மனிதனும் பிறரைப் பற்றிச் சிறிதும் கவனியாது தனது உரிமைகளையும் அபிவிருத்தியையுமே கவனிக்கலானான்; இவன் உரிமைகள் பிறருடைய உரிமைகளுடன் மாறுபட்டபொழுது யுத்தம் ஏற்பட்டது; ரத்தஞ் சிந்தும் யுத்தமல்ல, ஆனால் சூழ்ச்சி யுத்தம்; பண யுத்தம்; ஆண்மை குறைந்த யுத்தம், ஆனால் அழிவு தேடும் யுத்தம்; பலமுடையவர்கள் பல மற்றவர்களையும், தேர்ச்சியற்றவர்களையும் இரக்கமின்றி நசுக்கும் கொடிய யுத்தம். இந்த நீண்ட யுத்தத்தினால் மனிதன் அகம்பாவத்தையும், தனது சுகத்திலேயே ஆசையையும் கற்றுக்கொண்டான். பொதுவான ஒரு தலையும், நம்பிக்கையும், நோக்கமும், ஒற்றுமையுமில்லாத மனிதர்கள் தங்களுடைய சுகமே பெரிதென றெண்ணி, அதை அனுபவிப்பதில் தங்கள் சகோதரர்கள் தலைமேலேறி மிதிப்பதையும் கவனியாராயினர்—பேருக்குத்தான் அவர்கள் சகோதரர்கள்; உண்மையில் விரோதிகளே. இந்த நிலைக்கு நாம் இன்று வந்துவிட்டோம்—உரிமைக் கோட்பாடுகளே உமக்கு நமஸ்காரம்.

பகிராம்ஜீ மலபாரி.

திரு. ச. முனிஸ்வாமி பிள்ளை அவர்கள்.

இப்பெரியார் 1853-ம் ஆண்டில் பிறந்தவர். இவர் தந்தை பரோடா மகாராஜாவினிடத்தில் ஒரு இலேகராக இருந்து மாத வேதனம் இருபது ரூபாய் பெற்று வந்தனர். பகிராம்ஜீயின் ஆறும் பிராயத்தில் அவர் தந்தையார் பொன்னுலகம் ஏகினர். இவர் பிதாவை இழந்ததும் இவரும், இவர் அன்னையாரும் பொருள் இருப்பு ஒரு சிறிதுமின்றி உணவுக்கும், உடைக்கும் மிகுதியும் கஷ்டப்பட்டிருந்தார்கள். பின்னர் இவர் தாயார் தம் புதல்வரைக் காப்பாற்றும் நிமித்தம் அந்நாட்டு ஆசாரப்படி மற்றொருவரை மறு மணம் புரிந்துகொண்டார். பகிராம்ஜீக்கு கல்வி கற்பிக்க வேண்டும் என்னும் அவா, அவர் மாதாவுக்கு தம் மனத்தை விட்டு அகலாமல் நல்ல கல்விச்சாலைக்கு அனுப்பிப் படிப்பிக்கப் பொருளின்மையால் சூரத்திலிருந்த ஒரு தரும பாடசாலைக்குத்தான் அனுப்பச் செய்தது. அந்தப் பள்ளியில் இருபது பிள்ளைகளே கல்வி பயின்று வந்தனர். உபாத்தியாயர் வயோதிகர். அவர் பாரசீக பாஷையிலுள்ள மத சம்பந்தமான சில பாசுரங்கள் பிள்ளை

கள் முன்பு பாடுவதும், பின்னர் எல்லாப் பிள்ளைகளையும் ஒருமிக்கப் பாடச் செய்வதுமன்றிப், பிறிதொன்றுமா பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுக்கவில்லை. ஆனால் இப் பாசுரங்கட்கு உபாத்தியாயருக்காவது பிள்ளைகளுக்காவது பொருள் தெரியாது. இங்ஙனம் உரை தெரியாதிருப்பினும் பாடும்பொழுது எந்தப் பையனேனும் ஒரு சிறிது வழுவினும் ஆசிரியர் தம் கையைவிட்டு நீங்காத பிரம்பினால் நன்றாய்ப் புடைப்பார். இவ்விதமான பாராயணம் முடிந்ததும் ஆசிரியர் பிள்ளைகளைப் பந்த ஆற்க விடுவார்; இதனால் வரும் சிறு ஊதியமே ஆசிரியருக்குப் பிள்ளைகள் தரும் சம்பளம்.

பகிராம்ஜீ இப் பாடசாலையில் இரண்டு வருட காலமிருந்த பிறகு, தன் தாய்ப் பாஷையாகிய குஜராத்திப் பாஷையைக் கற்க வேறொரு பாடசாலைக்கு அனுப்பப்பட்டார். இந்தப் பள்ளியின் உபாத்தியாயர் பிராமணர். இவர் பிள்ளைகளிடமிருந்து பிடி யரிசியும், புஷ்பங்களும் சம்பளமாகப் பெற்று வந்தார். இதுகூடக் கொடுக்க இயலாத பிள்ளைகள் உபாத்தியாயருக்குத் தொண்டு செய்தனர். ஒருவன் சமையல் செய்வான், பிறிதொருவன் விறகுகளை வெட்டுவான், மற்றொருவன் நீர் முகந்து வருவான், இன்னுமொருவன் வீடுவாசலைச் சுத்தி செய்வான். அப் பள்ளி சிறிய அறையில் வைக்கப்பட்டிருந்தது. அதில் பலகைகளேனும் நாற்காலி மேஜைகளேனும் கிடையா. பிள்ளைகளுக்குக் கற் பலகையாவது, எழுதுகோலாவது கிடையாது. அவர்கள் தரைமேல் உட்கார்ந்து எதிரில் மணல் பரப்பிய ஒரு பலகையின் மேல் ஒரு குச்சியினால் எழுத்துக்களையும் எண்களையும் வரைகிறார்கள். பகிராம்ஜீக்கு எட்டாம் ஆண்டு பிறந்ததும் குஜராத்திலிருந்து இன்னொரு பாடசாலைக்கு அனுப்பப்பட்டார். இந்த உபாத்தியாயர் மிகவும் குரூரமுடையவராகவும், வன்கண்ணராகவு மிருந்தார். பள்ளிப் பிள்ளைகள் ஆடு மாடுகளைப் போல் தங்களை நடத்துவதை நோக்கி இவருக்கு ‘இடையன்’ என்னும் பட்டதாரணம் செய்தார்கள். இவர் மிகச் சிறிய பிழைகட்கெல்லாம் பிள்ளைகளைத் தலையில் குட்டி அவர்கள் அழுதால், அவ்வழுகை ஒலி கேளாதவண்ணம் மற்றப் பிள்ளைகளை உரத்துப் பாரஸீகத் தோத்திரங்களைப் பாராயணம் பண்ணும்படி செய்வது வழக்கம். பகிராம்ஜீ இந்தக் குரூரமான உபாத்தியாயரிடத்தில் சாலவும் துன்பப்பட்டார். அவர் என்ன பாடுபட்டும் பகீரதப் பிரயத்தனஞ் செய்தும் "கொடியும் பேதையும் கொண்டதுவிடா" என்னும் ஆன்றோர் வசனப்படி இவரைச் சந்தோஷிக்கச் செய்ய முடியவில்லை. இக் காலத்திலே பகிராம்ஜீக்குக் கொஞ்சம் உதவி, தம் அன்பிற் சிறந்த அன்னையாரிடமிருந்து கிடைத்து வந்தது. அநேக முறைகளில் இல்லம் சேர்ந்து

தம் அருமந்த தாயார் மடிமீது நித்திரை புரிய வேண்டுமென்று கண்ணீர் விட்டு அழுதார். தாயாரோ பாடசாலையில் நடக்கும் அலங்கோலங்களை எல்லாம் நன்றாகக் கேள்வியுற்றும், தன் புத்திரரத்தினத்தை இடைவிடாது முயற்சியோடு படிக்கும்படியும் மனத்தளராது ஊக்கத்தோடு இருக்கும்படிக்கும் உற்சாகப்படுத்தினார். அவர் பகிராம்ஜீக்குக் கற்பித்து வந்த நற்போதனைகள், "தெய்வந் தொழுதல், உண்மை உரைத்தல், எவ்வகைத் துன்பப்பட்டேனும் கல்வி கற்றல்" என்பனவைகளாம். "தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்" என்னும் பழமொழியும் பொய்யோ?

இவ் வாசிரியர் வன் மனத்தினரேனும், பாரசீக பாஷையில் நல்ல பாண்டித்யம் வாய்ந்தவர். பகிராம்ஜீ இந்தக் கல்விச்சாலையில்தான் பாரசீக பாஷையிலுள்ள அற்புத கிரந்தங்களையும் பெருங் காப்பியங்களையும் கற்றுப் பாண்டித்தியம் பெற்றார். இவர் மிகவும் நுண்ணறிவும், நூல்கள் கற்பதில் அபாரமான பற்றும், நல்லொழுக்கமும் உடையராக விளங்கினார். இவர் கற்ற நூல்களில் வரும் கதாநாயகன், சிறந்த வீரன், சாமர்த்திய புருஷன், பிரபல பண்டிதன் இவர்களைத் தாமே ஆகப் பாவனை செய்வதில் அவருக்கு அதிகப் பிரியம்.

இவருக்குப் பன்னிரண்டு வயதானதும் அந்தோ! இவருடைய தாயாரும் தந்தையாரை நாடிச் சென்றார். "தாயோடறுசுவை போம்; தந்தையோடு கல்வி போம்" என்னும் உண்மை வாக்கின்படி சிறிது உதவியும் போய் மாதா பிதாக்களை இழந்த திக்கற்ற குழந்தையாகக் கைவிடப்பட்டார். அவர் மாற்றாந் தந்தையும் பரம ஏழையாக இருந்தமையால் எவ்விதமான உபகாரமும் பகிராம்ஜீக்குச் செய்ய முடியாதென்று மறுத்துவிட்டார். ‘அகதிக்கு ஆகாயமே துணை’ என்றபடி இருக்க இனித் தெய்வமே சகாயமின்றி மனித சகாயமில்லை இவ்வளவு இளம் பிராயத்தில் தம் ஜீவனத்துக்காகத் தாமே திரவியம் சம்பாதிக்கும்படி ஆயிற்று. அவர் தம்மைக்காட்டிலும் வயது முதிர்ந்த சில பிள்ளைகளுக்குக் கல்வி கற்பித்துச் சிறிது பொருளீட்டினார். அப்போது ஒரு கருணை மிகுந்த கிறிஸ்துவ பாதிரியார் இவருடைய சூக்ஷ்ம புத்தியையும், தன் முயற்சியையும், கல்விப் பற்றையும், வறுமையையுங் கண்டு மனதிளகி சூரத்திலுள்ள ஒரு கல்லூரியில் சம்பளமில்லாத மாணாக்கராகக் கொண்டுபோய்ச் சேர்த்தார். அங்கு கல்வி பயின்று வருகையில் இந்தப் பன்னிரண்டு வயதுச் சிறுவர் பள்ளிக்குப் போவதன் முன்னும் போய் வந்த பின்னும் சில மாணாக்கர்களுக்குக் கற்பித்து, அதனால் வரும் வருமானத்தைக் கொண்டு, உணவு உடைச்

செலவு பள்ளிச் செலவு முதலியன செய்துகொண்டு வந்தார். ஒழிவு நேரிடும்போதெல்லாம் போஜனமும் தாமே சமைத்துக் கொள்வார். இவர் இரவு 8 மணிக்கு மேல் தன் பாடங்களைப் படிக்க ஆரம்பித்து, 2 மணிவரையில் படிப்பார். அந்த ஆங்கிலப் பாடசாலையில் பகிராம்ஜீயைப் போல் அத்துணைச் சிரமப்பட்டு வாசித்த மாணாக்கன் ஒருவனும் இல்லை.

இந்தப் பாதிரியார், பகிராம்ஜீ கல்விச்சாலையில் கற்று முடிந்தவுடன், 15-வது வயதில் பம்பாய்க்குச் சென்று உயர்தரப் பாடசாலை (college)யில் வாசிக்கத் தீர்மானம் செய்வித்தார். இவர் தம்முடைய சிறிய வருவாயில், மீதியாகக் கொஞ்சந் திரவியம் வைத்திருந்தார். இவர் உற்ற நண்பராகிய கருணை நிரம்பிய பாதிரியார் இவருக்கு வேண்டிய சகாயம் புரிவதாகவும் வாக்களித்தார். ஆனால் பிறகு இவருடைய சகாயமே அனாவசியமாக முடிந்தது. வட்டிக்குப் பணம் கொடுக்கும் வர்த்தகனொருவன், இவரது அதி தீவிர பக்குவத்தைக் கண்டு, நனிவியந்து, இருபது ரூபா கொடுத்து “தம்பி வருந்தல் வேண்டாம். இதற்கு வட்டி ஒன்றும் வேண்டாம், உனக்குப் பணம் கிடைத்த பின் கொடு. உன்னுடைய முகச் சாயலே என் பணத்திற்குப் போதுமான பொறுப்பு” என்று கூறினன். பின்னர் இந்தப் பணம் கொடுக்கப்பட்டது.

பம்பாய் நகரத்தில் பகிராம்ஜீக்குச் சீக்கிரத்தில் உத்தியோகம் கிடைத்தது. இவர் பாரசீக புரோப்ரைடரி பாடசாலையில், உபாத்தியாயராக இருபது ரூபாய் சம்பளத்தில் அமர்ந்தார். சில நாட்களுக்கெல்லாம் சம்பளம் அறுபது ரூபாய்க்கு உயர்த்தப்பட்டது. அவர் காலேஜ் வகுப்பில் படித்துத் தேர்ச்சி அடைவதற்குள் மாதம் 150 ரூபாய் சொந்தமாய்க் கற்பிப்பதில் (Private Tuition) பெற்று வந்தனர். இந்தச் சமயத்தில் மிக விற்பன்னராகி அநேக ஆங்கிலக் கவிகளைத் தாமே பாடி வெளியிட்டார். இப் பாக்கள் எல்லாம் இந்துக்களால் மிகவும் சிலாகிக்கப்பட்டதுடன், இங்கிலாந்தில் மகா மேதாவிகளாலும் கொண்டாடப்பட்டன.

இதுமுதற்கொண்டு மலபாரி சுகமாக இருக்க இடம் உண்டாயிற்று. அவர் புத்தகங்கள் எழுதுவதனால் திரண்ட பொருளீட்டினர். அநேக திவ்ய கிரந்தங்களை இயற்றி வெளிப்படுத்தினர். அவற்றுள் தலைமை பெற்றது “குஜராத்தியும் குஜராத்தியர்களும்” என்னும் நூலே. சமாசாரப் பத்திரிகைகளுக்கு விசேஷமாக விஷயதானம் செய்து வந்தார். அவர் சொந்தமாகவும் “ஸ்பெக்டேட்டர்” என்னும் ஒரு உயர்ந்த பத்திரிகையை நடத்தி வந்தார். இதுவே இற்றை இந்தியாவில் பிரசித்தியாக விருந்த பத்திரிகை. ஆனால் கீர்த்தியும் பிரஸ்தாபமும் உலக முழுவதும் பரிமளிக்கத்

தலைப்பட்ட உடனே மலபாரி தம் காலத்தை எல்லாம் உலக விஷயங்களில் மனதைச் செலுத்தி உழைக்க ஆரம்பித்தார்.

பால்ய விவாகத்தை நிவர்த்தி செய்யவும், விதவா விவாகத்தை ஜனங்கள் அனுசரிக்கவும் எத்துணை முயற்சிகள் எடுத்துக்கொள்ள வேண்டுமோ அவ்வளவும் செய்தார். இவர் மகா மேதாவியாகவும், சீர்திருத்தக்காரர்களில் மேன்மையுடைய ஒரு பெரிய கனவானாகவும் சகலராலும் பாராட்டப்பட்டவராவர். இனி, இவர் சரித்திரத்தால் நாம் அறிய வேண்டிய நுண் பொருள்கள் பல உள. பிச்சைப் புகினும் கற்கை நன்று; கல்வியே சிற்றுயிருக்குற்ற துணை; முயற்சி திருவினையாக்கும்; எண்ணிடற்றூயே அல்லால் இனியதோர் உறவில்லை; ஊக்கத்தைக் கைவிடக்கூடாது; ஒழுக்கம் உயிரினுஞ் சிறந்தது என்பனவைகளாம். இன்னொரு அருமையான விஷயம் கவனிக்கற்பாலது. அதாவது செய்யுட்களைப் பாராயணஞ் செய்வதால் விளையும் பெரும் பயன்களாகிய ஞாபகசக்தி, மனவுறுதி, மதிகூர்மை முதலானவைகளாம். ஆதலால், ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் காலை மாலைகளில் தவறுதலின்றி, தேவாரம், திருவாசகம், நாலாயிரம், அருட்பா பாரதியார் முதலிய திருப்பாடல்கள் பாராயணஞ் செய்து வருவது இன்றியமையாத காரியமாம். இதன் நன்மைகள் யாவராலும் மறுக்கக்கூடாதவைகள் என்பதற்குச் சிறிதும் ஐயப்பாடு இல்லை.

தென்றல் வரவு.

பொங்கேரி நுழைந்து வாவி புகுந்து பங்கயம் துழாவிப்
பைங்கடி மயிலை முல்லை மல்லிகைப் பந்தர்த் தாவிக்
கொங்கலர் மணங் கூட்டுண்டு குளிர்ந்து மெல்லென்று தென்றல்
அங்கங்கே கலைகள் தேரும் அறிவன்போ லியங்கு மன்றே

பரஞ்சோதி முனிவர்.

தருமஞ் செய்தல்.

திரு. என். வேங்கடரமணன் அவர்கள்.

அறம் வளர்ந்த நம் பாரத நாட்டில் தருமத்திற்குக் குறைவேது? எங்கே பார்த்தாலும் தரும சத்திரங்கள்! எப்பக்கம் நோக்கினாலும் தருமசாலைகள்! நம் நாட்டில் காண்பதுபோல் இவற்றை நாம் வேறெந் நாட்டில் காணமுடியும்? தருமங்கள் பலவற்றையுஞ் சுருக்கி நம் முன்னோர் முப்பத்திரண்டு தருமங்களெனக் கணக்கிட்டனர். பொதுவாக, தருமமென்பதற்குப் பிறருக்கு உதவி புரிதல் என்று பொருள் கூறினால் போதும். அவ்வுதவி எவ்விதமானதா யிருப்பினும் இருக்கலாம். அஃதனைத்தும் தருமமே. கல்வி கற்பித்தல், பசித்தோர்க்கு அன்னமிடுதல், எளியோர்கள் தங்க விடுதி யமைத்தல், பொதுப் பாட்டைகள் போடுதல், கிணறு, குளங்களை வெட்டி வைத்தல், நோயாளிகளுக்கு மருந்தளித்தல், மகப் பெருவித்தல் முதலிய தருமங்கள் பல நம் நாட்டில் நடைபெற்று வந்தன. அவற்றுள் பெரும்பாலன நம் நாட்டு மன்னர்களாலும், பிரபுக்களாலும் செய்யப்பட்டு வந்தன. அத்தகைய முற்காலத்தில், நாட்டில் தங்க வசதியின்றியும், உண்ண உணவின்றியும், உடுக்க உடையின்றியும் வருந்திய எளியோர்கள் அதிகமில்லை. நாளடைவில் நம் நாட்டு மன்னர்கள் மறைந்துபோக, வேறு அரசாங்கங்கள் பல தோன்ற, நாட்டின் நிலை கலங்கி, முறை மாறி, மக்கள் மனநிலையுங் கெட்டு யாவும் அழியலாயின. நாட்டில் எத்தனையோ அன்ன சத்திரங்கள் இன்று ஆதரிப்பாரின்றி—நடத்துவாரின்றி—பாழடைந்து கிடக்கின்றன. எத்தனையோ தரும விடுதிகள் சீர்திருத்துவாரின்றி இடிந்து அழிந்துகொண்டிருக்கின்றன. முற்காலத்தில் நம் பெரியோர்கள் கோயில்களை யடுத்துப் பெரிய பெரிய மண்டபங்களைக் கட்டி வைத்திருப்பதன் நோக்கத்தைக் கவனித்துப் பாருங்கள். ஆயிரக் கணக்கான ஏழை மக்கள் இன்றும் வெய்யிலுக்கும், மழைக்கும் அம்மண்டபங்களில் தங்கி பிழைத்து வருகின்றனர். அதிகம் கூறுவானேன்? இந் நாட்டில் நம் முன்னோர்கள் தாங்கள் வசிக்கக் கட்டிய வீடுகள் தோறும் தெருத் திண்ணைகளை யமைத்துக் கட்டி வந்திருக்கின்றனர். அத் தெருத் திண்ணைகள் வீடுகளுக்கு அழகைக் கொடுத்த

தோடு, ஏழை எளியோர்களும், வழிப்போக்கர்களும், பரதேசிகளும் இரவில் தங்கிச் செல்லுவதற்கான சத்திரங்களாகவும் பயன்பட்டு வந்தன. தெருத் திண்ணைகளை யமைப்பதின் நோக்கமும் அஃதேயாம். ஆனால் நாகரீகம் முற்றியதன் பயனாய்த் தற்போது நம் நாட்டில் நம்மவர் கட்டும் வீடுகளைத் தெருத் திண்ணைகளில்லாமற் கட்டுவதோடு, ஒரு சிலர் தெருத் திண்ணைகள் அமைத்தபோதிலும் அவற்றை இரும்புக் கம்பிகளைக் கொண்டு அடைப்பு அடைத்து, வாயிற்படியில் கதவிட்டும் பூட்டி விடுகின்றனர். ஒரு காலத்தில் (காலஞ் சென்ற) அன்னை வசந்தை யம்மையார் இந்தியாவின் பெருமையைப் பற்றி ஐரோப்பாவில் பிரசங்கித்தகாலையில் தெருத் திண்ணைகளை யமைத்து வீடுகளைக் கட்டும் இந்திய மக்களின் செய்கையைப் புகழ்ந்து பாராட்டிப் பேசினர். அப் புகழ்ச்சிக்கு இலக்காகிய அவ் வழக்கம் இன்று நாகரிகம் பெற்ற இந்திய நன் மக்களிடையில் நசித்து வருவதைக் காண்கிறோம். இன்று நம் மக்களின் மனோநிலை சுயநலத்தைக் கைப்பற்றிக் கீழ் நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது. இக்கால அரசாங்கமோ நமது சமயச் சார்பான தருமங்களை முன்னின்று நடத்துவதற்கில்லாத அன்னிய அரசாங்கமாய்ப் போயிற்று, இருப்பினும் இவ்வரசாங்கத்தாரும் கல்வி, வைத்தியம், போக்குவரவுக்குரிய பாதை முதலிய தருமங்கள் சிலவற்றைத் தாமே நடத்தவும் முற்பட்டிருக்கின்றனர். இத் தருமங்களில் முக்கியமானவற்றை ஸ்தல ஸ்தாபனங்களில் பொது மக்களையே முன்னின்று நடத்துமாறு ஊக்கியுமிருக்கின்றனர். ஆயினும் நம் பொது மக்கள் தம் கடமையில் போதிய சிரத்தை காட்டி யாவரும் ஒத்துழைப்பதில்லை.

தருமம் செய்தலென்பது எவ்வளவு உயரிய நோக்கத்தோடு தொடங்கப் பெற்றதாயினும் "பாத்திர மறிந்து பிச்சை யிடு" என்ற நீதியை நம்மவர் புறக்கணித்து நடந்துவந்ததன் பயனாய், அத் தருமச் செயலே இன்று இந்திய நாடு என்னும் விருக்ஷத்தை யழிக்கப் பிறந்த புல்லுருவியாகப் பரிணமித்திருக்கிறது. விவேகம் என்ற கண்ணை மூடிக்கொண்டு, பகுத்தறிவை யுபயோகிக்காமல் நம்மவர்கள் தருமம் செய்யத் தலைப்பட்டதினின்றும், இந் நாட்டில் பிச்சை யெடுத்துப் பிழைப்பதையே தொழிலாகக்கொண்டு நூற்றுக் கணக்கான ஜாதிகளும், ஆயிரக் கணக்கான மக்களும் வெளிப்பட்டிருக்கின்றனர். கூன், குருடு, செவிடு, நொண்டி போன்ற அங்கவீனர்களும், உழைத்துப் பிழைக்க அசக்தர்களாகிய நோயாளிகளும், வயோதிகர்களும் பிச்சை யெடுப்பது நியாயமெனக் கூறலாம். நல்ல பலம் வாய்ந்த திடசரீரிகளாகிய ஸ்திரீகளும், புருஷர்களும் பிச்சை யெடுப்பதை எவ்வாறு அங்கீகரிக்க முடியும்? நம்மில் பலர் எவர் வந்து பிச்சை கேட்டாலும் தம்மாலியன்ற பிச்சையைக் கொடுத்து அனுப்பி விடுவதே தமது கடமை

யென்று நினைக்கின்றனர். அவ்வாறு நாம் அலக்ஷியமா யிருப்பதாலேயே இந்தியாவில் லக்ஷக் கணக்கான பிச்சைக்காரர்கள் தோன்றி யிருக்கின்றனர். ஓர் ஊரில் அனாதையான பிச்சைக்காரன் ஒருவன் மிதமிஞ்சிய குடியால் இறந்து கிடந்தான். அவனை நல்லடக்கம் செய்யப் புகுந்த கிராமாதிகாரிகள் அவன் உடலைப் பரிசோதித்தனர். அவனது காலில் நீடித்த புண்ணுக்குக் கட்டி யிருப்பது போன்ற சிவந்த ரத்தக் கறைகளோடு கூடிய துணியால் கட்டப்பட்ட சட்டு ஒன்று காணப்பட்டது. அஃது எவ்வித புண்ணா யிருக்கலாமென்று சோதிக்கக் கருதி, அரை மனத்தோடு அக் கட்டை அவிழ்த்துப் பார்த்தனர். அவ்விடத்தில் ஒருவித புண்ணுங் காணாதிருந்ததோடு அக் கட்டினின்றும் 10 பவுன்களைக் கொண்ட முடிச்சு ஒன்று மாத்திரம் காணப்படலாயிற்று. இது போன்ற சம்பவங்கள் பல. இருநூறு முந்நூறு ரூபாய்கள் வரையில் சேர்த்து வட்டிக்கு விட்டுள்ள பிச்சைக்காரர்களும் பலரைக் காணலாம். அநேக பிச்சைக்காரர்கள் தாம் ஈட்டும் பணத்தைக் குடிக்கும், கூத்துக்கும், கூத்திக்குமாகச் செலவிடுவதை யாரே அறியாதவர்? கடவுளின் அடியார்கள் என்ற வேஷத்தோடும் பலபேர் பிச்சை யெடுக்கின்றனர். இத்தகையோர்களுக்குக் கொடுக்கும் பிச்சை உண்மையில் தருமத்தின் பாற்படுமா என்பதை யோசிக்க வேண்டும்.

நம் நாட்டில் திருப்பதி, திருவண்ணாமலை, ஸ்ரீரங்கம், பழனி, சிதம்பரம் போன்ற ஸ்தலங்களில் நடைபெறும் திருவிழாக்களில் ஆயிரக் கணக்கான பிச்சைக்காரர்கள் தோன்றி யாத்ரீகர்களுக்குச் செய்யும் இம்சைகளுக்கு ஓர் அளவில்லை. நம்மவர்களின் அசட்டுத்தனமான தருமச் செய்கையாலேயே இத்தனை பிச்சைக்காரர்கள் தோன்றி வளர்ந்து வருகின்றனர். பலபேர் இத்துறையில் இறங்கி வருவதால் இவர்களின் சங்கை நாளுக்கு நாள் அதிகமடைந்து கொண்டே போகிறது. நாட்டுக்கோட்டை செட்டிப் பிரபுக்கள் சிலர் தருமத்தின் பெயரால் வருடத்தில் சில முக்கிய தினங்களில் பிச்சைகாரர்களுக்கு உணவும், வஸ்திரமுங் கொடுத்து மகிழ்ச்சி யடைகின்றனர். இவ்வித தருமச் செயல்களால் நம் நாடு சின்னாட்களில் முழுதும் பிச்சைக்காரர்களின் நாடாய்விடுமோ என்ற ஐயம் தோன்றுகிறது. மேல் நாடுகளில் உழைக்கச் சக்தியுள்ள எவனும் பிச்சை யெடுப்பதை தண்டனைக் குரியதாக்கி யிருக்கின்றனர். சக்தியற்ற எளியோர்களையும், அங்கவீனர்களையும், நோயாளிகளையும் காக்கத் தகுந்த அறச்சாலைகளை ஸ்தாபித்திருக்கின்றனர். அங்கே அவர்களுக்கு வேண்டிய உணவு, உடை முதலிய சகல உதவிகளையும் புரிவதோடு, அவர்களில் கூடுமானவர்களைக் கொண்டு பயன் தரத்தக்க ஏதேனும் தொழில்களையும் செய்விக்கின்றனர். பொது ஜனங்கள் அந்

ஆராய்ச்சி மேடை.

இராமலிங்க சுவாமிகள் சரிதம்.

இந் நூலை இயற்றியவர் தற்கால ஔவை யெனப் போற்றற்குரியரும், காந்தி புராணம் பாடிய கவியரசியுமாகிய பண்டிதை அசலாம்பிகை அம்மையாவர். இது 13 பகுதிகளை யுடையதாய் நானூற்றுக்கு மேலான பாக்களைக் கொண்டு முடிவு பெற்றிருக்கின்றது. பாக்கள் யாவருக்கும் பொருள் விளங்குமாறு இனிய எளிய நடையில் அமைந்திருப்பது குறிப்பிடத் தக்கதாம். ஆக்கியோரின் பன்னூற் பயிற்சியையும் ஆராய்ச்சித் திறனையும் அறிவுறுத்துஞ் சான்றுகள் இந் நூலில் ஆங்காங்கு மலிந்துள்ளன.

நாடுகளில் தனிமையில் கண்ட விடங்களில் காணப்படும் பிச்சைக்காரர்களுக்கு ஒன்றுங் கொடுப்பதில்லை. தங்கள் வருவாயில் ஒரு பாகத்தை தருமத்திற்கெனச் சேர்த்து அதை முற் கூறிய அனாதைகளைக் காக்கும் அறச்சாலைகளுக்கே கொடுக்கின்றனர். சில நாடுகளில் 'உழைத்துப் பிழைப்பதற்கேற்ற சக்தி யில்லாதவர்கள்' என்று அதிகாரிகளால் லைசென்ஸ் கொடுக்கப்பெற்றவர்களே யாசித்துப் பிழைக்கலாம். அப்படிப்பட்டவர்களும் தெருக்களெங்கும் திரிந்து வழிப்போக்கர்களை இடை மறித்துப் பிச்சை கேட்கலாகாது. பாதைகளில் ஒதுக்கப்பெற்ற இடங்களில் இருந்தே பிச்சையேற்குமாறு விதிகள் ஏற்படுத்தியிருக்கின்றனர். இத்தகைய முயற்சிகளால் மேல் நாடுகளில் பிச்சைக்காரர்கள் குறையவும், யாவரும் தொழில் செய்ய வேண்டிய அவசியமேற்பட்டு அவ் வகையில் நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சி யடையவும் சாதனமேற்பட்டது. அதுபோல் நம்மிந்திய நாட்டில் நாமும் செய்தல் கூடாதா? ஸ்ரீரங்கம் போன்ற ஸ்தலங்களிலுள்ள கோயில்களோடு ஏழைகளை ஆதரிக்கும் விடுதிகளைச் சேர்த்தமைத்தல் கூடாதா? ஸ்ரீரங்கநாதரின் பேரால் லாட்டரிச் சீட்டுகளை நடத்தி வசூலிக்கும் பெரும் பணத்தை, பூசாரி ஸ்வாமிகளின் திருவயிற்றை நிரப்பும் புண்ணிய கைங்கரியத்தில் மட்டும் செலவிடாமல், ஏழ்மைத் தனத்தால் இராப் பட்டினி கிடந்து வருந்தி வரும் எளியோர்களைக் காப்பாற்றும் இத்தகைய (கைத்தொழில்) தரும ஸ்தாபனங்களை ஏற்படுத்தும் முயற்சியிலும் செலவிடலாகாதா? எனவே, நம் நாட்டின் நிலையைக் கவனித்துப் பொது ஜனங்கள் தாம் செய்யுந் தருமங்களிலும் காலத்திற் கேற்ற சீர்திருத்தங்களைக் கைக்கொள்ள வேண்டுவதவசியம்.

பண்டைப் புராண முறையைத் தழுவி யெழுதப்பட்டிருப்பினும் இந் நூலானது படிப்பவர்க்கு மிக்க மகிழ்ச்சியைத் தருகின்றதென்பதில் யாதும் ஐயமில்லை. பெண்ணையாற்றின் சிறப்பும், நடு நாட்டின் மான்மியமும் அழகாய் வர்ணிக்கப்பட்டிருக்கின்றன. வள்ளலாரது திருவவதாரம், பிள்ளைப் பருவம், ஞானோதயம், ஸ்தல யாத்திரை முதலியவற்றைக் குறித்தும், அவரால் பிரதிஷ்டை செய்யப் பெற்ற ஸ்தாபனங்களைக் குறித்தும், அவர் 'கடையைக் கட்டிவிட்டு' அறைக்குட் சென்று யோகத்தமர்ந் திருத்தலைக் குறித்தும் பல செய்திகள் இச் சரித்திரத்தின் வாயிலாய் அறிகிறோம். அப் பெரியார் காட்டியுள்ள அற்புதங்களுக் களவில்லை. அவை யாவும் அவரை அடியார்கள் 'அருட்பிரகாச வள்ளலார்,' 'ஓதாதுணர்ந்தோர்,' 'உண்மை ஞானியார்,' 'சித்தர் சிகாமணி,' 'ஜீவகாருண்ய மூர்த்தி,' 'நித்திய யோகி' எனப் போற்றிப் புகழ்தற்குரிய காரணங்களை நன்கு விளக்குவனவாம்.

கர்ண பரம்பரையான கதைகளைக் கடைந்து சரித உண்மைகளை மட்டும் திரட்டி எடுப்பது எளிதான காரியமன்று. பண்டிதை அம்மையார் இவ் விஷயத்தில் மிக்க கவனம் செலுத்தி யிருக்கின்றனரென்பது முகவுரையில் அவர் 'தற்காலம் சிற்சில சரித சம்பந்தமான குறிப்புகள் வெளிவந்தனவாயினும் போதிய ஆதாரமாகக் கொள்ள இயலாதவைகளை இதிற் புகுத்தத் துணிகிலேன்' என்று கூறி யிருப்பதினால் அறியக்கிடக்கின்றது.

இந் நூல் 20-வது பக்கத்தில் பெண்ணின் பெருமை பின் வருமாறு விளக்கப்பட்டுள்ளது:—

"புண்ணியர் ஆண்மையர் புலவர் ஞானியர்
மண்ணுல காள்பவர் யோகர் மாதவர்
எண்ணுபற் பலரையு மீபு மாண்பினால்
பெண்ணினிற் பீடுறும் பிறவி யாவதே."

உண்மையே இதை யாவரும் ஒப்புக்கொள்வர். ஆனால் 16-வது பக்கத்தில்

"எப்பெரிய காரணந்தான் உளதெனினும் ஆடவர்கள்
கைப்பிலராய்ப் பலரை மணம்புரிந்தாலும் காரிகையார்
ஒப்பியவர் விரும்பும் வழியொழுகி நிறைகாப்பதுதான்
இப்பெரிய நாட்டினுக்கே இயல்பாகும் தனிப்புகழே."

என்று வரும் பாடலின் கருத்து நமது நவநாகரீகப் பெண்மணிகளுக்கு எம்மட்டு உடன்பாடா யிருக்குமோ அறியேம்.

மயில் (Mile), மணி (Hour), ஏக்கர் (Acre) இப் பதங்களைக் காலத்திற்கேற்பச் செய்யுட்களில் ஏற்றி யிருப்பது விரும்பத் தக்கதாம்.

ஆசிரியக் குறிப்புகள்.

48-வது காங்கிரஸ்

'இந்தியாவின் தலைவாசல்' எனும் பம்பாய் மாநகரிலே இம் மதி ஆரம்பத்தில் தேசபக்த சிரோன்மணியான எல்லைப்புற காந்தி அப்துல் காபர் கான் அவர்களது பெயரால் புதிதாக நிர்மாணிக்கப் பெற்ற நகரிலே அமைந்த பந்தலில் காங்கிரஸ் மகாசபை கூடியது. சென்ற கராச்சிக் காங்கிரஸிற்குப் பின் இக் காங்கிரஸ்தான் பகிரங்கமாக—விசேடமாகக் கூடியதால், இதிலே அபரிமிதமான தேசபக்தர்கள் கலந்துகொண்டது கண்கொள்ளாக் காட்சியாக விளங்கியது குறிப்பிடத்தக்கதாம். பந்தலும் லக்ஷம் பேர் கூடத்தக்க விதத்தில் அதிசீக்கிரம் அமைத்துக் காங்கிரஸைக் குறைவற நடத்திக் கொடுத்த பெருமை பொதுவாகப் பம்பாய் நகரத்தார்களுக்கு உரியதே யெனினும் பழக்குவிக்கப்பெற்ற தேசத் தொண்டர்களது தேச சேவகிகளது உழைப்பும், சிறப்பாக வரவேற்புக் கமிட்டி அங்கத்தினர்களது ஒத்துழைப்பும், அதன் தலைவர் தேசபக்தர் திரு. நாரிமனின் திறமையுமே இத் திறத்திற்கு காரணம் என்றே சொல்லவேண்டும்.

இக் காங்கிரஸ் மக்களின் மனதைக் கவருவதாயிருந்ததில் பிரதானமாக ஒன்றைக் குறிப்பிடவேண்டும். தேசபந்து தாசருக்குப் பின்னர் சட்டசபை நுழைவுக்குக் காங்கிரஸ் இடங்கொடாது வந்து, இவ் வாண்டு மறுபடியும் சட்டசபை நுழைவை ஆதரித்துப் போரா

காணின்ற பெரு மக்களது திவ்ய சரித்திரங்களைப் பெறப் பெரிதுந் தாகமுற்றிருக்கும் தமிழகத்திற்கு உண்மைச் சரிதங்களில் ஒன்றாய் விளங்குமாறு, இந் நூலை வள்ளலாரிடத்து மிக்க பக்தியுடையாரும், அவரது 'அருட் பெரும் பாக்களைத் தினமும் வளம்பெறப் படித்து' நாத்தழும் பேறப் பெற்றாருமாகிய ஒருவர் எழுதி யுதவியது நமது பெரும் பாக்கியமேயாம்.

அய்யம் பிள்ளை.

கிடைக்குமிடம்:

பண்டிதை அசலாம்பிகை அம்மாள், திருப்பாப்புலியூர்.

டத் துணிந்துள்ளதேயாம். பம்பாய்க் காங்கிரஸின் புதிய நிர்வாகிகள், புதிய திட்டங்களையெல்லாம் வகுத்து, எதிர்கால வேலையில் நன்கு போராடி வெற்றிபெறத் தக்கவாறு மக்களைத் தட்டியெழுப்பித் தொண்டாற்றுவார்களெனவே நினைக்கின்றோம். வரவேற்புத் தலைவர் பிரசங்கத்திலும், காங்கிரஸின் ஒப்பற்ற தலைவராய் அமைந்துள்ள ராஜேந்திர பிரசாத் அவர்களின் தலைமைப் பேருரையிலும் பல அரிய விஷயங்கள் நிறைந்துளது. (அவை அடுத்த சஞ்சிகையில் இடம் பெறும்) காங்கிரஸே இந்தியரின் கதியை நிர்ணயிக்க வல்லது. விடுதலையைப் பெறக் காங்கிரஸின் மார்க்கமே ஏற்ற வழியென்பதை உணர்ந்து, காங்கிரஸின் வழிநின்று உய்வை விரும்புவோமாக.

எதற்கு வருந்துவது?

‘பாரதி’ தேசியப் பத்திரிகையாகத் தோன்றி, தேசியத்திற்காகவே வாழ்ந்து வருவதினால், அதுவுறும் இன்னல்கள் கணக்கிலடங்கா. ஒரு பக்கம் சர்க்காரின் எச்சரிக்கை, பிரிதோர் பக்கம் பணக் கஷ்டம், மற்றோர் பக்கம் காலந் தவறி வெளி வருவதால் துக்கம், ஏஜெண்டுகள்-அன்பர்கள் முதலானோர் ஆயிரக் கணக்கான பாக்கித் தொகையை வைத்துக் கொண்டு உதவாமலிருக்கும் முறையின்மை இத்யாதி சிரமங்களாலும் பெருவாரியான நஷ்டங்களாலும் இன்று நாமடையும் சிரமம் ஏட்டிலடங்கா.

தேசியத் துறையிலே துன்பமும் துயரமும் எதிர்பார்க்கத் தகுந்ததேயாயினும், இவ்விதமாக எப் பக்கத்திலும் துன்ப ஆழியும் துயரக் கோட்டையுமானால் கடப்பதற்கோ வசிப்பதற்கோ சாத்தியமாகுமா?

‘பாரதி’யைப் பாருங்கள்! அதன் நோக்கத்தைக் கவனியுங்கள்!! உங்கள் கடமையை உதவ நீங்கள் முயல வேண்டும். உங்கள் உதவியும் ஆதரவுமின்றேல் நமது எண்ணம் உருப்பெற வழியுண்டா? உங்கள் பாக்கித் தொகைகளை அனுப்பிவிட்டால், இதுபோது பணக் கஷ்டத்தால் தத்தளித்து நிலை தடுமாறும் ‘பாரதி’யின் நிலைமை சிறிது உயர்வடையும். இந்த அவஸ்யமான காலத்தில் நீங்கள் செவிசாய்ப்பீர்களென்னும் திடமான நம்பிக்கை எமக்குண்டு. ஆதலாலேயே இக் குறிப்பெழ நேர்ந்ததென்பதைக் கவனிக்க வேண்டுகின்றோம். தயவு செய்து இந் நிலைமையைக் கருத்திற் கொண்டு, பாக்கித் தொகைகளைத் தாமதமின்றி அனுப்பி உதவி ‘பாரதி’யின் வாழ்வு சிறப்புறச் செய்ய முன்வருமாறு மறு முறையும் மறு முறையும் வேண்டிக்கொள்ளுகின்றோம்.

‘பாரதி’யின் ஜீவிய சந்தா

இதுகால பரியந்தம் போஷக சந்தா சாதாரண சந்தா ஆகிய இருவித சந்தாவே நமது ‘பாரதி’க்கிருந்து வந்ததை நண்பர்கள் அறிவார்கள். இதுபோது புதிதாக ஜீவிய சந்தா வென்னும் ஓர் பிரிவையும் ஏற்படுத்த வேண்டிய அவஸ்யமேற்பட்டிருக்கிறது.

‘பாரதி’ நல்ல பத்திரிகையென்று நாட்டாரால் மதிக்கப்பெறுவதாயிருந்தாலும், அதன் செல்வச் செழிப்பு வருந்தத் தக்கதாகவேயிருக்கிறது. ‘பாரதி’க்கு இக் குறைமட்டும் இல்லாதிருப்பின் அதன் வளர்ச்சிப் பல்வேறு வழிகளில் மிகுந்த எழில் பெற்று விளங்கும். என்றாலும் இன்னும் நமது அளப்பரிய அவா மறைந்துவிடவில்லை. அன்பர்கள் ஊக்கம் போதியவாறு ‘பாரதி’க்குக் கிடைக்குமேல் விரைவில் நமது விருப்பமும் கைகூடும்.

தற்போது சில நண்பர்களின் ஆலோசனையையேற்று ஜீவிய சந்தாவுக்கு ரூ. 50 (ஐம்பது) என இதுமுதற் கொண்டு ஏற்படுத்தியிருக்கிறோம். போஷக சந்தாவைக் கொடுத்துக் கௌரவிக்க முனையாதோர், இந்த ஜீவிய சந்தாவைச் செலுத்தித் தம் ஆவலையும் கடமையையும் பூர்த்தி செய்து கொள்வதோடு, ‘பாரதி’யின் வாழ்விலும் வளர்ச்சியிலும் மிகுதியும் பங்கு கொள்ளுமாறு வேண்டிக் கொள்ளுகின்றோம்.

புஸ்தக ஆசிரியர்களுக்கு

“பாரதி”யின் கார்யாலயம் கூடிய விரைவில் சென்னைக்குச் செல்லப்போகின்றது. அங்கிருந்து அநேக தேசியப் புஸ்தகங்களையும், நாட்டிற்கு நலங்கொடுக்கும் நானாவித நூற்களையும் வெளியிடத் தீர்மானித்திருக்கிறோம். ஆகையால் புஸ்தகங்களாக எழுதி, அச்சிடாது வைத்திருக்கும் ஆசிரியர்களும், நூற்கள் எழுதிக்கொண்டிருக்கும் ஆசிரியர்களும் தங்களது நூற்களை எமது மூலம் வெளியிட விரும்பினால், எமக்கெழுதுமாறு வேண்டுகிறோம்.

கைத்தொழில்களும் சுயராஜ்யமும்

மகாத்மா காந்தி அடிகள் காங்கிரஸை விட்டு நீங்குவதைக் கண்டு பலருக்கு வருத்தம் ஏற்படலாம். காங்கிரஸைப் பலப்படுத்தவும் கிராமங்களிலெல்லாம் கைத்தொழில் சங்கங்கள் ஸ்தாபித்து, மறைந்துபோயிருக்கும் அல்லது குற்றுயிராய்க் கிடக்கும் நமது கைத்தொழில்களுக்குப் புத்துயிர் கொடுக்கவும் அடிகள் முன்வந்திருக்கிறார். நமது கைத்தொழில்களை முற்றிலும் சரிவர வளர்ப்போமானால், ஒரு சொட்டு இரத்தங்கூடச் சிந்தாமல் நமக்கு சுயராஜ்யம்

விரைவில் கிடைத்துவிடும். எத்தனை கோடி ரூபாய்கள் அயல் நாடுகளுக்குச் செல்கின்றன! கேவலம் குழந்தைகளின் விளையாட்டுச் சாமான்களுக்காக இந்தியாவிலிருந்து எத்தனை இலட்சம் ரூபாய் வெளியே போகின்றது! கையிலிருந்த பொருளையெல்லாம் செலவு செய்து உயர்தரக் கல்வி கற்றுவிட்டு, வேலையின்றித் திண்டாடிக் கொண்டிருக்கும் வாலிபர்கள் சிறு சிறு கைத்தொழில்களிலும் சின்னஞ்சிறு வியாபாரங்களிலும் ஈடுபட்டால், இவர்களுக்கும் நாட்டிற்கும் எவ்வளவோ நன்மை உண்டாகும்.

தேசீயக் கவி ராமலிங்கம் பிள்ளை

நாமக்கல்லில் வசிக்கும் ஸ்ரீமான் இராமலிங்கம் பிள்ளை அவர்கள் தேசீயக் கவிகளை இயற்றுவதில் வல்லவர். உப்புச் சத்தியாக்கிரக சமயத்தில் "கத்தியின்றி ரத்தமின்றி" என்ற பாக்களால் இளந் தமிழர்களைத் தட்டி எழுப்பியவர். இவரது தேசாபிமானம் கொதிக்கும் உள்ளத்திலிருந்து கிளம்பிய பற்பல அரும் பாக்களை வேலூர் சிறையில் இவரிடமிருந்து கேட்டு மகிழ்ந்திருக்கிறோம். "ஆடு ராட்டே" என்ற பாக்கள் அடங்கிய சிறு நூலையும் வெளியிட்டிருக்கிறார். கம்பரைப்பற்றி ஆராய்ச்சி நூலொன்றையும் எழுதி முடித்திருக்கிறார். திருக்குறளைப் புதிய முறையில் நவீன ஆராய்ச்சிகளுடன் எழுதி முடித்திருக்கிறார். இதற்குத் தமிழ் நாடு ஆதரவு அளிக்குமானால் இது விரைவில் வெளிவந்துவிடும்.

இவர் கவியா யிருப்பதைப்போன்றே, சித்திரக் கலைஞராகவும் விளங்குகிறார். இவரது படங்கள் நன்கு மதிக்கப்பட்டவைகள். டெல்லி தர்பாரில் இவர், சக்கிரவர்த்தி பெருமானது கையிலிருந்தே மெடல் வாங்கியிருக்கிறார். தமிழர்களுடைய ஊக்கத்தால் இவரிடத்திலிருந்து அநேக அரிய பாக்களும் நவநவமான சித்திரங்களும் தோன்றும். அனுபவிப்பாரற்றுக் கிடக்கும் காட்டு மலர்போன்று, நமது நண்பர் ராமலிங்கமும் ஆதரிப்பாரற்று நாமக்கல்லில் கிடந்து தவிக்கிறார் என்பதைத் தமிழர்கள் கவனிப்பார்களா?

இங்கிலாந்தில் சாமான் வாங்குதல்

லண்டனில் இந்தியா ஹை கமிஷனரது அடியிலிருக்கும் இந்தியச் சாமான்கள் இலாகாவால் 1933—34-ல் 10,20,664 பவுனுக்கு இந்தியாவிற்காகச் சரக்குகள் வாங்கப்பட் டிருக்கின்றன. சாமான்கள் கொடுக்கும் கன்ட்ராக்டுகளை நூற்றுக்கு 96 வீதம் பிரிட்டிஷ் கம்பெனிகளுக்கே கொடுத்திருக்கிறார்கள். பிரிட்டிஷ்காரர்களுக்கு இந்தியாவின் பெயரால் இவ் விதம் இலாபம் கிடைக்கிறது. இந்தியர்களுக்கு ஏன் இந்த ஒப்பந்தங்களைக் கொடுக்கக்கூடாது? ரயில்வே,

படை முதலியவைகளுக்குச் சாமான்கள் கொடுக்கக்கூடிய நிலைமையில் இந்தியா சில வருடங்களாக இருக்கிறது. இருந்தும் இங்கிலாந்தை ஏன் கொழுக்க வைக்கவேண்டும். ஒரு சுயராஜ்ய நாட்டில் இவ்விதக் காரியங்களைச் செய்வார்களா? இந்தியர்களைக் காட்டிலும் சாமான்களை அவர்கள் குறைந்த விலைக்குக் கொடுக்கிறார்களா? சுதேசியம் எதிலும் ஏற்பட்டாலன்றி நமது நாட்டிற்கு விமோசனமில்லை.

பிர்தாசியின் 1000-ம் வருட விழா

பெர்ஸியா நாட்டிலே, 1000 வருடங்களுக்கு முன்னாலே பிர்தாசி என்னும் பேர்போன சிறந்த கவிவாணர் பிறந்தார். ஷாநாமா என்னும் நூலில் முற்காலத்திய பெர்ஸிய அரசர்களுடைய வைபவங்களைப்பற்றிப் பாடியிருக்கிறார். இவர் அரசர்களைப்பற்றித் தனது நூலில் பாடிப் புகழ்ந்திருப்பதால், பெர்ஸிய சக்கிரவர்த்தி ரிஜா அவர்கள் பிர்தாசிக் கவிராயரைக் கௌரவப்படுத்தி, அவருடைய 1000-ம் வருட வைபவம் கொண்டாடும்பொருட்டு ஏற்பாடு செய்து, எல்லா தேசத்துப் பெருமக்களுக்கும் அழைப்புகள் அனுப்பியிருக்கிறாரென்று அறிகிறோம். பிர்தாசியின் புகழ் வாழ்க வாழ்க! தமிழ் நாட்டின் தவப் பயனாய், தெய்வ கிருபையால் தோன்றிய தேசீயக் கவிச் சக்கிரவர்த்தி சுப்ரமண்ய பாரதியாருக்கு நாம் என்ன கௌரவம் கொடுக்கிறோம் என்று எண்ணிப் பாருங்கள். ஒரு சமயம் அவரது பாடல் புஸ்தகங்கள் பறிமுதல் செய்யப்பட்டது. மாணவர்கள் பள்ளிக்கூடங்களில் அவைகளைப் படிக்க இன்னும் அனுமதிக்கப்படவில்லை. கேவலம்! கேவலம்! தமிழ் நாடு உச்சிமேற்கொண்டு போற்றத்தக்க பாரதியாருக்குத் தமிழர்கள் என்றுதான் ஏற்றபடி மரியாதை செய்யப்போகிறார்களோ அறியோம்.

பெரியகுளம் தாலுகா கம்ம வாலிபர் மகாநாடு

இம் மகாநாட்டின் ஆலோசனைக் கூட்டம் கண்டமநாயக்கனூர், கோவிந்தநகரத்தில் "பாரதி" ஆசிரியரது அக்ராசனத்தின்கீழ் 19—11—1934-ல் நடைபெற்றது. ஷை மகாநாட்டிற்காக வேலைக் கமிட்டியார் தேர்ந்தெடுக்கப்பட் டிருக்கிறார்கள். இம் மகாநாட்டிற்குக் கம்ம குலத் தலைவர்கள் பல பக்கங்களிலிருந்தும் விஜயம் செய்வார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த மகாநாடு கம்ம வாலிபர்களுக்குப் புத்துணர்ச்சியை அளித்து, தங்கள் சமூகத்திற்கும் தேசத்திற்கும் தீவிரமாய்த் தொண்டு செய்யும் என்று உறுதியாக நம்புகிறோம். இந்த மகாநாட்டின் மூலம் பெரியகுளம் தாலுகா கம்ம மரபிற்கே ஒரு பெரிய மாறுதல் ஏற்படப்போகிறது. இம் மகாநாட்டிற்கு வெற்றி கிடைக்குமாக!

காங்கிரஸுக்கு ஜே!

இந்தியர்கள் பல வருடங்களாகப் படாத பாடெல்லாம் பட்டுப் பட்டு வளர்த்த காங்கிரஸை எவ்வளவோ பேர்கள் தாக்கினார்கள், தூற்றினார்கள்! எத்தனை உத்தியோகஸ்தர்கள் ஏளனம் செய்தார்கள்! இந்தியாவின் நாடியை உள்ளபடி யறியாத—இந்தியாவை என்றும் கண்ணால் கண்டிராத சில ஆங்கில மக்கள், காங்கிரஸ் இந்தியாவின் பிரதிநிதித்வ சபை அல்லவென்றார்கள். இந்திய சட்டசபைத் தேர்தல் நடந்தது. தேச மக்கள் காங்கிரஸை ஆதரித்தார்கள். காங்கிரஸுக்கு 1,48,813 ஓட்டுகளும் மற்றவர்களுக்கு 32,528 ஓட்டுகளும் கிடைத்தன. சென்னை மாகாணத்தில் காங்கிரஸ் அனுப்பிய எல்லா அபேட்சகர்களுக்கும் வெற்றி கிடைத்ததைக் கண்டு மகிழ்கிறோம் சர்க்கார் இனி என்ன செய்யப் போகிறார்களோ அறியோம்! தேசாபிமானம் வளர்க!

உத்தமபாளையம் உத்தமர் மறைவு

உத்தமபாளையம் பெரியார்—ஏழை மக்களின் நண்பர்—ஹரிஜனத் தலைவர்—தீனபந்து—பரோபகாரத் தொண்டர்—கிறிஸ்து மதப் போதகர்—கிராம சீர்திருத்தப் பெருஞ் சேவகர்—சங்கைக்குரிய செல்வநாயகம் அவர்கள் 6—8—1934-ல் காலங் கடந்துவிட்டார். இவரது மரணத்தால் இப் பாக வாசகளுக்கும் முக்கியமாகப் பெரியகுளம் தாலுகா ஹரிஜனங்களுக்கும் மட்டற்ற வருத்தமேயாகும். கனம் செல்வநாயகம் அவர்களது தொண்டிற்கு, அவரது மரணச் சடங்கின்போது பல ஆயிரக் கணக்கான மக்கள் கூடி வருந்தியதே சாட்சியாகும். அவருடன் சுமார் 20 வருட காலம் நெருங்கிப் பழகியிருக்கிறோம். அவரது அன்புள்ளத்தை—அடக்கத்தை—தொண்டின் ஆசையை—பொறுமையை—மலர்ந்த முகத்தை—இனிய வாக்குகளை—விடுதலை உணர்ச்சியை நாம் பெரிதும் அறிவோம். கிறிஸ்து மதத்தினராயிருப்பினும் மற்ற மதஸ்தர்களிடம் அந்நியோன்யமாய்ப் பழகுபவர். அவரது பிரிவால் பல ஏழை ஹரிஜனக் குடும்பங்கள் கண்ணீர் விட்டுக்கொண் டிருக்கின்றன. சமீபத்தில் அவருடைய அருமை மனைவியார் காலஞ்சென்ற துயரை எண்ணி எண்ணி வாடி மனமுடைந்ததால், அவருக்கு ஹிருதய நோய் ஏற்பட்டு மரணமுண்டாயிற்று. அவர் ஒரு ஒடுக்கப்பட்ட ஏழைக் குடும்பத்தில் பிறந்து, சிறிது வாசித்து, தனது சுய முயற்சியினால் முன்னுக்கு வந்தவர். உத்தமபாளையம் யூனியன் சேர்மனாகவும் கௌரவ மாஜிஸ்டிரேட்டாகவும் தெரிந்தெடுக்கப்பட்டாரென்றால், இவரது முன்னேற்றத்தைப் பாருங்கள்! உத்தமபாளையத்தில் உற்ற தருணங்களில் எமக்கு உதவியாயிருந்த உத்தமபாளையம் உத்தமரை இழந்து வருந்துகிறோம்.

இனி உத்தமபாளையத்தின் செல்வத்தை—உத்தமபாளையத்தின் நாயகத்தை என்று காண்போம்! அவரது குடும்பத்தாருக்கும் பந்துக்களுக்கும் எமது அனுதாபங்கள். அவரது ஆத்மாவுக்கு சாந்தி தந்தருளுமாறு இறைவனை வேண்டுகின்றோம்.

பஞ்சாயத்து போர்டு தேர்தல்கள்

சில வருடங்களுக்கு முன் யூனியன் என்று பெயர் விளங்கியது, இப்பொழுது பஞ்சாயத்து போர்டு என்று சொல்லப்படுகிறது. ஒவ்வொரு பெரிய கிராமங்களிலும் பஞ்சாயத்து போர்டு இருக்கிறது. இந்தப் பஞ்சாயத்து போர்டை நல்ல விதமாய் உபயோகப் படுத்தினால், நன்மை உண்மையாகவே பயக்கும். போர்டில் வேற்றுமை உண்டானாலோ, ஊரில் பிளவு உண்டாகும். இதனாலன்றோ பல விடங்களில் இத் தேர்தல்களில் போட்டிகளும் வளர்ந்துகொண்டு வருகின்றன. இவ் வாண்டில் கிராமங்கள்தோறும் பஞ்சாயத்து போர்டுத் தேர்தலில் என்ன கஷ்டம், என்ன சூழ்ச்சி, என்ன நஷ்டம்! நண்பர்களுக்கும் நண்பர்களுக்கும் பகை! புதிய கட்சிகள் தோற்றம்! விட்டுக்கொடுக்கும் சுபாவம் இருந்தால், இப்படி நேரிடாது தேர்தல்களில் ஒரு கொடிய தொத்துவியாதி வளர்ந்து கொண்டு வருகிறது. பஞ்சாயத்து போர்டுகளில் இனிமேலேனும் ஒத்துழைப்பையும் அன்பையும் வளர்ப்பார்களாக!

சென்னையில் தாகூர் கவிச் சக்கிரவர்த்தி

சென்னைக்குக் கவீந்திரர் ரவீந்திரர் சமீபத்தில் விஜயமான பொழுது, சென்னை வாசிகள் அவரை அன்புடன் வரவேற்றார்கள். எனினும் அவருக்குப் போதியபடி பணம் கொடுத்துச் சன்மானிக்க வில்லை அவரின் கலாபவனத்துச் சித்திரக் காட்சிகளைக்கூடச் சென்னைவாசிகளில் அநேகர் சென்று பார்க்கவில்லை யென்றும், அங்கிருந்த படங்களைச் சிலர்கூட விலைக்கு வாங்கவில்லை யென்றும் வருந்தி ஒரு தமிழ் நண்பர் கலாபவானிலிருந்து எமக்கு எழுதியிருக்கிறார். தமிழர்கள் நுண்மாண் கலைகளை (Fine arts)ப் பெரிதும் போற்றுதல் வேண்டும்; அவைகளை அவஸ்யம் ஆதரிக்க வேண்டும்.

பொச்சா கம்பெனியின் நூற்றாண்டு விழா

புனாவிலிருக்கும் விதை வியாபாரிகளான பெஸ்டோன்ஜி பொச்சாஜி பொச்சா அண்டு சன்ஸ் தங்களது நூற்றாண்டு வைபவத்தின் ஞாபகமாக ஒரு படப் புஸ்தகத்தை எமக்கு அனுப்பியிருக்கிறார்கள். படங்கள் நன்றாயிருக்கின்றன. தங்கள் சொந்த அச்சு இயந்திர சாலையிலேயே இதை அச்சிட்டிருக்கிறார்கள். அவர்களுடைய அச்

சுச்சாலையும் அதிக அபிவிருத்தி அடைந்திருக்கிறது. இந்தியாவில்
விதை வியாபாரிகளில் இவர்களுடைய அபார அபிவிருத்தியும் மேன்
மையும் போற்றத் தக்கது. தமிழ் நாட்டில் சேலத்தில் மூன்று பெரிய
விதை வியாபாரிகள் பிரபலமாயிருக்கிறார்கள். பொச்சா கம்பெனிக்
காரர்களது விதைகள் நன்றாய் முளைத்துப் பயிராகிப் பலன் கொடுக்
கின்றன. கவனத்துடன் தொழில் செய்து, இலாபத்துடன் இதில்
பிரசித்தி பெற்றிருக்கும் பொச்சா கம்பெனியைப் வாழ்த்துகிறோம்.

மாஜினியின் 'மனிதர் கடமை'

இதாலி தேசம் அரும் பெரும் இரண்டு தேசபக்தர்களை உண்
டாக்கியது. அவர்களில் முதன்மை பெற்றவர் மாஜினியே. செல்வ
மிழந்து, சுகமிழந்து, சுதந்திரமிழந்து, அடிமை வாழ்வு வாழ்ந்து
வந்தார்கள் இத்தாலியர்கள். அத் தருணத்தில் இவ் விடுதலை வீரர்
எழும்பித் தனது வீர கர்ஜனையால் இத்தாலியர்களுக்கு ஆவேசத்தை
ஊட்டினார். அவரது பேருள்ளத்திலிருந்து முளைத்தெழுந்த தேச
பக்திக் கொடியிலிருந்து மலர்ந்த புத்துணர்ச்சி, புதுச் செய்தி, சுதந்
திரம், சமத்துவம் என்னும் வாடா நறுமலர்கள் இதாலிய மாதின்
மணிமுடியை அழகு செய்துகொண் டிருக்கின்றன. அப் பெரியா
ரது "மனிதர் கடமை" யென்ற உயர் நூல் "பெ. தூரன்" என்பவ
ரால் மொழிபெயர்க்கப்பட்டு மாதந்தோறும் தொடர்ச்சியாகப்
"பாரதி"யில் வெளிவரும் இம் மதியிலும் வெளிவந்துளதைக்
காணலாம்.

நீண்ட கட்டுரைகள்—சிறு கதைகள்

நமது 'பாரதி'யில் சிற்சில போது கட்டுரைகள் நீண்டதாக
வந்துவிடுகின்ற வென்றும், அது போலவே சிறு கதையும் பெருங்
கதைபோல் பல பக்கங்களைக் கொண்டு விடுகின்றன வென்றும்,
அதன் பயனாக வாசகர்களுக்குச் சிரமமா யிருப்பதாகச் சுமத்தப்
பெறும் குற்றத்தை யேற்றுக் கொள்கின்றோம். கதையோ கட்டு
ரையோ பகுதிபகுதியாகப் பிரசுரிக்க முடியாதபோதே இவ்விதம்
ஓரேயடியாகப் பிரசுரிக்க வேண்டி யிருக்கிறது. அன்றியும் தொட
ரும், தொடரும் என்று வாசகர்களுக்கு ஏமாற்றத்தைக் கொடுக்க
விரும்பாததினால் ஒரே தரத்திலேயே பிரசுரம் செய்யவேண்டி யிருக்
கிறது. இச் சஞ்சிகையிற் கூடக் 'கதாசிரியன் காதல்' என்று ஓர்
சிறு கதை அதிகமான பக்கங்களைப் பெற்று விட்டது. இனிமேல்
இவ்விதமாக எந்தக் கட்டுரையும் கதையும் நீண்டதா யிருக்காது;
இருப்பினும் பகுதி பகுதியாக வெளியிடுவோ மென்பதை அறிவித்
துக் கொள்ளுகின்றோம்.

பொறுப்பாசிரியர் ரா. சுப்ரமண்யம் அவர்களால்,
தமது உத்தமபாளையம் ஆனந்தா பிரஸில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

7903

Cardamom Sale Company, Limited.

ஏலக்காய் விற்பனைக்-
-கம்பெனி, லிமிடெட்.,

தேவாரம்.

1913-ம் வருஷத்திய 7-வது இந்தியன் கம்பெனி ஆக்டுப்படி
ரிஜிஸ்டர் செய்யப் பெற்றது.

மூலதனம் ரூ. 2.10,000.

ஏல விவசாயிகளையே அங்கத்தினராகக் கொண்டது.
அங்கத்தினர்கள் ஏலத் தோட்டத்தில் விளையும் சரக்குகளை
வட இந்தியாவிலிருக்கும் பல முக்கிய பட்டணங்களுக்கு
அனுப்பியும், ஐரோப்பா அமெரிக்கா முதலிய அயல் நாடு
களுக்கு அனுப்பியும் விற்றுக் கொடுக்கிறோம்.

தங்கள் ஏல மகசூலை நல்ல விலைக்கு விற்க வேண்டுமா
னால், ஏல விவசாயிகள் தங்கள் சரக்குகளை எங்கள் மூலமாய்
விற்க வேண்டுகிறோம்.

O. R. கோண்டுலு செட்டியார்,
மானேஜிங் டைரக்டர்,
ஏலக்காய் விற்பனைக் கம்பெனி, லிமிடெட்,
தேவாரம்,
மதுரை ஜில்லா.